www.padippakam.com

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

පුදිය පූමි

Puthiya Poomi

சுற்று 10 | நவம்பர் 2003 | பக்கம் 12 | விலை 12/- | சுழற்சி 63

# புலிகளின் இடைக்கால நிர்வாகத் திட்டம் கையளிப்பு

வடக்கு கிழக்கு இடைக்கால நிர்வாக கட்டமைப்பு ஒன்றிற்கான யோசனைகளை அரசாங்கம் ஏற்கனவே புலிகள் இயக்கத்திற்கு முன்வைத்திருந்தது. அதனைப் பரிசீலித்த் புலிகள் இயக்கம் தமது சொந்த திட்டயோசனைகளை முன்வைக்க முன்வந்தது. அதன் காரணமாக உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் ஆலோசனைகள் நடாத்தி வடக்கு கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகத்திட்ட யோசனைகளைத் தற்போது அரசாங்கத்திற்கு கையளித்திருக்கிறது.

மேற்படி புலிகளின் திட்டயோசனைகளைப் பேச்சுவார்த்தைக்கு எடுத்துக் கொள்வது என்றும் அதற்கான ஆயத்தப் பேச்சுக்களில் ஈடுபடுவதென்றும் அரசாங்கம் முடிவுசெய்துள்ளது. இவ் ஆரம்பப் பேச்சுக்களில் பேச்சுவார்த்தைக்கான இடம் காலம் என்பனவற்றுடன் தனித்தரப்பாக முஸ்லீம் பிரதிநிதிகள் கலந்து கொள்வது பற்றியும் முடிவு செய்யப்படும் என்றும் அரசாங்கத்தரப்பில் கூறப்பட்டுள்ளது. அரசாங்கத்தில் மேற்படி முடிவு வரவேற்கப்பட வேண்டியதாகும்.

ஆனால் விடயங்கள் இலகுவானவைகளாக அமையமாட்டாது என்பதையே இடம்பெற்று வரும் நிகழ்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. புலிகள் இயக்கம் முதல் தடவையாகத் தமது திட்டயோசனைகளைத் தெரிவித்திருக்கின்றது. திம்புக் கோட்பாடுகள் என்ற நான்கு அம்சங்கள் முன்பு சகல தமிழ்த்தரப்பு இயக்கங்களாலும் கட்சிகளாலும் முன் வைக்கப்பட்டது. அதனை அன்றைய ஜே.ஆர் அரசாங்கம் நிராகரித்திருந்தது. அதன் பின்பு சமாதானம் கோரிய அரசாங்கங்கள் இனப்பிரச்சினைக்கான யோசனைகளை வெவ்வேறு பெயர்களில் முன்வைத்து வந்தன.

## அரசாங்கம் எந்தப் பாதையில் பயணிக்கப் போகிறது?



அவை எவையும் முழுமையானவையாகவோ தீர்வுக்கு உதவக் கூடியனவையாகவோ இருக்கவில்லை.

தமது தமிழீழக் கோரிக்கைக்கு பதிலாக பரிசீலிக்கப்படக் கூடிய மாற்று ஒன்று முன்வைக்கப்படுமானால் அதனைத் தாம் கவனித்தில் எடுக்கத்தயாராக இருப்பதாகவே புலிகள் இயக்கம் அண்மைய வருடங்களில் கூறி வந்தது. ஆனால் அப்படி ஒன்றும் ஆளும் அரசாங்கத்தரப்பில் இருந்து உருப்படியானதாக முன்வைக்கப் படவில்லை. சந்திரிகா அம்மையார் தலைமையிலான பொதுசன முன்னணி முன்வைத்த தீர்வுப்பொதி கூட அரைகுறையானதும் பின்பு வெட்டிக் குறைக்கப்பட்டதுமாகும்.

இப்பொழுது புலிகள் முன் வைத்துள்ள இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கான திட்டவரைபு யோசனைகளானது அடிப்படையில் வடக்கு கிழக்கிற்கான சுயாட்சியை நிலை நிறுத்தக் கூடிய அம்சங்களையே கொண்டிருக்கின்றது. இதில் இறுதி அரசியல் தீர்வில் இடம் பெற வேண்டிய முக்கிய விடயங்கள் உள்ளடங்கியிருக்கின்றன என்பது காணக்கூடியவைகளேயாகும். இவை பற்றி விரிவான விளக்கங்களும் நோக்குகளும் இனிமேல் தான் ஆராயப்படவேண்டியவைகளாகும்.

ஆனால் இத்தகைய இடைக்கால நிர்வாக யோசனைகளுக்கு அரசாங்கம் எவ்வாறு இணக்கம் காணப்போகின்றது என்பதே எழுந்து நிற்கும் கேள்வியாகும். அரசாங்கம் தனது சொந்த ஆளும் பேரினவாத நிலைப்பாட்டைக் கைவிடவில்லை. அடுத்த ஜனாதிபதியாவதும் அரசாங்கத்தில் அறுதிப் பெரும்பான்மைப்பலம் பெறுவதும் ரணில் ஆட்சியின் இலக்காக இருந்து வருகின்றது. அதேவேளை ஜே.வி.பி - சிஹல உறுமய என்பனவும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் பேரினவாதக் கூச்சல் கிளப்பி வருகின்றன. அத்துடன் ஜனாதிபதி தனது உச்ச அதிகாரத்தைப் பயன்படுத்தி ரணில் அரசாங்கத்தைக் கலைக்க நிற்கின்றார்.

மறுபுறத்தில் அரசாங்கம் சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெறுவதில் மிக வேகமாகச் செயல்பட்டு தாராளமயம் தனியார் மயம் உலகமயமாதல் என்பவற்றுக்கு நாட்டையும் வளங்களையும் தாரைவார்த்து வருகின்றது. அதன் ஊடே அமெரிக்கா இந்தியா உள்ளிட்ட நாடுகளில் இருந்துபெரும் ராணுவ



ஆலோசனைகள் ஆயுதங்கள் தளபாடங்களைக் கொள்வனவு செய்தும் வருகின்றது. இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் தயாராகி வருகிறது. அதன்பின் ஏற்கனவே கையெழுத்துப் போடும் நிலைக்கு உருவாக்கப்பட்ட அமெரிக்காவுடனான பாதுகாப்பு ஒப்பந்தம் முடிவாக்கப்படும்.

இவற்றையெல்லாம் ஆழ்ந்து நோக்கும் போது அரசாங்கம் புலிகள் இயக்கத்துடன் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு விடயத்தில் இணைக்கப்பாட்டிற்கு வந்து கொள்ளுமா? அல்லது மீண்டும் யுத்தப்பாதையில் செல்லுமா என்பதற்கு உடனடியாக

தொடர்ச்சி 12ம் பக்கம்..

# இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம்
## இலங்கையின் இறைமை விற்கப்படுகிறது!

அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இரண்டு நாள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு புதுடில்லிக்குச் சென்றிருந்தார். அவருடன் முக்கிய முடிவுகளை மேற்கொள்ளும் அமைச்சர் மிலிந்த மொறகொடவும் ஏனைய உயர் அதிகாரிகளும் சென்றனர். அங்கு இந்தியப் பிரதமர், துணைப்பிரதமர், வெளிநாட்டு அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருடன் மிக நெருக்கமான பேச்சுவார்த்தைகளில் பிரதமர் ரணில் ஈடுபட்டார். மேற்படி உத்தியோகபூர்வப் பயணம் புலிகள் இயக்கம் தமது இடைக்கால நிர்வாக கட்டமைப்பு பற்றிய திட்டவரைபு யோசனைகளை அரசாங்கத்திற்கு கையளிப்பதற்கு பத்துநாட்கள் முன்னதாகவே இடம் பெற்றமை குறிப்பிடத் தக்கதாகும். எனவே இடம்பெறப் போகும் அரசாங்கம் புலிகள் பேச்சுவார்த்தை இடைக்கால நிர்வாகம் ஆகியவிடயங்கள் மிக நெருக்கமாகப் புதுடில்லியில் பேசப்பட்டிருக்கிறது என்பதில் சந்தேகம் இருக்கமுடியாது.

இதன் விளைவானதே இந்தியாவுடன் செய்யப்படவுள்ள பாதுகாப்பு ஒப்பந்தம் ஆகும். இப் பாதுகாப்பு ஒப்பந்தம் எதற்காகச் செய்யப்படப் போகின்றது என்பதே முக்கியமானதாகும். இவ் ஒப்பந்தம் இலங்கையின் இறமை சுதந்திரம் சுயாதிபத்தியத்திற்கு பெரும் ஆபத்தை விளைவிக்கும் என்பதில் ஐயமில்லை. இதற்கான முன் அனுபவத்தை இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் போது வடக்கு கிழக்கில் காண முடிந்தது. புலிகள் இயக்கத்தை அடக்குகின்றோம் என்ற ராணுவ ரீதியில் நிர்வாக வழிகளில் இலங்கையின் இறைமை சுதந்திரத்தை உதாசீனம் செய்வதாகவே அமைந்து கொண்டது.

எனவே இப்பொழுது உருவாக்கப்படும் பாதுகாப்பு ஒப்பந்தமும் விடுதலைப் புலிகளைக் குறிவைத்தே அமையப் போகிறது. அதன் ஊடாக இந்திய ராணுவமேலாதிக்கம் இலங்கை மீது இறுக்கப்படப் போகின்றது. ஏற்கனவே இலங்கை இந்திய வர்த்தக ஒப்பந்தம் முற்றுமுழுதாக இந்திய நலன்களுக்கான தாகவே செய்யப்பட்டது. இந்தியக் கம்பனிகளும்

தொடர்ச்சி 12ம் பக்கம்



இலங்கை இந்தியாவுடன் செய்துகொள்ளவுள்ள பாதுகாப்பு ஒப்பந்தத்துக்கு முன்னோடி ஒத்திகையாக இந்தியாவின் தென்பிராந்திய தளபதி இலங்கை தளபதியை சந்தித்தாரா?

# முஸ்லிம் தனித்தரப்புக் கோரிக்கை நியாயமானது!
## தமிழ் முஸ்லிம் ஐக்கியம் உடைக்கப்படக்கூடாது.



ஐ.தே.மு. க்கும் புலிகள் இயக்கத்துக்கு மிடையிலான சமாதானப் பேச்சு வார்த்தைகளில் முஸ்லிம் தரப்பு தனித் தரப்பாக கலந்துகொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தி கடந்தமாதம் 21ம் திகதி பாராளுமன்றத்தில் சபை ஒத்தி வைப்பு வேளையில் விவாதம் நடை பெற்றது. அவ்விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய நிதி அமைச்சர் லொக்குபண்டார சமாதான பேச்சு வார்த்தைகளில் முஸ்லிம் பிரதிநிதிகள் தனித்தரப்பாகக் கலந்து கொள்வதற்கு ஐ.தே.மு. அரசாங்கம் சம்மதம் தெரிவித் துள்ளது என்று குறிப்பிட்டார். யூன் மாதம் டோக்கியோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹ பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக கலந்து கொள்ளலாம் என்று கூறுயிருந்ததை அவர் நினைவுபடுத்திப் பேசினார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு இறுதி அரசியல்தீர்வு காணப்படும்போதும் இடைக்கால நிர்வாகசபை ஏற்படுத்தப் படும்போதும் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் கவனத்தில் எடுத்து அவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப் படுவதுடன் அவர்களின் தேசிய அபிலாஷைகளும் உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் எல்லோரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆனால் சில முஸ்லிம் அரசியல் தலைமைகள்

தொடர்ச்சி 12ம் பக்கம்

# தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்குமா?

சம்பள உயர்வுக் கோரிக்கை நாளாந்தம் வேலைநிறுத்தங்களால் பகிஷ்கரிப்புகள். மறியல் போராட்டங்களால் வற்புறுத்தப் படுகின்றது. எனவே எதிர்வரும் வரவு செலவுத்திட்டத்தில் சம்பள உயர்வு கட்டாயம் வழங்கப்படும் என அரச தரப்பில் கூறப்படுகின்றது. அச்சம்பள உயர்வு வாழ்க்கைச் செலவை ஈடு செய்யுமா என்பது கேள்விக்குறியானதாகும்.

ஆனால் இச்சம்பள உயர்வு மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு சென்றடையுமா ? ஏற்கவே வழங்கப்பட்ட சம்பள உயர்வுகள் தோட்டத் தொழிலாளர்களுக்கு மறுக்கப்பட்டே வந்துள்ளது. போராட்டங்கள் நடாத்தப்பட்டும் கிடைக்கவில்லை. கம்பனிகள் கட்டாயம் சம்பள உயர்வை தோட்டத் தொழிலாளர களுக்கு வழங்க வேண்டும் என ஒருபோதும் அரசாங்கம் வற்புறுத்தியது கிடையாது. தோட்ட முதலாளிகளின் பக்கம் அரசாங்கம் இருப்பதால் எப்படி வற்புறுத்த முடியும்.

ஏற்கனவே தோட்டக் கம்பனிகளுடன் தொழிற்சங்கத் தலைமைகள் சம்பள உயர்வைக் காட்டிக் கொடுத்து துரோக ஒப்பந்தம் செய்துள்ளன. அத்தகைய தலைமைகள் அரசாங்கத்துடன் இருப்பதால் எதிர்வரும் சம்பள உயர்வை தோட்டத் தொழிலாளர்களுக்கும் வழங்கும்படி எப்படி வற்புறுத்த முடியும். எனவே தோட்டத் தொழிலாளர்கள் தங்களைப் பற்றியும் தங்களது தொழிற்சங்க பாராளுமன்றத் தலைமைகள் பற்றியும் சிந்திப்பது அவசியம்.

படிப்பகம்

www.padippakam.com



# அன்று தொண்டமான் இன்று மனோகணேசன்

கடந்த மாதம் 7ம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரஜா உரிமை திருத்தச்சட்டத்தின் மூலம் மலையகத்தமிழ் மக்களின் பிரஜா உரிமைப் பிரச்சினைக்கு சட்டரீதியாக இங்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

அச்சட்டம் நிறைவேற்றப்படும் போது கொழும்பு மாவட்ட ஐக்கிய தேசிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் பாராளுமன்றத்தில் இருக்கவில்லை. அவர் மலேசியாவுக்கு சென்றிருந்ததாகத் தெரியவருகிறது. அவரின் பயணம் அரசாங்கத்தின் ஏற்பாட்டினால் ஒழுங்கு செய்யப்பட்டதாக சிலரும், அவரின் பயணம் தனிப்பட்டது என்று வேறு சிலரும் கூறுகின்றனர்.

எது எவ்வாறிருந்த போதும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சட்டமூலமொன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் போது அவர் பாராளுமன்றத்தில் இருக்க வில்லை. அதைவிட அவருக்கு வேறு முக்கிய பணி இருந்திருக்க முடியாது.

அவர் அன்றைய தினம் -பாராளுமன்றத்திற்கு சமூகமளிக்காதிருந்தமையை விமர்சித்து தலை நகரமெங்கும் போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தன. அவற்றை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் செய்திருக்கலாம் என்றும் ஐக்கிய தேசிய முன்னணியின் தேசியப்பட்டியல் உறுப்பினர் இராதாகிருஷ்ணன் செய்திருக்கலாம் என்றும் பேசப்படுகிறது.

இவ்வேளை 1986ம் ஆண்டு நாடற்றவர்களுக்கு பிரஜா உரிமை வழங்கும் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட போது அன்று பாராளுமன்ற உறுப்பினராகவும் அமைச்சருமாகவும் இருந்த சௌமியமூர்த்தி தொண்டமானும் பாராளுமன்றத்தில் இருக்கவில்லை என்பது குறிப்பிடப்பட வேண்டியதாகிறது. மலையகத்தமிழருக்காக பிரஜா உரிமையை தானே பெற்றுக் கொடுத்ததாக அவரும் கூறினார். சிலர் எழுதினர். இன்று பலர் எழுதுகின்றனர் கடந்த மாதம் 7ம் திகதி பாராளுமன்றத்தில் பிரஜா உரிமை திருத்தச் சட்டமொன்று நிறைவேற்றப்பட்ட போது. தொண்டமானின் கனவு நனவாகிவிட்டதாகவும் தொண்டமான் இன்றிருந்தால் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருப்பார் என்றும் சில பத்திரிகைகள் எழுதுகின்றன.

1948ம் ஆண்டு பிரஜா உரிமைச் சட்டம் 1949 இந்திய பாகிஸ்தானியருக்கு பிரஜா உரிமை வழங்கும் சட்டம் என்பன நிறைவேற்றப்பட்ட போதும் 1964 சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட போதும் சரியான அரசியல் முடிவை எடுக்காததற்கும் சரியான அரசியல் நடவடிக்கை எடுக்காததிற்கும் தொண்டமான் பொறுப்புடையவர் . சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தத்திற்கு இணங்க பெரும் எண்ணிக்கையான மலையகத் தமிழ் மக்கள் அவர்களின் விருப்பத்திற்கு மாறாகவே இந்தியாவுக்கு அனுப்பப்பட்டனர். அவற்றையெல்லாம் ஏற்றுக் கொண்டதன் மூலம் தொண்டமான் பாரிய அரசியல் தவறுகளை இழைத்தவராவர்.

1986ம் ஆண்டு நாடற்றவர்களுக்கு பிரஜா உரிமை வழங்கும் சட்டம் நிறைவேற்றப்பட்ட போது பாராளுமன்றத்தில் இருக்கவில்லை. தனிப்பட்ட காரணத்திற்காக இந்தியாவில் இருந்தார். சுகவீனமாகி இருக்கவில்லை. அன்று அச்சட்டம் ஒரு வாக்கில்லாமல் தோல்வியடைந்திருந்தால் நிலைமை என்னவாக இருந்திருக்கும்.

அதேபோன்றே கடந்தமாதம் 7ம் திகதி பிரஜா உரிமை சட்டம் பாராளுமன்றத்தில் ஒரு வாக்கில்லாமல் தோல்வியடைந் திருந்தால் நிலைமை என்னவாக இருந்திருக்கும்.

சில வருடங்களுக்கு முன்பு வரவு செலவு திட்ட விவாதத்தின் போது தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சிற்கான நிதி ஒதுக்கீடு மீதான வாக்களிப்பு நடத்தப்பட்ட வேளை மலையக எம். பிக்களுடன் ஆளும் கட்சியினரும் சபையில் இல்லாததால் அவ்வொதுக்கீடு தோல்வி அடைந்தது. அதனால் அவ்வருடம் அமைச்சிற்கு நிதி ஒதுக்கப்படவில்லை.

எனவே இவ்வாறான முக்கியமான விடயங்கள் பாராளுமன்றத்தில் வரும் போது உறுப்பினர்கள் இல்லாமல் இருப்பது எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. அவ்வாறு இல்லாதிருப்பது முக்கிய அரசியல் கடமையை மீறியதுமாகும்.

வாக்குகளையும், சொந்த இருப்பையும் மட்டும் கணக்கில் வைத்து செயற்படுபவர்கள் பாராளுமன்றத்தை அலங்கரிக்கலாம். மக்களுக்கு சேவை செய்ய முடியாது. வெறுமனே விளம்பர அரசியலினால் மட்டும் பாராளுமன்றம் செல்வதும் அதனைக் காட்டித் தமது சொந்த நலன்களை மேம்படுத்துவதும் தான் பாராளுமன்ற அரசியலாகும் என்பதை மக்கள் உணரவேண்டும்.

ஏ.கே.ரீ.செல்வம் – கொழும்பு.

# வடபுல ராணுவ வாகன மோதல் விபத்துக்கள் அல்ல!

அண்மைய வாரங்களில் வடபுலத்தில் ராணுவ வாகன மோதல்களால் பொதுமக்கள் விபத்துகளுக்கு உள்ளாகி மரணமடைந்தும் படுகாயங்கள் அடைந்தும் உள்ளனர். அதன் காரணமாக மக்கள் ஆத்திரமடைந்து ராணுவத்தினருடன் கைகலப்பில் ஈடுபடவும் நேர்ந்துள்ளது. அடுத்தடுத்து நடைபெற்று வரும் இவ் ராணுவ வாகன விபத்துக்களை வெறுமனே விபத்து என்ற வகைக்குள் சேர்த்துவிட முடியாது. இவை ஒருவகைப்பேரின வாத ராணுவ அகங்காரத்துடனேயே நடை பெறுகின்றன என்றே கூறுதல் வேண்டும். "நாங்கள் ராணுவம் அல்லது ஆயுதப்படையினர். இப்பிரதேசம் எமது கட்டுப்பாட்டிற்கு உட்பட்டது. இங்கே நாங்கள் தான் அதிகாரத்துவம் கொண்டவர்கள். எங்களை யாரும் தட்டிக் கேட்க இயலாது. முன்பு கேள்வி நியாயம் இன்றிச் சுட்டோம் குண்டுகள் போட்டோம். இப்போது வாகனங்களால் மோதுகின்றோம். சாகிறவர்கள் சாகட்டும் தப்பிப் பிழைப்போர் தப்பட்டும். இங்கே எங்களைக் கேட்டுத்தான் எல்லாமே இடம் பெறல் வேண்டும் ". இத்தகை ஆளும் பேரின வாத ராணுவ அகங்காரத்துடனேயே மேற்படி ராணுவ வாகன மோதல் விபத்துகள் இடம் பெறுகின்றன.

இதற்கு அப்பால் ராணுவச் சாரதிக ளுக்கு முறையான பயிற்சி இல்லை, வாகனங்கள் மிகப் பழையன. சன நெருசல் கூடிவிட்டது, வீதிகள் அகலம் காணாது. வீதி ஒழுங்குகளை மக்கள் கவனிப்ப தில்லை என்றவாறான கதைகள் இரண்டாம் மூன்றாம் பட்சமானவைகளாகும். ராணுவம் என்பது மக்களை அடக்குவதற்கான அரசு யந்திரத்தின் ஒருபகுதி என்பதும் அது வடபுலத்தில் பேரினவாத அகங்கார வெறியுடன் இருந்து வருகின்றது என்பதையும் விளங்கிக் கொள்ளல் வேண்டும். எனவே மக்கள் நடமாட்டப் பகுதிகளில் இருந்து ராணுவச் செயற் பாடுகளும் இல்லாத போனால் மட்டுமே இவ் ராணுவ வாகன மோதல் விபத்துக் களை இல்லாது ஒழித்து விட முடியும்.

# பொலீஸ் அதிபர் பதவி நீடிப்பு மறுக்கப்பட்டது ஏன்?

அண்மையில் அறுபது வயதைப் பூர்த்தி அடைந்த பொலிஸ் மாஅதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா பதவி நீடிப்பு வழங்கப் படாத நிலையில் இளைப்பாறிக் கொண்டார். மேலும் ஒரு வருடத்திற்கு அவருக்கு பதவி நீடிப்பு வழங்கப்படும் என எதிர் பார்க்கப்பட்டது. ஜனாதிபதியே அதனை வழங்க வேண்டும். உள்துறை அமைச்சர் அதற்கு சிபார்சு செய்தும் எதிர்பார்த்த பதவி நீடிப்பு வழங்கப்படவில்லை. தமிழர் என்பதை விட ஆனந்தராஜா ஆளும் ஐக்கிய தேசியக்கட்சியின் விசுவாசி என்பதாலேயே அவருக்கு பதவி நீடிப்பு வழங்கப் படவில்லை என்றும் பேசப்படு கின்றது.

அதேவேளை அவர் தமிழர் என்ற காரணத்தால் இனவாத அடிப்படையில் தான் பதவி நீடிப்பு மறுக்கப்பட்டது என்பது தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாடாக உள்ளது. ஏற்கனவே சிஹல உறுமய ஜே.வி.பி பதவி நீடிப்பை எதிர்த்ததையும் தமிழ்க்கட்சிகள் சுட்டிக்காட்டி நிற்கின்றன. ஆனால் தமிழர் என்றும் பாராமல் தரம் தகுதி அடிப்படையிலேயே ஒருவருடம் முன்பாக ஆனந்தராஜாவிற்கு பொலீஸ்மா அதிபர் பதவி வழங்கப் பட்டதை ஜனாதிபதி செயலகம் சுட்டிக்காட்டி நியாயம் கூறியுள்ளது. எவ்வாறாயினும் யூ.என்.பி விரோதமும் பேரினவாதக் கண்ணோட்டமும் இணைந்தே பதவி நீடிப்பு மறுக்கப்பட்டது என்பதே உண்மையாகும்.

இவற்றுக்கும் மேலாக பொலீஸ் மாஅதிபர் பதவி என்பது முழு மக்களையும் அடக்கிஒடுக்கி வைத்திருப் பதற்கான அரசு யந்திரத்தின் ஒரு பிரதான பகுதியின் ஆணையிடும் பதவியாகும். இதில் தமிழரோ சிங்களவரோ முஸ்லிமோ என்பது பிரச்சினையல்ல. நிலவுடமை முதலாளித்துவ மேட்டுக்குடி உயர்வர்க்கத்தைப் பாதுகாக்கும் காவல் நாய் வேலையைச் செய்வதே பொலீஸ் படையின் சாராம்சமாகும். அதில் தமிழர் ஒருவர் இருப்பதால் சாதாரண தமிழருக்கு எவ்வித பயனும் கிடைக்காது. ஏற்கனவேயும் அப்பதவியில் தமிழர் சிலர் இருந்திருக்கிறார்கள். இப்பதவியில் உள்ள தமிழ் பொலீஸ் மாஅதிபர்கள் மேட்டுக்குடி முதலாளித்துவ தமிழர்களுக்கு உதவி இருக்கலாம். ஆனால் உழைக்கும் மக்கள் அவர்கள் எவராக இருப்பினும் பொலீஸ் படையும் அதன் மா அதிபரும் அடக்கு முறையாளர்களாகவே இருந்து கொள்வர் என்பதே உண்மை. எனவே அடக்கு முறைக்கான பதவியும் அதிகாரமும் ஆயுதங்களும் எந்த இனத்தவர் கைகளில் இருந்தாலும் அந்த இனத்தின் சாதாரண மக்களுக்கு எவ்வித பயனையும் தரமாட்டாது. ஆனந்தராஜா விவகாரமும் இதற்கமைவானதேயாகும்.


புதிய பூமி வட புலத்தில்
ஏக விநியோகம் விற்பனை
**வசந்தம் புத்தக நிலையம்**
405, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**புதிய பூமியின் வளர்ச்சிக்கு**

- நிதி உதவுங்கள்
- சந்தா அனுப்புங்கள்
- விற்பனைப் பணத்தை அனுப்பிவையுங்கள்
- கட்டுரைகள் – செய்திகள் – கருத்துக்கள் அனுப்புங்கள்

ஆசிரிய பீடம் / நிர்வாக பீடம் :
S-47, 3வது தளம். கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
(C.C.S.M. Complex) கொழும்பு – 11, இலங்கை.
Tel: 2435117, 2335844 Fax : 01-2473757
E-mail : puthiyapoomi@hotmail.com

பணம் அனுப்பும் வங்கி விபரம் : சோ. தேவராஜா
கணக்கு இலக்கம் : 0672-21-2002634-6
Bank of Ceylon, Central Super Market, Colombo 11.


# நாலு நடக்கும் நற்குணம் உலகிலே

## விடிவும் விழலும்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் வானொலியின் "நாள் மகிழ் அரங்கம்" என்ற காலை நிகழ்ச்சி அலுப்புத் தட்டத் தொடங்கியபோது சிங்கள வானொலியின் "சுபாரதி" போல ஒரு நிகழ்ச்சியாக விடியும் வேளை என்ற பேரிற் புனரமைக்கப்பட்டுக் கூடிய நேரம் ஒதுக்கப்பட்டுப் புத்துணர்வுடன் வழங்கப்பட்டது. என்றாலும் ஓரிரு மாதங்களுக்குள்ளேயே அது தமிழ், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களது நிகழ்ச்சியோ என்று எண்ணுமளவுக்கு மாறிவிட்டது. நமது பாராளுமன்ற உறுப்பினர்களால் மணித்தியாலக் கணக்காக ஒரு விடயமும் இல்லாமலே பேச முடியும் என்பது நாடறிந்த விடயம். எழுத நிறைய இடமுள்ள நாளேடுகளிற் கூட இவர்கட்கு இவ்வளவு இடம் ஒதுக்கபடுவது இல்லை. எந்த ஒரு கேள்விக்கும் நேராகப் பதில் சொல்லாமல் சுற்றி வளைத்துப் பேசுவதற்கான ஒரு போட்டி போலவே விடியும் வேளை மாறும் அபாயம் உள்ளது. நிகழ்ச்சிக்குப் பொறுப்பானவர் தயவு செய்து தமிழ், முஸ்லிம், மலையக மக்களது பல்வேறு பிரச்சினைகள் பற்றி மேலும் விரிவான பார்வைகட்கும் பரவலான பங்குபற்றுதலுக்கும் இடமளித்து விடியும் வேளைக்கு மீள உயிரூட்டுவார்களா?

## கார்த்திகேசனும் கம்யூனிசமும்

கார்த்திகேசன் என்ற கம்யூனிஸ்ற்றை மறக்கடித்து கார்த்திகேசன் என்ற ஒரு கல்விமானை மட்டுமே நினைவிலிருத்துவது அவருக்கு நினைவுக் கூட்டம் நடத்திய முன்னாள் கம்யூனிஸ்டுக்களுக்கு அவசியமானதுதான். கார்த்திகேசனைத் தங்களுள் ஒருவராக்குவதன் மூலம் தங்களுக்கு மரியாதை தேடுவது தான் இவர்களது தேவை.

இவர்கள் நடத்திய நினைவுக்கூட்டத்திற் பேசியவர்களில் பேராசிரியர் தில்லைநாதனை விட யாருமே கார்த்திகேசன் ஒரு கம்யூனிஸ்ற் இயக்க முன்னோடியும் தளராத போராளியும் என்பதைச் சொல்லவே துணியவில்லை.

உருப்படியாக எதையோ எதிர்பார்த்து அங்கு போன பழைய இடதுசாரிகள் பலரும் இப்படியும் ஒரு அவமரியாதையா என்று அலுத்துக்கொண்டார்கள். ஏறத்தாழ இதே கும்பல் தான் போன வருடம் கார்த்திகேசன் நினைவாக ஒரு கோமாளிக்கூட்டத்தை நடத்தியது என்பதை அவர்கள் அறிந்திருக்க மாட்டார்கள்.

## ஜே. வி. பியின் கிளிப்பிள்ளை

ராமலிங்கம் சந்திரசேகரன் ஜே.வி.பியின் புண்ணியத்தில் பாராளுமன்ற உறுப்பினர். எனவே அதன் இனவாதத்துக்குச் சப்பைக்கட்டுக் கட்டுவதில் அவருக்கு மிகுந்த கடமை உணர்வு உண்டு. விடியும் வேளையில் சிரிப்புக்குரிய அரசியல் உளறல்கட்காகவே அடிக்கடி அவரை அழைப்பது போல தெரிகிறது.

மலையக தமிழ் மக்களுடைய வாக்குரிமையைப் பெறுவதற்கு ஆதரவு தந்தது போல இலங்கைத் தமிழருக்கு இடைக்கால நிர்வாகத்துக்கு ஆதரவு தர ஏன் ஜே.வி.பி மறுக்கிறது என்ற கேள்விக்கு அவரது பதில் பலரைச் சிரிக்க வைத்தது. மலையக மக்களது பிரச்சினைக்கான தீர்வு போல் தமிழ் மக்களது பிரச்சினைக்கும் ஒரு தீர்வு என்றால் ஆதரிப்பதில் பிரச்சினை இல்லை என்று அவர் சொன்னார். அப்படியானால் இலங்கைத் தமிழருக்கும் பிரசா உரிமையைப் பறித்திருந்தால் ஜே.வி.பி அவர்களுக்கு ஐம்பது வருடம் கழித்து வாக்குரிமை வழங்க ஆதரவளித்திருக்கும் என்பது தான் அவரது விளக்கமா?

சமஷ்டி என்றாலே பிரிவினை என்று மட்டுமல்லாமல் இடைக்கால நிருவாகமும் பிரிவினைக்கு உரிய முயற்சி என்று நம்புகிற அறிஞர்களது கட்சி அல்லவா அவருடைய எசமான்களின் கட்சி! சந்திரசேகரனால் ஜே.வி.பி தலைவர்களது பொய்களைத் திரும்பத் திரும்பச் சொல்வதைத் தவிர வேறெதுவும் சொல்ல இயலுவதாகத் தெரியவில்லை அவரால் இயலவும் மாட்டாது. பாவம் அந்த அப்பாவிப் பாராளுமன்ற உறுப்பினர்.

## தாத்தாவும் பேரனும்

ஜீ.ஜி. பொன்னம்பலம் மலையக மக்களின் வாக்குரிமையைப் பறிக்க உதவில்லை என்று பேரன் கஜேந்திரகுமார் அறிக்கை விட்டுள்ளார். அந்த வாக்குரிமைப் பறிப்புச் சட்டத்துக்கு அவர் பாராளுமன்றத்தில் கை உயர்த்தாது போனாலும், அவரது ஒத்துழைப்பு இருந்தது என்பது பலரும் இன்று வரை முன்வைக்கிற குற்றச்சாட்டு. தமிழரசுக்கட்சியின் உருவாக்கமே இப்பிரச்சினையின் விளைவானது. வாக்குரிமையைப் பறித்த அரசில் அவர் அமைச்சர் பதவி ஏற்பதற்கு வாக்குரிமை பறிக்கப்பட்டுச் சில மாதங்களே எடுத்தது. எஎன்ன நல்ல நோக்கத்துக்காக அவர் அமைச்சரானார்? என்ன உதவிக்காக அவருக்குப் பதவி வழங்கப்பட்டது? சொல்லுவாரா பேரனார்?

## சம்பந்தர் புராணம்

திருகோணமலைப் பகுதியில் அமைந்துள்ள எண்ணெய்க் குதங்களைத் தில்லியம்பதியில் திருவீற்றிருக்கும் பெரிய பெருமானர்களுக்கு அர்ப்பணிப்பதில் அரும்பணி ஆற்றியதாகக் கதிர்காமப் பெருமான் தில்லிக்குக் காவடி எடுத்துப் போய்ச் சொல்லியவை யாவும் உண்மைக்குப் புறப்பானவை என்றும் நாடகத்தால் மெய்யடியார் போல் நடிக்கும் அன்னாருக்கும் இருபது ஆண்டுகள் முன்னமே திருகோணமலை எண்ணெய்க் குதங்களை அமெரிக்கர் களவு செய்யாது தடுக்க இந்திய எசமானர்கள் காளவாட வசதி செய்தது தமது கட்சியினரே என்று தனது பக்தி விசுவாசத்தைப் பாராளுமன்றத்தில் பாடியருளியுள்ளார்.

இலங்கை வாழ் தமிழர்கள் எப்போதுமே இந்தியாவின் தாசர்கள் என்ற தனது எண்ணத்தையும் அன்னார் கூறியருளியுள்ளார். அன்னார் மறந்தாலும் 1987 முதல் 1989 வரையிலானஆண்டுகளை எவ்வாறு தமிழர் மறப்பர், தமிழ் மக்களது பிரதிநிதிகள் எனப்படுவோர் இந்தியாவின் தாசர்களாக இருக்க நிறைய நியாயம் உண்டு என்பதையும் தமிழ் மக்கள் எவ்வாறு மறப்பர்?

## சேவல் முட்டைச் செய்திகள்

பொதுசன முன்னணியுடன் கூட்டு அமைத்த பிறகு ஜே.வி.பி. விடுதலைப் புலிகளுடன் பேசும் என்று ஒரு பரபரப்புச் செய்தி ஒக்ற்றோபர் மாத முற்பகுதியில் ஒரு பிரபல தமிழ் நாளேட்டில் வெளியானது. ஆனால் வேறு எங்குமே அச்செய்தி வெளியாகவில்லை. அதன் பின் அக்கதையே மறந்து போய்விட்டது. பத்திரிகைகள் தமது விற்பனையைப் பெருக்க இப்படிப்பட்ட பரபரப்புச் செய்திகளை வெளியிடலாம். ஆனால் அது அவர்களது நம்பகத்தன்மைக்கு மிகவும் தீங்கானது. அதைவிட முக்கியமாக மக்கள் மனதில் வீண் குழப்பங்களை விளைவிப்பதற்கே அது உதவும்.

எந்தச் செய்தியும் யார் வாயிலாக வந்தது என்பதையும் எப்போது சொல்லப்பட்டது என்பதையும் தகவல் தந்தவர் யார் என்பதையுமாவது அறியத்தந்தால் வாசகர்கட்கு உதவியாயிருக்கும்.

படிப்பகம்

www.padippakam.com



# கொழும்புத் தமிழ் எம்.பி.மார் குடுமிப்பிடி சண்டை

இவர்கள் இருவரில் யார் கொழும்பு மாவட்ட தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதி என்பதற்கான போட்டா போட்டி நடைபெறுகிறது. மக்கள் ஜனநாயகத்தை ஏற்றுக் கொள்பவர்கள் ஏகப்பிரதிநிதித்துவம் பற்றி சிந்திக்கவே கூடாது.

கொழும்பு மாவட்ட மக்களின் வாக்குகளால் நேரடியாக தெரிவு செய்யப்பட்ட எம். பி என்பதால் தனக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து தானே மக்களுக்கு கிள்ளி கொடுக்க வேண்டும் என்று மனோ கணேசன் எண்ணுகிறார். தேசியப் பட்டியலில் தெரிவு செய்யப்பட்டவர்களான இராதாகிருஷ்ணன், யோகராஜன் ஆகியோர் வேறு மாவட்டங்களிலும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை செலவிட முடியும் என்பதால் அவர்கள் கொழும்பு மாவட்டத்தில் செலவிட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது என்று அவர் கூறுகிறார்.

அவர் இராதாகிருஷ்ணனுக்கு எதிராகவே அதிகமாக அறிக்கைகளை விட்டுவருகிறார். இராதாகிருஷ்ணனும் மனோ கணேசனுக்கு எதிராக அறிக்கை விடுகிறார். கொழும்பு மாவட்ட தமிழ் மக்களின் பலம் பொருந்திய கட்சி மலையக மக்கள் முன்னணி என்றும் தான் கொழும்பு மாவட்ட மக்களுக்கான எம். பி என்றும் அவர் கூறுகிறார்.

கொழும்பு மாவட்ட சேரிப்புறங்களில் வாழும் மக்களுக்கு தமது நிதி ஒதுக்கீட்டிலிருந்து சிறிதளவை கிள்ளிக் கொடுத்துவிட்டு பெருமிதம் பேசி கொழும்பு மாவட்டத்தில் தங்களது வாக்கு அரசியலை நிலைநிறுத்திக் கொள்ள இருவரும் போட்டா போட்டியுடன் செயற்படுகின்றனர். சலுகைகளை கொடுத்து வாக்குப்பலத்தை பெருக்கிக் கொள்வதே அவர்களின் அரசியல்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படும் நிதி இதுவரை சென்றடையாத கொழும்பு சேரிப்புறங்களில் வாழும் தமிழ் மக்களை சென்றடைய வேண்டும் என்பது சரியான ஒன்றேயாகும்.

ஆனால் அந்நிதி ஒதுக்கீட்டுடன் திருப்தியடைய வைக்கும் அரசியலும் அதை வைத்துக் கொண்டு கொழும்பு மாவட்டத்தை ஏகபோகமாக்கிக் கொள்ள எடுக்கப்படும் நடவடிக்கைகளும் ஏற்றுக் கொள்ளக் கூடியவை அல்ல.


தன்னைத் தவிர மக்களுக்கு சலுகைகளை வேறு யாரும் வழங்கினால் தனது எதிர்கால வெற்றி பாதிக்கப்படும் என்று மனோ கணேசன் பயப்படுகிறார். அதனால் தேசியப்பட்டியல் எம்.பிக்களான இராதாகிருஷ்ணனையும் யோகராஜனையும் நிராகரிக்கிறார். அத்தேசியப் பட்டியல் எம். பிக்களோ எதிர்வரும் தேர்தல்களில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவதை இலக்கு வைத்தே செயற்படுகின்றனர்.

இவ்வாறு கொழும்பு மாவட்ட தமிழ்ப் பிரதிநிதித்துவம் படும்பாடு பற்றிச் சிந்திக்கையில் அழுவதா? அல்லது சிரிப்பதா ? என்றே தமிழ் மக்கள் திண்டாட வேண்டிய உள்ளது.

# ஜே.வி.பி யும் தேசிய உடையும்

ஜே.வி.பி தான் ஒரு இடதுசாரிக் கட்சி அல்ல என்பதைப் பல வழிகளாலும் நிரூபித்து வருகின்றது. அதனிடம் கொள்கை கோட்பாட்டு நிலையில் எந்தவொரு இடதுசாரி மணமும் இல்லை குணமும் கிடையாது. அவர்கள் இப்போது சிங்கக் கொடியைத்தூக்கி 'தேசபக்தி ' 'தேசிய உணர்வு ' பற்றிக் கூச்சலிடுகின்றார்கள். பகிரங்கமாகவே பௌத்த குருமாரின் காலடியில் வீழ்ந்து வணங்கி தமது பேரினவாத யாத்திரைக்கு ஆசீர்வாதம் வாங்கி நிற்கின்றனர். இத்தகைய ஜே.வி.பிக்கு இராமலிங்கம் சந்திரசேகரன் என்ற தமிழரும் அஞ்ஞான் உம்மா என்ற முஸ்லீம் பெண்மணியும் (இருவரும் பாராளுமன்ற உறுப்பினர்கள்) காட்சிப் பொருளாகக் கிடைத்திருக்கிறார்கள். சகல பேரினவாதக் கூட்டங்கள், ஊர்வலங்கள், பாதயாத்திரைகள், ஆர்ப்பாட்டங்கள் என்பனவற்றில் இந்த இரண்டு பேரும் சமூகம் கொடுத்து ஊடகங்களுக்கு தலை காட்டத் தவறுவதில்லை. இதில் வேடிக்கை என்னவெனில் இந்த சந்திரசேகரன் என்ற தமிழர் அகல மாறுகரை வேட்டி சால்வை அணிந்த தமிழ்த் தேசிய உடையில் காட்சி தருவது தான். அடுத்து பெரிய சந்தனப் பொட்டு வைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. முஸ்லீம் பெண்மணியான அஞ்ஞான் உம்மா பர்தா அணிந்து காட்சி கொடுக்கிறார். அது அவரது வழமையான உடையாகும். ஆனால் சந்திரசேகரனுக்கு ஜே.வி.பி தமிழ்த் தேசிய உடை அணிவித்து ஏன் வேஷம் கட்டி கோமாளித்தனம் செய்கிறது. தேசிய உடை அணிவது முற்றிலும் சரியானது. ஆனால் நாடக ஒப்பனைக்கு அணிவது போன்று அணிய வைத்து தெருவெல்லாம் நிற்க வைப்பது தான் பரிதாபகரமாக இருக்கிறது. தமிழ்த் தேசிய உடையில் அதிக அக்கறை காட்டிய ஜே.வி.பியின் தலைவர்கள் எவரும் சிங்களத் தேசிய உடையை மருந்துக்குக் கூட அணிவதில்லை. ஏன்? தாம் எல்லாம் கால் சட்டையில் நின்று பெரும் தேசியவாத வெறி கக்க சந்திரசேகரன் என்ற தமிழருக்கு மட்டும் ஜே.வி.பி. வேட்டி சால்வை வேஷம் கட்டி பித்தலாட்டம் செய்கிறது பாராளுமன்ற ஆசன ஆசை எப்படி எப்படி எல்லாம் பேசவும் நடக்கவும் செய்கிறது. ஜே.வி.பி என்ற பேரினவாத மரத்தில் செடியாகவும் கொடியாகவும் பற்றி நிற்கும் சந்திரசேகரனும் அஞ்ஞான் உம்மாவும் உண்மை நிலையை உணர்வார்களா?

# வலி வடக்கு அடிநிலை மக்களின் அவலம்



யுத்தத்தால் அழிக்கப்பட்ட சுன்னாகம் புகையிரத நிலையமும் அதில் வாழ்ந்துவரும் வலிவடக்கு அகதிக் குடும்பங்களில் ஒன்றையும் படத்தில் காணலாம். (படம்: யாழ் நிருபர்)

யுத்த அனர்த்தங்களிலிருந்து யாழ் குடாநாடு மீட்சி பெற்று புனரமைப்புகள் செய்யப்படுகின்றது என கர்ச்சிக்கின்ற அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் வலிவடக்கு பிரதேச மக்களின் அவலகங்களை அறிவார்களா? தேர்தல் காலங்களில் அகதிமுகாம்களிற்கு சென்று வாக்குறுதிகள் அளித்த பிரமுகர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களானதும் கதிரை காப்பதிலே கவனமாக இருக்கின்றார்கள். உயர் பாதுகாப்பு வலயம் என்ற கடிவாளக் கயிறுகளைக் கொண்டு மக்களை ஏமாற்றுகின்ற அரசுக்கு அதன் அடிவருடிகளிற்கும் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் புகழ் பாடுகின்றனர். அத்துடன் வடபுலத்து அமைச்சர் அள்ளிக் கொடுப்பதாக விளம்பரம் செய்தும் வருகிறார்.

1990ம் ஆண்டிலிருந்து இன்றுவரை வலிகாமம் வடக்கிலிருந்து இடம் பெயர்ந்து அகதிமுகாம்களிலும் தனியான காணிகளிலும் கொட்டில்கள் குடிசைகளில் புகையிரத நிலையங்களிலும் வாழ்ந்து வந்த மக்கள் பெரும் அவலநிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். புகையிரத நிலையங்களிலிருந்து வெளியேற வேண்டும் என்ற அறிவித்தலினால் மீண்டும் புதிய இடங்களைத் தேடுகின்ற நாடோடி மக்களாக வலிவடக்கு மக்கள் காணப்படுகின்றனர்.

இவ்வாறு புதிய இடங்களைத் தேடுகின்ற மக்களிற்கு எவரும் வீடு நிலம் கொடுக்க மறுக்கின்றனர். ஏனெனில் இவ்மக்கள் 'அடிநிலையிலுள்ளவர்கள்' 'தாழ்த்தப்பட்டவர்கள்' என்ற வர்க்க சாதிய சிந்தனையின் அடிப்படையில் மறுக்கின்றனர். வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் இம்மக்களின் தரவுகளைப் பெறுவதில் மட்டும் முன்நிற்கின்றனர். எந்த வித வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதில் பின்னிற்கின்றனர்.

இவ்வாறு நித்தம் நித்தம் செத்துப் பிழைத்துக் கொண்டு இருக்கும் வலிவடக்கு மக்களிற்கு புரிந்துணர்வு உடன்படிக்கை எவ்வித பயனையும் தரவில்லை. போர்நிறுத்தம் என்பது ஒரு போர்வை. இந்தப் போர்வைக்குள்ளே குளிர்காய்ந்து தனது வியாபாரத் தந்திரங்களை அரங்கேற்றுகின்ற அமைச்சர் மகேஸ்வர பூசை கொடுப்பதனால் மகேஸ்வரனாகிவிடலாம் என சிலர் நினைக்கின்றனர். ஏழை மக்களின் சிரிப்பிலே இறைவனைக் காண வேண்டியவர்கள் திக்கம் வடிசாலை சாராயத்திலும் பலவகை வர்த்தகத்திலும் இறைவனைக் கண்டு வருவதையும் இடம்பெயர்ந்த சிலர் நினைவுபடுத்தினர்.

இத்தகையோர் மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்வதை விட இயமனின் தூதுவர்கள் என்று கூறுவது நல்லது. தீபாவளியைத் தேசிய விழாவாகக் கொழும்பில் நடத்தினார் அமைச்சர் மகேஸ்வரன். ஆனால் வலி வடக்கு இடம்பெயர்ந்து அல்லலுறும் அடிநிலை மக்கள் தீபாவளி என்ற ஒரு நாள் இருக்கிறதா என்பதையே மறந்து விட்ட அவல வாழ்விற்குள் வாழ்கிறார்கள். 'வோட்டுப் பொறிக்கிகள் எம்.பிமார் ' என்பது உண்மைதான் என்று ஒரு இடம் பெயர்ந்த முதியவர் சொன்னார். உண்மை தான்.

– வலிகாமத்தான்–

# நடுத்தர, குறைந்த வருமானம் பெறுவோர்

இந்த அரசு பதவிக்கு வந்தபின் சிறிய, நடுத்தர வருமானம் பெறுவோர், ஓய்வூதியம் பெறுவோர் மேலும் மேலும் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஊழியர் சேமலாப நிதி, இளைப்பாறும் போது பெறப்பட்ட பணத்தை வைப்புச் செய்தவர்களுக்கும் வங்கிகளில் வரி அறவிடப்படுகிறது.

மத்திய வங்கி வட்டி வீதத்தை குறைத்ததால் நன்மையடைவது பெரிய கம்பனிகளும், பல்தேசிய கம்பனிகளும் மட்டுமே. அதே சமயம் உழைப்பின் மூலம் பெறப்பட்ட பணவைப்புக்களுக்கு குறைந்த வட்டியே வழங்கப்படுவதால் சிறிய, நடுத்தர வருமானம் பெறுவோர் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

வர்த்தக அமைச்சர் 24மணி நேரமும் ச. தோ. சா. வைத் திறந்து வைத்ததால் களியாட்டம் போல் மின்விளக்குகள் எரிக்கப்பட்டு விரயம் ஏற்படுகிறது. சிறிய, நடுத்தர வருமானம் பெறுபவர்கள் இரவு நேரங்களில் பொருள் கொள்வனவுக்குச் செல்வதில்லை. ஏனெனில் அவர்களுக்கு போக்குவரத்து வசதியில்லை. பஜரோ, வொல்வோஸ், பென்ஸ் கார்கள் வைத்திருப்பவர்களால் மட்டுமே இரவு நேரத்தில் பொருள்களைக் கொள்வனவு செய்ய முடியும். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பாராளுமன்ற உணவகத்தில் மதியவேளை சாப்பாட்டிற்கு ரூபா.15/– மட்டுமே அறவிடப்படுகிறது. இவ்வாறான ஒரு சாப்பாடானது ஒரு வறிய குடும்பத்திற்கு ஒரு முழு நாளுக்குமே போதுமானதாய் இருக்கும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொலைக்காட்சியில் தோன்றும் போது அவர்களின் சொக்கைகளையும் தொந்தி வண்டியையும் பார்க்கும் மக்கள் தாம் வாக்களித்தவர்கள் எவ்வளவு சொகுசாக இருக்கிறார்கள் என்பதைக் கண்டு மனம் நோகமாட்டார்களா?

பிரச்சினைக்குரிய ரெலிகொம் தலைவர் குறைந்த வருமானம் பெறுவோரின் கட்டணங்களை உயர்த்தி செல்வந்தர்களுக்கு சலுகை வழங்கியுள்ளார். இன்று தொலைபேசி ஒரு அத்தியாவசியமாகிவிட்டது. குறைந்த வருமானம் பெறுவோர் தொலைபேசி ஊர்வம்பு கதைக்கமாட்டார்கள். மிகவும் அவசியம் என்றால் மட்டுமே தொலைபேசியைப் பயன்படுத்துனர்.

சர்வதேச இணைப்பு இருக்கிறதென்பதற்காக சிறிய நடுத்தர குடும்பத்தவர்கள் அரட்டை அடிப்பதில்லை. அவசர செய்தியை அனுப்பமட்டுமே பயன்படுத்துகின்றனர். செல்வந்தர்களுக்கு ஐடடி என்பது அரட்டை அடிப்பதற்கு அது மட்டுமல்ல பெரும்பாலும் அவர்களின் தொலைபேசிக் கட்டணங்களை அரசாங்கம் அல்லது கம்பனிகள் செலுத்துகின்றன.

அரசாங்கம் சராசரி மக்களின் வசதிகளைக் குறைத்து வசதி படைத்தவர்களின் சலுகைகளை அதிகரித்த வண்ணம் உள்ளது என்பதற்கு இவை சில உதாரணங்கள்.

# இந்தியாவின் குப்பைத் தொட்டியாக இலங்கை

முதலீட்டைக் கவருவது என்ற போர்வையில் நமது நாட்டின் சட்ட திட்டங்களுக்கு அப்பால் பல்தேசியக் கம்பனிகளுக்கும் இந்தியக் கம்பனிகளுக்கும் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. குறைந்த ஊதியத்தில் கூடிய உழைப்பைச் சுரண்டும் அன்னிய கம்பனிகள் தினமும் அனுமதியைப் பெறுகின்றன.

அண்மையில் உலோகம் சம்பந்தப்பட்ட இந்தியக் கம்பனிகள் பல ஹொறன்ன, மீரிகம, அவிசாவெலை போன்ற இடங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவை பெரிய முதலீட்டையும் கொண்டு வரவில்லை, அதிக எண்ணிக்கையில் வேலை வாய்ப்பையும் ஏற்படுத்தவில்லை. ஆனால் அவற்றினால் உருவாக்கப்படும் பெருமளவிலான மாசடைதல் சூழலுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைகிறது.

இந்தியாவில் இவ்வாறான தொழிற்சாலைகளை அனுமதிப்பதில் சூழல் பாதுகாப்பு தொடர்பாகப் பல கட்டுப்பாடுகள் உள்ளன. கண்டிப்பாக சட்டதிட்டங்களை அமுல் நடத்தத் தவறிய கம்பனிகள் இந்திய அரசால் மூடப்பட்டுள்ளன.

இந்தியாவில் சட்டத்திற்கு அமையாத கம்பனிகள் இலங்கைக்குள் வந்துவிட்டன. இந்தியாவின் குப்பைத் தொட்டியாக மாறி வரும் இலங்கையில் மேற்படி உலோகம் சம்பந்தப்பட்ட கம்பனிகளும் சேர்ந்துள்ளன. சுற்றாடல் மாசடைவது தொடர்பாக இலங்கை அரசு எதுவும் செய்யாதுள்ளது. மீரிகம கைத்தொழில் வலயம் மக்கள் வாழும் பகுதியில் அமைந்துள்ளது. சுற்றாடலை மாசுபடுத்தும் கைத்தொழில்கள் இங்கு அனுமதிக்கப்பட்டுள்ளன. அவிசாவளையைப் பொறுத்தமட்டில் தேசிய நீர் வடிகால்சபை கொழும்புக்கான நீர் கொள்ளும் இடமாக விளங்குவதால் அப்பகுதியில் சூழலை மாசுபடுத்தாத நீரைப்பாதிக்கச் செய்யாத கைத்தொழில்களையே அனுமதிக்க முடியும். அப்படியானால் உலோகக் கைத்தொழில்களை இப்பகுதியில் ஏன் அனுமதித்தார்கள்.

சொற்ப மூலதனத்தைப் பெறுவதற்காக குடிநீரின் பெரும் பகுதியைத்தரும் களனி கங்கையை சாக்கடையாக்க முற்படுகிறார்களா? உலகம் குடிநீர் பிரச்சினையை எதிர்வரும் வருடங்களில் எதிர்நோக்கவுள்ளதாக எச்சரிக்கை விடப்பட்டுள்ள நிலையில் இலங்கையின் நீர் வளங்களை இந்தியக் கம்பனிகள் மாசுபடுத்த அனுமதிக்க முடியுமா? இவையாவும் எந்த அடிப்படையில் முன்னெடுக்கப்படுகின்றன. தனியார் முதலீடுகளை வரவழைத்து பெரு முதலாளிகளையும் அந்நியக் கம்பனிகளையும் கொழுக்க வைக்கும் வகையிலே தான் செய்யப்படுகின்றன.

# கருஜெயசூரியாவின் சபதம்

மேல் கொத்மலைத் திட்டம் தீர்மானித்தபடி முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அதற்கான ஆரம்பப்பணிகள் தொடக்கப்பட்டுள்ளதாகவும் மின்சக்தி அமைச்சர் கருஜெயசூரியா கூறி உள்ளார். எக்காரணம் கொண்டும் மேல் கொத்மலைத் திட்டம் கைவிடப்படமாட்டாது என்ற சபதத்தையும் எடுத்து நிற்பது போன்று அண்மையில் பத்திரிகை ஒன்றுக்கு கருத்துக் கூறியுள்ளார். இதனைப்பற்றி ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தில் அங்கம் பெற்று கருஜெயசூரியா போன்றவர்களோடு இணைந்து நின்று செலயல்படும் மலையகப் பாராளுமன்றத் தலைமைகள் என்ன கூறப்போகிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



# மலையகத் தமிழ் மக்களின் அரசியல் சந்திரசேகரம் கூறும் பாதையில் அல்ல!

~ ம. அழகேசன் ~

மலையகத் தோட்டத் தொழிலாளர்களிடையே முக்கிய இடம்பிடித்திருந்த தொழிற் சங்க இயக்கமும், தேர்தல் அரசியலும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களினதும், மலையகத் தமிழ் மக்களினதும் போராட்டக் குணத்தை ஏறக்குறைய முற்றாகவே மழுங்கடித்துள்ளன. அவர்களை அற்ப சொற்ப சலுகைகளுக்காக தலை வர்கள், அதிகாரிகள் எனப்படுவர்களின் பின்னால் இழுபடுகின்றவர் ஆக்கியுள்ளது. அதனால் அண்மைக்காலமாக முன்னெடுக்கப்பட்ட பல உரிமைப் போராட்டங்களும், முன்வைக்கப்பட்ட உரிமைக்கோரிக்கைகளும் முறியடிக்கப்பட்டன. சம்பள உயர்வுப் போராட்டங்கள் வெற்றி பெற்றதாகத் தலைவர்கள் எனப்படுபவர்களால் கூறப் பட்டபோதும் எவ்வித உயர்வுகளும் வழங்கப்படவில்லை.

தோட்டங்களில் இருக்கும் தரிசுக் காணிகளில் தொழிலாளர்கள் பரம்பரையாக சிறு தோட்ட பயிர்ச்செய்கையில் ஈடுபட்டபோதும், பல தோட்டநிர்வாகத்தினால் தொழிலாளர்கள் வற்புறுத்தப்படுகின்றனர். அக்காணிகளை கைவிடாத பல தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு சட்டப்படி நீக்கப்பட முடியாது என்றாலும் பல நீதிமன்றங்கள் அவற்றை நியாயப்படுத்தி தீர்ப்பளித் துள்ளன. தோட்டங்களில் தொழில் செய்யாதவர்களை தோட்டங்களி லிருந்து வெளியேற்றும் நடவடிக்கை களில் தற்போது கம்பனிகள் ஈடுபட் டுள்ளன.

பெருந்தோட்ட நிலப்பரப்பு மத்திய அரசாங்கத்தின் கீழிலிருப்பதால் மாகாணசபை, உள்ளூராட்சி சபை என்பவற்றின் அபிவிருத்தி வேலைகள் தோட்டப்பகுதிகளில் முன்னெடுக்கப் படுவதில்லை. மண்சரிவு, வெள்ளம் என்பவற்றால் பாதிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்களுக்கு அரசாங்க நிவாரணங்கள் வழங்கப்படவில்லை. ஏனெனில் அரசாங்க நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டிய பகுதிகளுள் தோட்டங்கள் உள்ளடக்கப்படவில்லை என்று அரசாங்க அதிகாரிகள் தெரிவித் துள்ளனர்.

மலையகத்தில் இயங்கும் ஸ்ரீபாத கல்வியல் கல்லூரி அமைதியிழந் துள்ளது. தொண்டமான் தொழிற் பயிற்சி நிலையம் மூடப்பட்டுள்ளது. கொத்மலைத் திட்டத்தினால் பெரும் அழிவே ஏற்படவிருக்கிறது.

களுத்துறை, காலி, மாத்தளை, கண்டி, இரத்தினபுரி, குருநாகல், கேகாலை ஆகிய மாவட்டங்களில் அவ்வப்போது இனவாத ரீதியாக மலையக மக்கள் தாக்கப்படுகின்றனர்.

தொழிற் சங்கங்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துச் செல்கிறது. 1977 இற்கு பிறகு தொடர்ச்சியாக பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்து வருகின்றனர். அமைச்சர்கள் இருந்து வருகின்றனர்.

வ்வாறான சூழ்நிலையில் மலையகத்



தமிழ்மக்களை அரசியல் ரீதியாக அணி திரட்ட வேண்டும் என்று மலையக மக்கள் முன்னணி தலைவரும் அமைச்சருமான பி. சந்திரசேகரம் தெரிவித் துள்ளார். அவர் 1990களில் இருந்து மலையகத்தமிழ் மக்களை அரசியல் ரீதியாக அணிதிரட்டி வருவதாகக் கூறிவருகிறார். அவரது 'அரசியல் ரீதியான அணிதிரட்டலின் பயனாக' நகரசபை உறுப்பினராகி, மாகாணசபை உறுப்பினராகி , பாராளுமன்ற உறுப்பினராகி, பிரதியமைச்சராகி



இன்று அமைச்சராகியும் விட்டார்.

இன்னும் மலையகத் தமிழ்மக்களை அரசியல் ரீதியாக அணிதிரட்ட வேண்டும் என்று கூறுவதன் அர்த்தம் என்ன?

**தேர்தல் அரசியலால் மலையகத் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டனர் தலைமைகள் பதவி பட்டம் சொத்து சுகம் புகழ் தேடிக்கொண்டனர்**

அவர் கூறும் அரசியல் அணி திரட்டுவது என்பது தொடர்ந்து சந்திரசேகரனை பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்வதும் அவரின் ஆட்களை மாகாணசபை. உள்ளூராட்சி சபைகளுக்கு தெரிவு செய்வதும் ஆகும்.

சௌ. தொண்டமான் பாராளுமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும் தெரிவு செய்யப்பட்டவுடன் அவரைச் சுற்றி நின்ற ஒரு கூட்டம் சலுகை நிறைந்ததாகவும் வசதிபடைத்ததாகவும் மாறியது. அதேபோன்று சந்திரசேகரம் உறுப்பினரானதும், அமைச்சரானதும் அவரை சுற்றி ஒரு கூட்டம் சலுகை நிறைந்ததாகவும் வசதிபடைத்ததாகவும் மாறியுள்ளது.

இதைத்தவிர தேர்தல் அரசியலால் மலையகத்தமிழ் மக்களுக்கு என்ன கிடைத்தது? தொழிற்சங்க இயக்கமும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. அதனால் மலையகத்தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான பாதை எது?

அது நிச்சயமாக சந்திரசேகரனோ அல்லது வேறு எவருமோ காட்டும் தேர்தல் அரசியல் பாதையாக இருக்க முடியாது.

தோட்டத் தொழிலாளர்களும்



மலையகத்தமிழ் மக்களும் அவர்களின் சொந்தக் காலில் நிற்கக் கூடிய பொருளாதார கட்டமைப்புகளையும்.

அரசியல் நிர்வாக முறையையும், பண்பாட்டையும் வென்றெடுக்க மக்களின் பங்களிப்புடனான அரசியல் பாதையே சரியான பாதையாகும். அது மக்கள் போராட்ட அரசியல் பாதை ஆகும். தொழிலாளர் வர்க்க அடிப்படையையும் தலைமையையும் கொண்ட அரசியல் ஆகும். தன்னுடைய சுயாட்சியை நிலைநாட்டுவதும் ஏனைய தேசிய இனங்களுடன சமத்துவமாகவும் ஐக்கியமாகவும் வாழும் தூர நோக்கை கொண்ட அரசியல் ஆகும்.

ஏகாதிபத்திய உலகமயமாதலுக்கு துணைபோகாத, பேரினவாதத்திற்கு அடிபணியாத, இனவாதத்தை அடிப்படையாக கொண்டிராத முதலாளித்துவத்தை தகர்த்து சமூகநீதியை நிலைநாட்டக் கூடிய நோக்குடைய புரட்சிகர வெகுஜன அரசியல் பாதையே மலையகத் தமிழ் மக்களுடைய அரசியல் பாதை ஆகும்.

அந்த அரசியலின் அடிப்படையிலேயே மலையகத் தமிழ் மக்கள் அணிதிரள வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

வாக்குகளை பொறுக்குவது தான் அரசியல் அல்ல இந்நாட்டில் வாழும் தொழிலாளர், விவசாயிகள் அடக்கப் பட்ட மக்கள் பெண்கள் போன்றோரின் விடுதலைக்கான நகர்வுகள் ஒவ்வொன்றும் மக்கள் அரசியலாகும்.

சந்திரசேகரம் குறிப்பிடுவது அந்த அரசியலை அல்ல. மலையகத்தமிழ் மக்கள் மத்தியிலிருந்து தொழிலாளர் வர்க்கத்தின் தேவைகளை குறைந்தளவாவது மையமாகக் கொண்ட தொழிற்சங்க இயக்கத்தை முற்றாக இல்லா தொழித்துவிட்டு வாக்களிக்கும், வாக்குகளை பெற்றுக் கொள்ளும் மக்களுக்கு சலுகைகளை வழங்குவதை மட்டும் மையமாகக் கொண்ட ஏமாற்று அரசியலை நிலைநாட்டுவதையே அவர் அரசியல் என்று அர்த்தப்படுத்துகிறார். பெரும் எண்ணிக்கையான தொழிலாளர்களின் வாக்குகளை பெற்றுக் கொண்டு பட்டம் பதவியுடன் அவர் சொத்து சுகம்தேடி வாழ்வதுடன் உயர் வர்க்கத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதே அவரின் அரசியல் ஆகும்.

அவரின் அரசியல் பெரும் எண்ணிக்கையான தோட்டத் தொழிலாளர்களுக்கோ, அடக்கப்படும் மலையகத் தமிழ் தேசிய இனத்திற்கோ எவ்வித நன்மையும் தரமாட்டாது.

எனவே அவர் அடிக்கடி கூறும் மலையகத்தமிழ் மக்கள் அரசியல் ரீதியாக ஒன்றுபடவேண்டும், அணி திரள வேண்டும் என்று கூறுவதெல்லாம் வெறும் ஏமாற்றேயாகும்.

---

# மலையகத்திலிருந்து

குமரன்

## மலையகத்திலிருந்து உதயதரிசனம் நிகழ்ச்சியில் குறுக்கீடு

ஞாயிற்றுக்கிழமைகளில் ரூபவாஹினி ஐ அலைவரிசையில் அரசியல் களம் நிகழ்வில் மலையகப் பிரச்சினைகள் பற்றிப் பேசப்படும் போது ஜனநாயக பூர்வமாக கலந்துரையாட விடாமல் சில மலையகத்தலைவர்களும், ரூபவாஹினி தமிழ்ப்பணிப்பாளரும் குறுக்கீடு செய்து வருவதாக தெரிகிறது.

இனப்பிரச்சினை பற்றியும் பிரதமர், ஜனாதிபதி பற்றியும், அரசியல் கட்சிகள் பற்றியும் அரச ஊடகங்களில் வரையறுக்கப்பட்ட நிலையிலாவது கலந்துரையாடப்படுகின்றன. ஆனால் மலையகத்தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றியும், மலையகத்தலைமைகள் பற்றியும் அரச ஊடகங்களுக்குரிய வரையறுக்கப்பட்ட நிலையில் கூட கலந்துரையாட தமிழ் அதிகாரிகளும் சில இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்களும் நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே தலையீடு குறுக்கீடு செய்வதாக அறிய முடிகிறது.

சில மாதங்களுக்கு முன்பு பொகவந்தலாவை சென் மேரிஸ் கல்லூரி மாணவர்கள் அவர்களது குறைகளை உதயதரிசனம் நிகழ்ச்சியின் மூலம் எடுத்துரைத்துக் கொண்டிருக்கும் போது அதனை நிறுத்தும்படி கண்டியிலிருந்து ரூபவாஹினி தமிழ்ப்பணிப்பாளர் கட்டளையிட்டதாக கூறப்பட்டது.

சில வாரங்களுக்கு முன்பு பத்தனை ஸ்ரீ பாத கல்வியியல் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் சிவ. இராஜேந்திரன் உதய தரிசனம் அரசியல்களம் நிகழ்ச்சியில் மலையகத்தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றி எடுத்துக் கூறிக் கொண்டிருக்கும் போது இடை நடுவில் அவரின் பேட்டி நிறுத்தப்பட்டது. அதனை நிறுத்தும்படி அதே தமிழ்ப்பணிப்பாளர் கட்டளையிட்டதாக கூறப்படுகிறது.

இரண்டு வாரங்களுக்கு முன்பு ஊடகவியலாளரும், சமூக நடவடிக்கையாளருமாகிய செந்தில் சிவஞானம் அதே நிகழ்ச்சியில் மலையக மக்களின் பிரச்சினைகளை எடுத்துக் கூறிக் கொண்டிருக்கும் போது குறுக்கீடு செய்யப்பட்டது. சில இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்களின் அழுத்தம் காரணமாக குறுக்கீடு செய்யப்பட்டதாக அறிய முடிந்தது. அத்தலைவர்கள் ரூபவாஹினி கூட்டுத்தாபன தலைவரிடம் முறைப்பாடு செய்ததாகவும் கூறப்படுகிறது. அதாவது மலையகத்தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மட்டுமே எதையும் செய்யவும், சொல்லவும் தகுதியுடையது என்ற சர்வாதிகாரத் தோரணையில் முறைப்பாடு செய்ததாக தெரிகிறது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான யோகராஜன் எம்.பி உதய தரிசனம் நிகழ்ச்சியை தயாரித்து வழங்குபவர்களை எச்சரிக்கும் விதத்தில் தொலைபேசியில் பேசியதாகவும் கூறப்படுகிறது.

மலையகத்தமிழ் மக்களின் அரசியலுக்கு ஏகபோக உரிமை கோரும் மலையகத் தொழிற் சங்கத்தலைமை மலையகத்தமிழ் மக்களின் கருத்து சுதந்திரத்திற்கு முட்டுக்கட்டையாக இருந்து வருகின்றனர். இது அத்தலைமைகளின் அராஜக போக்கையே வெளிப்படுத்துகிறது.

ஏனைய சமூகங்களுக்கு இருக்கும் ஆகக்குறைந்த உரிமைக்களை மலையகத்தமிழ் மக்களுக்கு வழங்குவதில் இலங்கை அரசுமட்டுமன்றி மலையகத்தமிழ் மக்களின் தலைவர்களும் முட்டுக்கட்டையாக இருக்கின்றனர். அத்துடன் அவர்களுக்கு சப்பைக்கட்டும் தொடை நடுங்கிப் போயுள்ள தமிழ் உயர் அதிகாரிகளும் தடையாக இருக்கின்றனர்.

## சந்திரசேகரத்தின் கண்டுபிடிப்பு

வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்கள் எல்லோரும் பணம் சம்பாதிப்பதற்காகவன்றி, இங்கு வாழமுடியாத நிலையிலேயே வெளிநாடுகளுக்கு சென்றுள்ளதாக மலையக மக்கள் முன்னணி தலைவரும் அமைச்சருமான பெ. சந்திரசேகரம் மன்னாரில் நடைபெற்ற பொங்கு தமிழ் நிகழ்வில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளுக்கு சென்றவர்கள் பணம் பண்ணுகிறார்களோ இல்லையோ அமைச்சரின் ஒவ்வொரு வெளிநாட்டு பயணத்தின் போதும் பலர் ரொம்பவே பணம் பண்ணுவதாகச் சொல்லப்படுகிறது. அப்பயணங்களின் போது வெளிநாடுகளுக்கு கடத்தப்படுபவர்களும் பணம் சம்பாதிப்பதற்காக அங்கு செல்லவில்லையா?

## மேல் கொத்மலைக்கு எதிர்ப்பியக்கம்

மேல் கொத்மலை திட்டத்தை முற்றாக இரத்துச் செய் என்ற வாசகத்தை கொண்ட போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளன. அதனை மேல் கொத்மலை திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் செய்துள்ளது.

பாராளுமன்ற வாதிகள் தொழிற் சங்கவாதிகள் ஓய்ந்தாலும் மக்கள் ஓயமாட்டார்கள். மக்கள் இயக்கம் எப்போதும் முன்னோக்கிச் சென்று கொண்டே இருக்கும். மேல் கொத்மலைத் திட்டம் சிலருக்கு பணம் பதவி நிர்மாண ஒப்பந்தங்களைக் கொண்டு வரும். ஆனால் மலையக மக்களுக்கும் மலையகப் பிரதேசத்திற்கும் அழிவுகளையே கொண்டுவரும்.

## பிந்துனுவெவ படுகொலைகள்

கடந்த மாதம் 25ம் திகதியுடன் பிந்துனுவெவ தடுப்பு முகாமில் தமிழ் அரசியல் கைதிகள் படுகொலை செய்யப்பட்டு மூன்று வருடங்களாகிவிட்டன. அப்படுகொலையை கண்டித்து தலவாக்கொல்லையில் நடத்தப்பட்ட எதிர்ப்பியக்கத்தில் கலந்து கொண்டேன். பொலிசார் மீது நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பலியானவர்கள் பற்றி யாரும் கவனிப்பதாக இல்லை. அப்போராட்டத்தை வைத்துக் கொண்டு தனது பாராளுமன்ற பதவியை உறுதி செய்து கொண்ட மலையக மக்கள் முன்னணி தலைவர் சந்திரசேகரனும் அவர்கள் பற்றி கவனஞ் செலுத்தவில்லை. அவர்களின் மரணம் பதிவு செய்யப்படவில்லை என்பதுடன் பாதிக்கப்பட்டுள்ள அவர்களின் குடும்பங்களுக்கு எவ்வித நிவாரணமும் வழங்கப்படவில்லை.

அரசியல் இருப்புக்காக போராட்டங்களை நடத்திவிட்டு போராட்டத் தியாகிகளை மறந்துவிடும் தலைமைகளை அம்பலப்படுத்த வேண்டியது முக்கியமானதாகும்.

## வேலாயுதத்தின் அர்த்தமற்ற பெருமை

சில மாதங்களுக்கு முன்பு பெருந்தோட்டக் கம்பெனிகளுக்கும் தொழிற்சங்கங்களுக்குமிடையில் ஏற்பட்ட கூட்டு ஒப்பந்தத்தில் தொழிற்சங்கங்களின் சார்பில் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் என்ற ரீதியில் தானே முதலாவதாக கையெழுத்திட்டமைப்பற்றி பதுளை மாவட்ட ஐக்கிய தேசிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் வேலாயுதம் பெருமைப்பட்டு பேசிக் கொள்கிறாராம்.

வழமையாக சௌ. தொண்டமானும் பின்னர் ஆறுமுகம் தொண்டமானும் முதலாவதாக கையெழுத்திட்டுள்ளனர். இம்முறை வேலாயுதம் முதலாவதாக கையெழுத்திட்டுள்ளார்.

இதில் பெருமைப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஏனெனில் வேலாயுதம் முதலாவதாக கையெழுத்திட்டுள்ள அந்தக் கூட்டு ஒப்பந்தத்தில் தொழிலாளர்களுக்கு எவ்வித உரிமையும் உறுதி செய்யப்படவில்லை. சம்பள உயர்வு கோரி தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ய மாட்டார்கள் என்று அவ்வொப்பந்தத்தில் உறுதி கூறப்பட்டுள்ளது. அதேவேளை சம்பள உயர்வுகள் பற்றி அவ்வொப்பந்தத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. நாட்டின் ஏனைய துறைகளில் வேலை செய்வோருக்கு சம்பள உயர்வு வழங்கப்படுகிறது. சம்பள உயர்வுக்காக கோரிக்கை விடுக்கப்படுகிறது.

எனவே தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு கோரிக்கைக்கு ஆப்பு வைத்த, தொழிலாளர்களின் உரிமைகளை கட்டுப்படுத்தியிருக்கும் முதலாவது கூட்டு ஒப்பந்தத்தில் முதலாவதாக கையெழுத்திட்டத்தில் பெருமைப்படுவதற்கு என்ன இருக்கிறது. வெட்கமல்லவா படவேண்டும். மலையகத் தலைமைகளுக்கு வெட்கம் ரோசம் எதுவுமே இல்லை. அப்படி இருந்திருக்குமாயின் தோட்டத் தொழிலாளர்களின் சில கோரிக்கைகளாவது ஏற்கனவே கிடைத்திருக்கும்.

படிப்பகம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
புதிய பூமி
Puthiya Poomi
சுற்று 10 நவம்பர் 2003 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 63

எஸ்.47. 3ம் மாடி. கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி. கொழும்பு 11. இலங்கை. தொ.பே.:2435117. 2335844 பாக்ஸ்:011-2473757
ஈ-மெயில் : puthiyapoomi@hotmail.com

## ஜே. வி. பி - சிஹல உறுமய - பேரினவாதவெறி

ஐ.தே.மு அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்திற்குமிடையிலான சமாதான பேச்சுவார்த்தைக்கு எதிராக ஜே.வி.பி எதிர்ப்பியக்கங்களை நடத்தியது. வடக்கு கிழக்கிற்கு இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவது நாட்டுப் பிரிவினைக்கான ஆரம்பம் என்றும் அதிகாரப்பங்கீட்டு அடிப்படையிலான தீர்வு நாட்டுப் பிரிவினையை உறுதி செய்வதாகி விடும் என்றும் பிரசாரம் செய்து காலியிலிருந்து கொழும்புக்கும் கண்டியிலிருந்து கொழும்புக்கும் பாதயாத்திரைகளையும் ஜே.வி.பி நடத்தி முடித்துள்ளது.

இதனை தொடர்ந்து சிஹலஉறுமய குரங்கு பாஞ்சான் முகாமிற்கு பாதயாத்திரை சென்று வெற்றிகரமாக முடிக்காதவாறு இலங்கை இராணுவம் தடுத்து நிறுத்தியதால் கொழும்புக்கு திரும்பிவிட்டது. சமாதான பேச்சுவார்த்தை காலகட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் குரங்கு பாஞ்சான் முகாமை அமைத்துள்ளது என்று தொடர்ந்து ஊடகங்களில் செய்தி வெளியாகி வருகின்றன. ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமும் சர்வதேச கண்காணிப்புக்குழுவும் கூட சமாதான பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டப் பிறகுதான் புலிகள் இயக்கம் அம்முகாமை அமைத்துள்ளதாக கூறுகின்றன. அம்முகாமை அமைத்ததிற்கு எதிர்ப்பு தெரிவித்தே சிஹலஉறுமய அதன் பாதயாத்திரையை நடத்தியதாக தெரிவித்தது. இப்பாதயாத்திரையும் சமாதான பேச்சுவார்த்தைக்கு எதிரானதே ஆகும்.

ஜே.வி.பி தன்னை தானே இனவாத சக்தி இல்லை என்று கூறிக்கொண்ட போதும் தமிழ் மக்களின் சுயாட்சியை மறுப்பதும், இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான சமாதான முயற்சிகளை மறுப்பதும். இன அடக்குமுறையும் ஒடுக்கலும் இருக்கின்றபோது அதற்கு எதிரான போராட்டங்களை அங்கீகரிக்க மறுப்பதும் பேரினவாத நிலைப்பாடே ஆகும்.

சமாதான முயற்சியினால் நாடு பிளவுபடப் போவதாக ஜே.வி.பி பொய்ப்பிரச்சாரங்களை மேற் கொள்வதும் சிங்கள மக்களை பீதிக்குள்ளாக்கும் பிரசாரங்களை முன்னெடுப்பதும் சுயாட்சி முறையிலான தீர்வு காணப்பட்டால் வடக்கு கிழக்கிற்கு வெளியில் தமிழ் மக்கள் பாதுகாப்பாக வாழமுடியாது என்று எச்சரிக்கை செய்வதும் இன ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளாக மாட்டாது.

இந்நாட்டின் சகலதேசிய இனங்களும் சமமாக நடத்தப்படவில்லை என்பதும், மேலும் மேலும் பேரினவாத அடக்கு முறைகள் அதிகரித்து. சிங்கள பௌத்த பேரினவாதம் நிறுவனப்படுத்தப்பட்ட நிலையில் தமிழ் மக்களுக்கு எதிராக ஐ.தே.கட்சி அரசாங்கம் யுத்தத்தை திணித்தது. அதற்குப்பின்வந்த அரசாங்கமும் அதனை முன்னெடுத்தது. அதற்கு எதிரான போராட்டம் யுத்தமாக வளர்ச்சி அடைந்தது. இன்று வடக்கு கிழக்குப் பெரும்பகுதி தமிழீழ விடுதலை புலிகள் கட்டுப்பாட்டில் இருக்கிறது.

இந்நிலையில் ஜே.வி.பி தமிழ் பிறப்பு. இறப்பு. திருமண பதிவாளர்கள் நியமிப்பது பற்றியும் தமிழ்மூலம் கல்வி பற்றியும் கதைப்பதாக மட்டுமே இருக்கிறது. அதிகாரப் பங்கீட்டிற்கு எதிராக இருக்கிறது. அவர்களது ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் பௌத்தபிக்குகளை அணிதிரட்டிக் கொண்டு அடையாளத்திற்காக அவர்களது ஒரேயொரு தமிழ்ப்பாராளுமன்ற உறுப்பினருக்கும் பாரம்பரிய தமிழர் வேஷம் போட்டு, முஸ்லிம் உறுப்பினரை பர்தா அணியச் செய்து ஊர்வலங்களில் அவர்களை இழுத்துச் செல்கிறது. இது மிகவும் நகைப்பிற்கிடமானது. ஜே.வி.பி சமத்துவம் இன ஐக்கியம் என்ற பெயரில் சிங்கள மேலாதிக்கத்தையே உயர்த்திப்பிடிக்கிறது.

சிஹல உறுமய மிகவும் வெளிப்படையாக சிங்கள பௌத்த பேரினவாத நிலைப்பாட்டை எடுப்பதுடன் சிங்களவர்களின் மேலாதிக்கம் நிறைந்த ஆட்சியையே இலக்காக கொண்டுள்ளது. இலங்கை சிங்களவர்களின் நாடு ஏனைய இனங்கள் சிங்கள மேலாதிக்கத்திற்குட்பட்டே இருக்க வேண்டும் என்பது அவர்களின் நிலைப்பாடாகும்.

ஜே.வி.பி. சிஹல உறுமய என்பன சமாதான முயற்சிகளுக்கு நடத்திவரும் ஊர்வலங்களினால் ஆர்ப்பாட்டங்களினாலும் சிங்கள மக்கள் குழப்பத்திற்குள்ளாக்கப்பட்டு அவர்கள் மத்தியில் சிங்களத் துவேஷம் மேலோங்கி வருகிறது. எல்லா பேரினவாத சக்திகளும் மேற்படி இரண்டு கட்சிகளின் பின்னால் அணி திரண்டிருக்கின்றன.

இந்நிலையில் சமாதானமுயற்சிகளை முன்னெடுக்கும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பேரினவாத பிரசாரங்களை முறியடிக்க அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுப்பதாக இல்லை. ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி அதிகாரப்பங்கீட்டிற்கு தயார் என்று கூறிவருகின்றபோதும் தற்போதைய சமாதான முயற்சிகளை குழப்பும் பிரசாரங்களையே செய்து வருகிறது. இதுவும் பேரினவாத சக்திகளைப் பலப்படுத்தவதாகவே அமைந்துள்ளது. முஸ்லிம் தலைவர்களின் நடவடிக்கைகளும் கூட பேரினவாதத்திற்கு உதவுவதாகவே இருக்கின்றன.

இலங்கையின் அரை நிலப்பிரபுத்துவ. அரைக் காலனித்துவ சமூக அமைப்பிலும் தற்போதைய நவ கொலனித்துவ ஏகாதிபத்திய உலகமயமாதல் சூழலிலும் கூட இன்னும் இன்னும் பேரினவாத நிலைப்பாட்டை நிலைநிறுத்தும் வகையிலேயே ஆளும் வர்க்கம் கவனம் செலுத்தி வருகிறது. இதற்கு பக்கபலமாக வெளிநாட்டுக் சக்திகள் செயல்பட்டுவருகின்றன.

எனவே சிங்களமக்கள் மத்தியில் பேரினவாதத்திற்கு எதிரான கருத்துப் போராட்டங்கள் மிகவும் விரிவாகவும் ஆழமாகவும் செய்யப்பட வேண்டி இருக்கிறது. அதனை இடதுசாரி சக்திகளே அவற்றின் பாரிய பொறுப்பாக கொண்டு செயற்பட வேண்டி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. அதனை இடதுசாரி ஜனநாயக சக்திகளால் மட்டுமே நேர்மையாக முன்னெடுக்க முடியும்.

ஐக்கிய இலங்கைக்குள் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் போது சிங்கள மக்களின் ஆதரவு இன்றியமையாதது என்பதை தமிழ் அரசியல் கட்சிகளும் விடுதலைப் புலிகள் இயக்கமும் உணர்ந்து பொறுப்புடன் செயற்பட வேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளன. இந்நிலைப்பாடு சம்மந்தப்படும் சகல தரப்பாலும் அடிப்படையில் உணரப்படல் வேண்டும்.

- ஆசிரியர் குழு -

# உலக மேலாதிக்க சக்திகளும் உள்நாட்டு மேட்டுக் குடியினரும்

**வெகுஜனன்**

உலகம் முழுவதையும் ஒரே குடையின் கீழ் கொண்டு வரவேண்டும். அதன் கீழ் தட்டிக் கேட்க முடியாத அதிபதியாகத் தானே இருக்க வேண்டும். உலக நாடுகளின் பொருளாதார வளங்கள் அனைத்தும் தங்களால் சுரண்டிக் கொள்ளையிடப்படல் வேண்டும். அதற்கான அரசியல் அமைப்பு முறைகளும் சமூக பண்பாட்டுத் தளங்களும் சேவை செய்யுமாறு இருந்து வரல் வேண்டும். இவற்றை முன்னெடுக்க ஜனநாயகம் சுதந்திரம் மனித உரிமை என்ற கோஷங்களின் ஊடாகத் தமக்கு தேவையானவற்றை உலகெங்கும் செய்து கொள்ள வேண்டும். அதற்கு தமது ராணுவ பலத்தை விரிவுபடுத்தி அவசியப்படும் போதெல்லாம் ஏதாவது ஒரு சாட்டின் மூலம் பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும். தனக்கு நிகரான பொருளாதார ராணுவ சமபலம் உலகில் இருப்பதை அனுமதிக்காத நிலையில் இருந்து வரல் வேண்டும். ஒட்டுமொத்தமான உலக மேலாதிக்கம் தமது கரங்களில் என்னென்றும் இருந்து வரல்வேண்டும். தமக்கு இணையான அல்லது சவால் விடக்கூடிய எந்தவொரு நாடும் எத்தகைய தலைமைகளும் அல்லது தலைவர்களும் உலகின் எந்தவொரு மூலையிலும் இருக்கக் கூடாது.

இதுவே உலக ஏகாதிபத்தியச் சிந்தனை. ஏகாதிபத்தியம் என்பது முதலாளித்துவத்தின் உச்ச கட்டமாகும். முதலாவது உலக யுத்தம் இத்தகைய முதலாளித்துவ சிந்தனை வழியாக ஏற்பட்டதேயாகும். உலகச் சந்தைக்கான அந்த யுத்தம் உலக நாடுகளை ஆதிக்கம் செய்யும் ஆரம்பக் கருவில் இருந்தே உலக மேலாதிக்கம் என்ற ஏகாதிபத்திய அடிப்படைக் கொள்கையாக வளர்ச்சி கண்டது. இந்த வளர்ச்சி அமெரிக்காவை முதல் நிலைக்குக் கொண்டு வந்தது.

முதலாவது உலகப் போரைத் தொடர்ந்து உலகில் இரண்டு விதமான போக்கு சமாந்தரமாகப் போட்டியிட்டு வளர்ச்சி கண்டது. ஒன்று, மகத்தான ஒக்ரோபர் சோஷலிசப் புரட்சி ரஷ்யாவில் வெற்றி பெற்று பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் சோஷலிசம் வீறு நடைபோடத் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து மாபெரும் சீனப்புரட்சி உட்பட உலகின் பல்வேறு நாடுகளிலே புரட்சிகளின் மூலம் சோலிஷச அரசுகள் தோன்றி வளரலாயிற்று. இத்தகைய போக்கானது உலகின் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் தேசங்களுக்கும் புதிய திசை மார்க்கத்தைக் காட்டி நின்றது.

இரண்டாவது, முதலாளித்துவ நாடுகளுக்கிடையிலான போட்டியில் அமெரிக்கா தன்னை விரைவாகவே ஒரு ஏகாதிபத்திய நாடாகக் கட்டமைத்துக் கொண்டது. ஏற்கனவே அமெரிக்கப் பூர்வீக மக்களிடமிருந்து பறித்தெடுத்து அவர்களைக் கொன்றொழித்த மண்ணில் அமெரிக்கா தோற்றுவிக்கப்பட்டது. அதற்கான உழைப்பை ஆபிரிக்காவில் இருந்து அடிமைகளாகக் கொண்டு வரப்பட்ட கறுப்பு இன மக்களிடமிருந்து பலாத்காரமாகப் பெறப்பட்டது. சவுக்கும், வாளும், துப்பாக்கியும் கொண்டு ஆபிரிக்க அடிமைகளின் வெயர்வை கண்ணீர் இரத்தம் உயிர்கள் ஆகியனவற்றின் ஊடாகவே அமெரிக்க முதலாளித்துவம் கட்டியெழுப்பப்பட்டது. அந்த முதலாளித்துவம் விருத்தி பெற்று எல்லை கடந்த போது ஏகாதிபத்தியமாகிக் கொண்டது. இத்தகைய ஏகாதிபத்தியம் ஏனைய முதலாளித்துவ நாடுகளை முந்திக் கொண்டு முன்னணிக்கு வந்ததுடன் உலகில் வளர்ந்து வந்த மாக்சிசம் சோஷலிசத்தை முறியடிப்பதில் முழுக் கவனத்தையும் செலுத்தியது. சோவியத் யூனியன், சீனா, வியட்நாம், கொரியா, கியூபா என்பன அதன் எதிரிகளாகின.

அமெரிக்கா தலைமையிலான, முதலாளித்துவ நாடுகள் ஏகாதிபத்திய உலக ஆதிக்கத்திற்காக இணைந்து நின்றன. மறுபுறத்தில் சோவியத் யூனியனும் அதன் சகோதர சோஷலிச நாடுகளும் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நின்றன. இவ்விரு தரப்பினருக்கிடையிலான சமபலம் இரண்டாவது உலக யுத்தத்தைத் தொடர்ந்து வெளிப்பட்டது. முதலாளித்துவத்தைவிட சோஷலிசத்தினால் பல சாதனைகளை நிகழ்த்த முடியும், உலகத்தை சமத்துவமான பாதையில் மாற்றியமைக்க முடியும் என்பதைக் கடந்த நூற்றாண்டில் சோஷலிசம் நடைமுறையாக்கிக் காட்டியது.

ஆனால் அமெரிக்காவும் அதன் முதலாளித்துவக் கூட்டாளி நாடுகளும் சோஷலிசத்தை எதிர்த்து அதனைச் சிதைப்பதில் ஈடுபட்டு சோவியத் யூனியனை உடைப்பதில் வெற்றி பெற்றுக் கொண்டன. இதில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பங்கும் பணியும் மிக முக்கியமானதாகும். தமது உலக மேலாதிக்கம் என்ற பாதையில் சோஷலிசம் பெரும் சவாலாகவும் தடையாகவும் இருப்பதைச் சகல வழிகளாலும் உடைப்பதில் அமெரிக்கா தற்காலிக வெற்றியை அடைந்து கொண்டது. அத்துடன் சோஷலிசத்தின் காரணமாக உருவாகிய உலக நாடுகளது தேசிய முற்போக்குப் பாதைகள் வழி மறிக்கப்பட்டு அவற்றின் திட்டங்கள் முறியடிக்கப்பட்டன.

> உலகம் முழுவதையும் ஒரே குடையின் கீழ் கொண்டுவந்து அதன் அதிபதியாக இருப்பதே அமெரிக்காவின் மேலாதிக்க கனவாகும். அதற்குத் துணைபோக நிற்பவர்கள் உள்நாட்டு உயர்வர்க்க மேட்டுக்குடி அதிகார சக்திகளாவர்

அதேவேளை அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது உலக மேலாதிக்கத்திற்கான மூல உபாயத்தின் ஒரு பிரதான பகுதியாக உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலை நடைமுறைக்கு கொண்டு வந்தது. அதற்கு அதிவிரைவாக வளர்ச்சி கண்ட விஞ்ஞான தகவல் தொழில்நுட்பம் ஏற்றவிதமாகப் பயன்படுத்தப்பட்டது. இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தாராமயம், தனியார் மயம், உலக மயமாதல் என்பன விரைவாக விரிவு படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றைச் சாத்தியமாக்கு வதற்கு உலக வங்கி, சர்வதேச, நாணயநிதியம். உலக வர்த்தக அமைப்பு உட்பட ஏகாதிபத்தியத்தால் வழிநடத்தப்படும் அரசு சார்பாற்ற நிறுவனங்கள் யாவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எங்கும் எதிலும் ஏகாதிபத்திய உலக மயமாதலை முதன்மைப்படுத்தி முன்தள்ளி வரும் போக்கு தலைதூக்கி நிற்கின்றது. பொருளாதார அரசியல் சமூக கல்வி பண்பாட்டுத் தளங்கள் யாவற்றிலும் இந்த உலகமயமாதல் நச்சு நிகழ்ச்சித் திட்டம் கேள்வி நியாயம் இன்றிப் புகுத்தப்பட்டு வருகின்றது.

இந்நிலையிலே அரசியல் சுதந்திரம் பெற்றதாகக் கூறிக் கொண்ட ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகள் இடைக்காலத்தில் தாம் மேற்கொண்ட தேசிய சுயசார்பு சுதந்திர பொருளாதார அரசியல் பாதையில் இருந்து வழிமறிக்கப்பட்டு உலகமயமாதல் என்ற திசையில் திருப்பப்பட்டுள்ளன. ஏகாதிபத்திய தேர்ச்சில்லுடன் அவை பலவந்தமாகப் பிணைக்கப்பட்டுள்ளன. ஏகாதிபத்தியத்தின் மறுகொலனியாக்கமான உலகமயமாதல் போக்கை நியாயப்படுத்தும் போக்கும் அதனை இருகரம் நீட்டி வரவேற்கும் நிலைக்கு மூன்றாம் உலக நாடுகளின் ஆட்சி அதிகார சக்திகள் முன்வந்து செயல்படுகின்றன.

இத்தகைய ஆட்சியதிகார சக்திகள் மூன்றாம் உலக நாடுகளின் நிலவுடமை முதலாளித்துவ வழிவந்த மேட்டுக்குடி ஆளும் வர்க்க சக்திகளேயாகும். இலங்கையின் இருபெரும் பாராளுமன்றக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் மேற்கூறிய மேட்டுக்குடி ஆளும் வர்க்க கட்சிகளேயாகும். இவற்றில் ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பம் தொட்டு பிரித்தானிய அமெரிக்க ஏகாதிபத்திய அடிவருடும் கட்சியாகவே இருந்து வந்துள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியானது 1956 - 1977 கால கட்டத்தில் குறிப்பிட்டளவுக்கு ஏகாதிபத்திய எதிர்ப்பில் இருந்து வந்தபோதிலும் 1994க்குப்பின் ஏகாதிபத்தியப் பிடிக்குள் வீழ்ந்து கொண்ட கட்சியாக மாறிக் கொண்டது. இவ்வாறே தமிழ்க் காங்கிரஸ் தமிழரசு கட்சிகளும் அதன் பின்னான தமிழர் கூட்டணி தமிழ்க் கூட்டமைப்பு என்பனவும் அமெரிக்க சார்பு நிலைப்பாட்டையே எடுத்தன. தமிழர் மேட்டுக்குடியினரைப் பிரதிநிதித்துவப் படுத்திய இவை ஒருபோதும் உள் நாட்டிலும் உலக அளவிலும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தையோ அதன் உலக மேலாதிக்கத்தையோ எதிர்த்து நின்றது கிடையாது. அவ்வாறே பின்வந்த தமிழர் விடுதலை இயக்கங்கள் கூட அமெரிக்க மேலாதிக்க எதிர்ப்பை முன்வைக்க முடியாதவைகளாகவே நடந்து கொண்டன. இன்று விடுதலைப் புலிகள் இயக்கம் கூட உத்தியோக பூர்வமாக அமெரிக்காவின் மேலாதிக்க நிலைப்பாட்டை எதிர்க்க முடியாது நிற்கின்றது. உலக மயமாதல் நிகழ்ச்சி நிரலின் ஊடாக உலக மேலாதிக்கத்திற்கு முனைந்து நிற்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தைப் பற்றி எந்தவொரு நாடும் எந்தவொரு கட்சியும் அல்லது தனி நபர்களும் எத்தகைய கண்ணோட்டத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பதிலேயே அத்தகையோரது உண்மையான நிலைப்பாட்டினைத் தெளிவாகக் கண்டுகொள்ள முடியும்.

ஆதலால் உலக மேலாதிக்கத்திற்கான அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் அதன் அடிவருடிகளாகச் செயல்பட்டு நிற்கும் உள்நாட்டு அதிகார மேட்டுக்குடி ஆளும் வர்க்கத்தினரையும் எதிர்த்து முறியடிக்காமல் மக்களுக்கும் நாடுகளுக்கும் விடுதலை கிடைக்க முடியாது.

www.padippakam.com



# உலக வங்கியின் நாசகார ஆலோசனைகள்!

நெல் உற்பத்தியாளர்கள் தமது உற்பத்தியை விற்க முடியாது அவதியுறுவதாக அண்மைய செய்திகள் வெளியாகியுள்ளமை தெரிந்ததே. இதன் விளைவாக விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு தமது உற்பத்திக்கு அரசு நியாய விலை கொடுத்து கொள்வனவு செய்ய வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தனர். இவ்வாறான நிலை ஏற்பட்டது இது முதற் தடவையல்ல. இதற்கு முன்னரும் உருளைக் கிழங்கு. மிளகாய், பெரிய வெங்காயம் ஆகிய உப உணவு உற்பத்தியாளரும் அவ்வப்போது தமது பொருள்களை விற்பதில் சிரமங்களை எதிர்நோக்கினர்.

1997ல் அரசு அரிசிக்கான 35% தீர்வையை நீக்கி அரிசியைத் தாராளமாக இறக்குமதி செய்ய அனுமதித்தது. இதே விதமாகவே உருளைக்கிழங்கு, மிளகாய், பெரிய வெங்காயம் போன்ற உப உணவுப் பொருள்களும் தாராளமாக இறக்குமதி செய்ததன் மூலம் அவற்றை உற்பத்தி செய்தவர்கள் பெரிதும் பாதிப்புக்கு ஆளாகினர்.

குறிப்பாக வடபகுதி விவசாயிகளுக்கு பாடம் புகட்ட முற்பட்டதன் விளைவாகவே உபஉணவுப் பொருள்கள் தாராளமாக இறக்குமதி செய்யப்பட்டன. வடபகுதி விவசாயிகள் விளைவித்த உப உணவு உற்பத்திகள் தன்னிறையை எட்டும் நிலையிலேயே தனிநாட்டுக் கோரிக்கைக்கு அவர்கள் ஆதரவளிக்கின்றனர் என்ற நிலைப்பாட்டை முறியடிக்க ஜே.ஆர்.தாராளமாக அவ் உற்பத்திகளை இறக்குமதி செய்ய அனுமதித்தார். கொள்ளை இலாபம் சம்பாதிக்கும் அவரின் தரகு வர்த்தக அடிவருடிகளுக்கு உதவிய அதே வேளை வடபகுதி விவசாயிகளைப் பட்டினி போட்டார். இதன் காரணமாகவே பெருந்தொகை இளைஞர்கள் நாட்டைவிட்டு வெளியேறினர். ஒரு பகுதியினர் ஆயுத மேந்தினர்.

இலங்கையின் சனத்தொகையில் முக்கால் பங்கினர் (75%) பிரதானமாக கிராமப்புற விவசாயத்துறையிலேயே தங்கியுள்ள நிலையில் அரசு பல்தேசிய கம்பனிகளின் ஆணைக்கு இணங்கி விவசாயத்துறையை உதாசீனம் செய்து வருகிறது.

**ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகளைச் சார்ந்து நின்றே நமது பொருளதாரத்தை வளர்க்க வேண்டும் என அடிமைத்தனமாகப் பேசியுள்ளார் வர்த்தக நுகர்வு அமைச்சர் ரவி கருணநாயக்கா**

இலங்கையிலும் பெரும்பாலான ஆசிய நாடுகளிலும் அரசாங்கங்கள் வளரும் கைத்தொழில் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் சீர்திருத்தங்களில் ஈடுபட்டு வருகின்றன. இலங்கையின் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினையை உலகமயமாக்கலிருந்து விடுபட்ட நிலையில் பார்க்க முடியாது. வளர்ந்த நாடுகள் வளர்ச்சியடையும் நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவப் போவதில்லை என்பதை அண்மையில் தோல்வியில் முடிவடைந்த கான்கூன் மகாநாடு அப்பட்டமாக விளங்க வைத்தது. வளர்ச்சியடைந்த நாடுகள் தமது நாடுகளில் விவசாயத் துறைக்கு வழங்கும் மானியத்தைக் குறைக்க மறுத்துள்ளன. இந்த நிலையிலேயே வளர்ச்சியடைந்த நாடுகளின் விவசாய உற்பத்திப் பொருள்கள் மலிவு விலையில் உலக சந்தையை இடம் பிடிப்பதன் மூலம் தென்னாசிய நாடுகளின் விவசாய உற்பத்தி பாரிய நெருக்கடிக்குள்ளாகிறது. இலங்கை போன்ற நாடுகளில் விவசாயிகளுக்கு வழங்கும் மானியத்தை குறைக்கும்படி அல்லது நிறுத்தும்படி உதவி வழங்கும் முதலாளித்துவ நாடுகள் நிர்ப்பந்திப்பதன் மூலம் எமது நாட்டில் விவசாய உற்பத்தியைக் குறைவடையச் செய்து தமது நாட்டின் மேலதிக உற்பத்தியை இலங்கையில் கொட்ட முயன்று வருகின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் பசளைக்கான மானியம் இந்த அரசு பதவிக்கு வந்தபின் குறைக்கப்பட்டது நினைவு கூரத்தக்கது.

உலக வர்த்தக அமைப்பு (WTO) 1996ல் இலங்கைக்கு நிர்ப்பந்தம் செய்து உப உணவுப் பொருள்களை உற்பத்தி செய்பவர்களுக்கிருந்த பாதுகாப்புத் தீர்வையை நீக்கியது. வேறுவகையில் சொல்வதானால் உபஉணவு உற்பத்திகள் உள்நாட்டு உற்பத்திகளைப் பாதுகாக்குமுகமாக இருந்த இறக்குமதிக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன.

ஏனைய வளர்முக நாடுகளில் விவசாயம் பாதுகாப்புத் தீர்வையானது சராசரி 31% ஆக இருக்கும் அதே வேளை இலங்கையில் அது 10.5% ஆகமட்டுமேயுள்ளதாக உலக வங்கி 'தென்னாசியாவில் வர்த்தக கொள்கை' என்ற தலைப்பில் தகவல் வெளியிட்டுள்ளது. இதிலிருந்து நாம் என்ன விளங்கிக் கொள்ள முடியும். ஏனைய தென் ஆசிய நாடுகள் தமது நாடுகளில் விவசாயத்துறையைப் பாதுகாப்பதற்கு கூடிய அக்கறை செலுத்துகின்ற அதேவேளை இலங்கை அரசு ஒரு பெயரளவிலான பாதுகாப்பையே வழங்குவதை அவதானிக்க முடிகிறது. இது உலக வங்கியின் நாசகார ஆலோசனைக்கு இணங்கவே செய்யப்படுகிறது.

நமது விவசாயத்துறை எங்கே செல்கிறது என்பதை அரசின் விவசாய அமைச்சு வெளியிட்ட புள்ளிவிபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

1990ல் விவசாயத்துறையானது இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியில் 23.20% ஆக இருந்தது. அச்சமயம் அத்துறையானது 44.70% மான மக்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கியது.

2000ம் ஆண்டு விவசாயத்துறையின் பங்களிப்பு 19.40% ஆகக் குறைந்தது. அப்போது அத்துறையானது 36மூ மக்களுக்கு மட்டுமே வேலைவாய்ப்பை வழங்கியது.

2001ம் ஆண்டிலும் தேசிய உற்பத்திக்கு விவசாயத்துறை 19.40% பங்களிப்பை மட்டுமே செய்தது. இதன் காரணமாக வேலை வாய்ப்பு 32.4% ஆக வீழ்ச்சி கண்டது.

இதன் விளைவு என்ன 1990ல் 44.70% மக்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கிய விவசாயத்துறையானது 2001ம் ஆண்டில் 32.4% மானவர்களுக்கு மட்டுமே வேலை வாய்ப்பை வழங்கியது.

விவசாயத்துறை வீழ்ச்சியை நிவர்த்தி செய்ய கைத்தொழில் வளர்ச்சி இடம் பெற்றதா? அதுவும் இல்லை, சேவைத்துறைக்கே அரசு முன்னுரிமை வழங்குகிறது. இதையே பொருளாதார வளர்ச்சி என்று புள்ளிவிபரங்கள் காட்டி பம்மாத்துச் செய்கிறது. விவசாயத்துறை மட்டுமல்ல உள்ளுர் கைத்தொழில்களும் தங்கு தடையற்ற இறக்குமதியால் பெரும் நெருக்கடியில் சிக்கியுள்ளன. பல உள்ளுர் கைத்தொழில்கள் கைவிடப்பட்டு தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. பல மூடும் தறுவாயில் உள்ளன. பல்தேசியக் கம்பனிகளின் வரவிற்கும் அவற்றின் மூலதன ஆதிக்கத்திற்கும் ஈடுகொடுக்க முடியாது உள்ளுர்க் கைத்தொழில்கள் ஒன்றன் பின் ஒன்றாக ஒழிந்து வருகின்றன. நாம் சொந்தக் காலில் நிற்பதற்கான தேசிய பொருளாதாரத்தை முன்னெடுப்பதற்கு தடையாகவே உலக வங்கி ஆலோசனை வழங்குகிறது.

நமது விவசாயப் பொருளாதாரமும் அதற்கு உறுதுணைவகிக்க வேண்டிய கைத்தொழில் துறையும் திட்டமிட்ட வகையில் நலிவிற்கும் அழிவுக்கும் உள்ளாக்கப்பட்டு வருகின்றன. அதற்கு இன்றைய அரசாங்கம் மட்டுமன்றி முன்னைய ஆட்சியினரும் பங்களிப்பு வழங்கி வந்துள்ளனர். அண்மையில் மெச்சிக்கோவின் கன்கூன் மாநாட்டில் நமது நாட்டின் பிரதிநிதிகள் முதலாளித்துவ நாடுகளின் துதி பாடிகளாகவே நடந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகளைச் சார்ந்து நின்றே நமது பொருளாதார வளர்ச்சியை முன்னெடுக்க வேண்டும் என அமைச்சர் ரவி கருணாரத்தினா இம்மாநாட்டிற்குப் பின் கூறிய கூற்று வெட்கம் கெட்டதும் ஆழ்ந்த சிந்தனைக்கும் உரியதாகும்.

# கல்வியும் சமூகமும்

## ஒரு வரலாற்றுப்புல நோக்கு

இன்று கல்வி எனும் போது பாடசாலைகளும் பல்கலைக்கழகங்களுமே முதலில் நம் மனதுக்கு வருகின்றன. எனினும் நாம் இன்று காணுகிற விதமான கல்வி நிறுவனங்கள் இந்த நாட்டில் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே தோற்றங் கண்டன. இவற்றை அறிமுகப்படுத்திய பிரித்தானியரின் மண்ணிலும் ஐரோப்பாவிலுங் கூடப் பாடசாலைக் கல்வி முறையும் பல்கலைக்கழகங்களும் சில நூற்றாண்டுகள் பழமையானவையே. கல்வி பற்றி இன்று முன்வைக்கப்படுகிற நவீனக் கொள்கைகளும் கல்வியின் இலக்குக்கள் எனப்படுகின்றவையும் கடந்த ஒரு நூற்றாண்டுக்குள் நிகழ்ந்த சமூக மாற்றங்களின் விளைவான வளர்ச்சியை அடையாளப்படுத்துகின்றன. ஒரு நாட்டின் கல்வியின் தரம், முனைப்பு, இலக்கு, பரவலாக்கம், வாய்ப்பு வசதிகள் போன்றவை அந்த நாட்டின் சமுதாய வளர்ச்சியின் ஒரு முக்கியமான அளவுகோல் எனலாம். ஒரு சமுதாயத்தின் உயர்வுக்கு அதன் கல்வியின் உயர்வு அவசியமானது. கல்வியின் உயர்வு எனும் போது அது அந்தச் சமூகத்தின் உடனடியானதும் நீண்டகாலத்தினதும் தேவைகளை எவ்வளவு தூரம் நிறைவு செய்கிறது என்ற கேள்வி அடிப்படையானது.

நமது நாட்டின் கல்விமுறை நமக்கு எவ்வளவு தூரம் பொருத்தமானது என்ற கேள்வி, நேரடியான கொலனி ஆட்சியிலிருந்து நாடு விடுதலை பெறுவதற்கு முன்பிருந்து, பலவேறு கோணங்களிலிருந்தும் எழுந்துள்ளது. இன்று நமது கல்விமுறை மிகுந்த நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கின்றது என்பது பரவலாக உள்ள ஒரு கவலை. கல்வி நெருக்கடியின் தீர்வும் சமுதாய நெருக்கடியின் தீர்வும் நெருக்க மாக இணைந்துள்ளன. எனவே, சமுதாயம் பற்றியும் கல்வி பற்றியும் அக்கறை உடைய நாம், அவற்றில் இதுவரை ஏற்பட்டுள்ள வளர்ச்சியை அறிவதன் மூலமே அவற்றை உயர்வு நோக்கிச் செலுத்த முடியும்.

நாகரிகமடைந்த மனித சமுதாயங்களிற் கல்விக்கு ஒரு முக்கியமான பங்கு இருந்து வந்துள்ளது. அக்கல்வியின் தன்மை அதன் காலத்துக்குரிய சமுதாயத்தின் தன்மையையும் தேவைகளையும் அடையாளப்படுத்தி வந்துள்ளது. பாடசாலைகளோ பாடசாலையை ஒத்த நிறுவனங்களோ தோன்றுவதற்கு முன்பிருந்த சமூகங்களிற் கல்வி இருந்து வந்துள்ளது. பழங்குடிச் சமூகங்களில் மக்கள் தமது குழந்தைகட்குப் பல்வேறு திறமைகளைப் பயிற்றுவிக்கிறார்கள். கூட்டமாக வாழுகிற சமூகங்களில் மக்களது வாழ்வின் தேவைகளை நிறைவு செய்யவும் மேலும் வளப்படுத்தவும் தொழிற் திறமைகளும் மொழி அறிவும் தேவைப்படுகின்றன. இதிற் பெரும் பகுதி சமூக நடைமுறையிற் பங்கு பற்றுவதாலும் மூத்தோரைப் பின்பற்றி நடப்பதாலும் பெறப்படுகின்றது. மொழி, பாடல், நடனம் போன்றவற்றிலும் வேட்டை, கமத்தொழில், மீன்பிடித்தல் போன்றவற்றிலும் சமூகத் தேவைக்கு வேண்டியளவான பயிற்சிக்குத் தனித்தனியே சிறப்பான பாடசாலைகள் அமையத் தேவையில்லை. திறமைகள் கூட்டாகவும் தனியாகவும் தலைமுறை தலைமுறையாகத் தொடர்ச்சியாக வழங்கப்படுகின்றன. புதிய அறிவு நடைமுறை மூலம் பெறப்பட்டு அதுவும் அடுத்தடுத்த தலைமுறைகளைச் சென்றடைகிறது.

சமுதாயங்கள் மேலும் வளர்ச்சி பெற்று எளிமையான வேலைப் பங்கீட்டின் இடத்தில் சொத்துடைமைச் சமுதாயமும் சமூக ஏற்றத்தாழ்வுகளைப் பிரதிபலிக்கும் வேலைப்பங்கீடும் உருவாகும் போது, எல்லாருக்கும் பொதுவான கல்வி என்பது இயலாது போகிறது. அடிமைச் சமுதாயம் ஒன்று உருவாகின்ற போது, சமுதாயம் அடிமைச் சொந்தக்காரரும் அடிமைகளும் என்று இரண்டு பிரதான கூறுகளாகப் பிளவு படுகிறது. இங்கே அடிமைகளுக்குத் தேவையான திறமைகள் வெறுமனே அவர்களுக்கு இட்ட பணியைச் செய்வது பற்றியன மட்டுமே. அடிமைச் சொந்தக்காரர்கட்கு வேறு விதமான திறமைகள் தேவைப்படுகின்றன. சமுதாயத்தில் அவர்கள் தமது ஆதிக்கத்தைப் பேணுவதனால் அவர்களுக்குச் சமூகத்தை நிருவகிக்கும் திறமைகளும் தமக்குக் கீழுள்ளோரிடமிருந்தும் வெளியில் இருந்தும் வரும் ஆபத்துக்களிலிருந்து தம்மைக் காப்பாற்றும் திறமைகளும் தேவைப்படுகின்றன. அவர்களுக்கு அதிகம் ஓய்வு இருப்பதனால் பொழுது போக்கிற்கும் கலைகட்டும் உலகு பற்றிய அறிவுத் தேடலுக்குமான தேவையும் வசதியும் கிடைக்கின்றன. எனவே உயர்வானதும் தமக்குப் பயன்மிக்கதுமான முறையிற் பல விடயங்களைக் கற்கும் வாய்ப்பு அடிமைச் சொந்தக்காரர்கட்கும் அவர்களைச் சார்ந்தவர்கட்கும் கிடைக்கிறது. அடிமைகளுக்கான அறிவு அவர்களது உற்பத்தி ஆற்றலுக்குத் தேவையான அளவுக்கு மேலாகத் தேவையற்றதாகிறது. குறுக்குக் கேள்வி கேளாமல் சொன்னதைச் சரியாக விளங்கிச் செய்யும் அறிவுக்கு மேலான அறிவு அடிமை நிலையில் ஒருவரை நீண்ட காலம் வைத்திருக்காதல்லவா.

எனவே சமுதாயத்தில் கல்வி அறிவு என்பது வர்க்கங்களாகச் சமுதாயம் பிளவுபட்ட காலந்தொடங்கி வர்க்க அடிப்படையிலும் சமூகத்தின் வேலைப் பிரிவினையின் அடிப்படையிலும் பிரிவுபட்டே அமைந்துள்ளது.

~ பேராசிரியர் சி. சிவசேகரம் ~

மனித சமுதாயங்களில் உற்பத்தி முறைகளில் மாற்றத்திற்கும் உற்பத்தியின் பெருக்கத்திற்கும் அறிவு வழி செய்கிறது. அந்த மாற்றங்களை நடைமுறைப்படுத்தும் தேவையை யொட்டிச் சமுதாயங்களில் நெருக்கடியும் புரட்சிகர மாற்றங்களும் நேருகின்றன. சுதந்திரமும் கல்வியுரிமையும் முற்றாக மறுக்கப்பட்ட நிலையிருந்த அடிமையின் இடத்தில் வரையறுக்கப்பட்ட சுதந்திரமும் தன்னுடைய சொந்தத் தேவைகளையும் எசமான வர்க்கத்தின் உற்பத்தித் தேவைகளையும் நிறைவு செல்வதற்குத் தேவையான தொழில் அறிவைப் பெறவுங்கூடிய பண்ணையாட்களும் பிற ஊழியர்களும் உருவாகின்றனர். சமூகத்தின் வேலைப்பிரிவினைக்கு ஏற்றப்பட ஒவ்வொரு சமூகப்பிரிவும் தனது சமூக இருப்புக்குத் தேவையான அறிவையும் பயிற்சியையும் தனக்குள் வழங்கிக் கொள்கிறது.

அறிவு என்பது எப்போதுமே மனிதருக்கென வரையறுக்கப்பட்ட தேவைகள் சார்ந்து தன்னை மட்டுப்படுத்தக் கூடியதல்ல. எனவே சமுதாயத்திற் தனது இடத்தை அறிந்து தன்னைப் பேணிக் கொள்கிற சமூகப் பிரிவுகளிடையே தமது இருப்புப் பற்றிய கேள்விகள் எழுகின்றன. இவை மட்டுப்படுத்தப் படாவிட்டால் சமூகச் சமநிலை தளம்பத் தொடங்கும். எனவே, கல்வி என்பது தனிமனிதர் ஒருவரது உற்பத்தித் திறனை உச்சப்படுத்துமளவுக்கு வழங்கப்படும் அதே வேளை சமூக அமைப்பைத் தொடர்ந்தும் பேணிக் காக்கும் தேவையையொட்டி வரையறுக்கப்படுகிறது. சமூக வேலைப் பிரிவினையில் அடிப்படையான மாற்றம் ஏற்படுவதை எந்த ஒரு ஆளும் வர்க்கமும் விரும்ப நியாயமில்லை. அப்படியான மாற்றங்கள் துரிதமாக தொழில்நுட்ப வளர்ச்சியாலோ பொருளாதார வளர்ச்சியாலோ இயலுமாகும் போதும், வேலைப் பிரிவினையின் மாற்றம் உற்பத்தி உறவுகளில் ஆளும் அதிகார வர்க்கத்தின் இடத்தைப் பாதிக்காதபடி அந்த வர்க்கம் கவனித்துக் கொள்கிறது. துரிதமான மாற்றங்கள் ஏற்படாத நிலவுடைமைச் சமுதாயத்தில் 'அவரவர் அவரவருக்கு விதிக்கப்பட்ட இடம் ' என்ற கோட்பாடு பொதுவாகவே ஏற்கப்பட்ட ஒன்றாகவே இருந்து வந்துள்ளது.

இந்தியத் துணைக்கண்டத்தில் நிலவுடைமைச் சமூக வேலைப்பிரிவினை வருணாசிரமம் என்கிற இந்துத்துவக் கோட்பாட்டின் துணையுடன் இறுக்கமான சாதி முறையாக வடிவெடுத்த போது, ஒவ்வொரு வருணத்தாருக்கும் உரிய இடங்கள் தெளிவாகவே வரையறுக்கப்பட்டன.

அரச அதிகாரம் என்பது வன்முறை சார்ந்தது. எனவே அரசர்களை உள்ளடக்கிய சத்திரியர் எனப்படும் வருணத்தவரது கல்வியில் போர்த்தொழில் முதலிடம் பெற்றது. சமூகச் சிந்தனை மீது ஆதிக்கஞ் செலுத்திய பிராமணருடைய கல்வி சமயத் தொடர்பான விடயங்களிலும் மெய்யியலிலும் அழுத்தம் பெற்றது. நிலவுடமையாளர், வணிகர் போன்றோரைக் கொண்ட வைசிய வருணத்தாருடைய கல்வி அவர்களது சமூகச் செயற்பாடு சார்ந்த லௌகிக விடயங்கள் சார்ந்து அமைந்தது. உடல் உழைப்பாளர்களான சூத்திரர்கட்குக் கல்வி ஏ்னபது குலத்தொழிலுக்கு மேலாகத் தேவையற்றதாகவே கருதப்பட்டது. நால்வருண முறை நிறுவப்பட்ட பின் ஐந்தாவது பிரிவாக அடையாளங் காணப்பட்ட பஞ்சமர்கள் சமூகத்திற்குப் புறம்பான தீண்டத்தகாத தாழ்ந்தோராக ஒதுக்கப்பட்டதால் அவர்கள் கல்வி உரிமை பெருமளவிற்கு மறுக்கப்பட்டே வந்தது.

அதி உயர் நிலையிருந்த வருணத்தவரிடையே அடிப்படையான வேலைப் பிரிவினையும் முரண்பாடுகளும் இருந்தாலும் பிராமணர் போர்த் திறமையுடையோராகவும் அவற்றைப் பயிற்றுவிப்போராயும் இருந்துள்ளதற்கு மகாபாரதத்தில் நிறைய உதாரணங்கள் உள்ளன. அவ்வாறே சத்திரியருள்ளும் சமய மெய்யியல் பற்றிய ஈடுபாடு இருந்துள்ளது. மனு தருமம் வேதங்களை ஓதும் உரிமையை பிராமணர்கட்கு மட்டுமே வழங்கும் அதேவேளை அதை ஓதக் கேட்கும் உரிமையைக்கூடச் சூத்திரருக்கு மறுத்துள்ளது. இது அன்றைய வர்க்க சமுதாயம் தனது வேலைப் பிரிவினைக்கு ஏற்ற விதமாக வகுத்த ஒரு கல்விப் பிரிவினையையே குறித்து நிற்கிறது. அந்த விதிகளை மீறுவோருக்குக் கடுந் தண்டனைகள் விதிக்கப்பட்டன. அவை இன்று எவ்வளவு மனிதாபிமானமற்றவையாக நமக்குத் தோன்றினாலும் அன்றைய சமுதாய அமைப்பைப் பேணுகிற நோக்கில் அன்றைய அதிகார வர்க்கங்கட்கு அவை அவசியமாகவே இருந்தன. அவற்றை நீதியற்றவை என நிராகரிக்கிறபோது நாம் அவற்றுக்கு அடிப்படையான சமுதாய அமைப்பின் நீதியின்மையையும் சமகாலத்துக்கும் பொருந்தாமையையுஞ் சேர்த்தே நிராகரிக்கிறோம்.

இத்தகைய பின்னணியிலேயே அன்றைய கல்விமுறை ஒவ்வொரு சமூகப் பிரிவினருக்கும் வெவ்வேறானதாக அமைந்தது. எனினும் இந்தக் கல்விமுறையினூடு பலவேறு துறைகளிற் பெரும் அறிவு வளர்ச்சி இயலுமாயிற்று. எனினும் இவ்வளர்ச்சியை இயலுமாக்குவதில் மாற்றுச் சிந்தனைகளின் வருகைக்கு ஒரு பெரும் பங்கு இருந்தது.

-வளரும்.

படிப்பகம்

www.padippakam.com



# ஐக்கிய தேசிய முன்னணி அரசின் சுயரூபம் என்ன?

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்து இருபத்திரண்டு மாதங்கள் ஆகின்றன. பாராளுமன்ற சங்கீதக் கதிரை விளையாட்டுக்கு இணங்க பதவிக்கு வந்த ரணிலின் அரசாங்கம் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை வழமை போன்று ஒரு புறத்தில் வைத்து விட்டு சொத்து சுகம் படைத்த உயர்வர்க்க சக்திகளின் சொந்த நிகழ்ச்சி நிரலையே முன்னெடுத்து வருகின்றது. அந்த நிகழ்ச்சி நிரல் தயாரிப்பதிலும் நடைமுறைப்படுத்தலிலும் அந்நிய ஏகாதிபத்திய மேற்குலக சக்திகளே ஆலோசனையாளர்களாக இருந்தும் வருகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சி இலங்கையின் பாராளுமன்ற அரசியலில் புதிய கட்சியும் அல்ல. அல்லது கடந்த கால அட்டூழியங்களுக்காக மனம் வருந்தி தீக்குளித்து தன்னைப் புனரமைத்த புனிதமான கட்சியுமல்ல. இலங்கையின் நிலவுடமை முதலாளித்துவ மேட்டுக் குடியினரின் உயர் வர்க்க நலன்களைப் பாதுகாத்து நிலை நிறுத்துவதற்கான கட்சியாகவே தோற்றம் பெற்றது. இது வரை அந்தக கடமையை நிறைவேற்ற ஆட்சி அதிகார அடக்குமுறைகளின் ஊடாகப் பல்லாயிரம் இலங்கை மக்களை இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்து வந்த கட்சி என்பதைப் பலர் இலகுவில் மறந்து விடுகிறார்கள். அரசு அதிகாரத்தை என்னென்றும் உயர் வர்க்கம் சார்பாகத் தமது கைகளில் வைத்திருப்பதையும் அதன் மூலம் இலங்கையின் தொழிலாளர்கள் விவசாயிகள் உழைக்கும் மக்கள் தேசிய இனங்கள் அனைவரையும் அடக்கி ஆண்டு சொத்து சுகம் படைத்தவர்களின் நலன்கள் தேவைகள் என்பன வற்றைப் பாதுகாப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வந்துள்ளது. தன்னை நிலை நிறுத்தவும் பாதுகாத்துக் கொள்ளவும் அரசு யந்திரத்தைப் பயன்படுத்தி வந்துள்ளது. அத்துடன் அந்நிய ஏகாதிபத்திய சக்திகளைத் தமது







விசுவாசமான எசமானர்களாகவும் ஏற்று அடிமைத்தனமாக நடந்தும் வந்துள்ளது.

அவ்வாறே பிரதமரான ரணில்விக்கிரம சிங்கா இலங்கையை இரட்சிக்க வந்த புதியவகைத் தலைவரும் அல்ல. டி.எஸ்.சேனநாயக்கா டலிலி சேனநாயக்கா, ஜே.ஆர்.ஜெயவர்த்தனா போன்றவர்களின் வழியில் வாரிசாக வந்த மேட்டுக்குடி உயர்வர்க்க சக்திகளின் நம்பிக்கைக்கு உரிய பிரதிநிதியேயாகும். விசேஷமாக ரணில் ஜே.ஆர் ஆட்சிக்காலத்தில் அவரது நேரடிக்கண்காணிப்பில் ஆட்சித் தலைமைக்கான பயிற்சி பெற்றவர். அமெரிக்காவின் வெள்ளை மாளிகை நிர்வாகத்தின் முழு நம்பிக்கையையும் பெற்ற அமெரிக்க அடிவருடி. இதனை அண்மைய ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தில் அடிமை விசுவாசத்துடன் வெளிப்படுத்தியும் கொண்டார்.

இத்தகைய ஐக்கிய தேசியக் கட்சியும் அதன் பிரதமரான ரணில் விக்கிரமசிங்காவும் இன்று மக்கள் மத்தியில் தமது வழமையான சுயரூபத்தைக் காட்டுவதில் பின்னிற்கவில்லை. தொழிலாளர் விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்களுக்கு எதிரான வழிகளில் ஈ.விக்கிரமின்றி செயல்படுகின்றனர். உருவாக்கப்படும் புதிய சட்டங்களும் அவற்றின் கீழான நடைமுறைகளும் தொழிலாளர் விரோத மக்கள் விரோத நிலைப்பாடுகளாகவே வளர்ந்து வருகின்றன. இதனை ஒன்றன்பின் ஒன்றாக இடம்பெற்று வரும் வேலைநிறுத்தங்கள் மறியல் போராட்டங்கள் பகிஷ்கரிப்புகள் மூலம் காணமுடிகிறது. இவற்றுக்கு அரசியல் சதிப் பின்னணி என்று இலகுவாகப் பதில் கூறவே ஆட்சியினர் முற்படுகின்றனர். இது வழமையான ஆட்சி அதிகாரம் செலுத்துவோரின் வாய்ப்பாடேயாகும்.

உண்மையில் இன்றைய உலகச் சூழலில் அமெரிக்காவின் உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலுக்கு உட்பட்டு உலக வங்கி சர்வதேச நாணயநிதியம் உலக வர்த்தக அமைப்பு என்பன வற்றின் ஆலோசனைகளை முற்று முழுதாக ஏற்றுக் கொண்ட நிகழ்ச்சித் திட்டங்களையே ஐக்கிய தேசியக் கட்சியும் ரணில்விக்கிரமசிங்காவும் நடைமுறைப்படுத்தி வருகின்றனர். சுருங்கக் கூறின் நாடு சகலவழிகளாலும் மறுகொலனியாக்கம் செய்யப்படுகிறது. அதற்கு ரணிலின் ஆட்சி செங்கம்பள வரவேற்பு செய்தும் வருகிறது. பொருளாதார அரசியல் சமூக கல்வி பண்பாட்டுத்துறைகள் அனைத்தையும் நலகொலனித்துவ அமைப்பு முறையாகக் கட்டியெழுப்பி பூரணப்படுத்துவதே இந்த ஆட்சியில் உண்மையான நிகழ்ச்சி நிரல் திட்டமாகும்.

இதற்கு தேசிய இனப்பிரச்சினையும் அதன் காரணமான யுத்தமும் பெரும் தடையாக இருந்த காரணத்தினாலேயே சமாதான சூழலுக்கும் பேச்சு வார்த்தைக்கும் ரணில் அரசாங்கம் முன் வந்தது. இலங்கை அரசியல் பொருளாதார அக புறச் சூழலில் எழுந்த சமாதான முயற்சிகளை எவ்வகையிலும் நிராகரிக்கவோ புறந்தள்ளவோ கூடாது. ஏனெனில் யுத்தப் பிசாசை யார் கட்டுப்படுத்தினாலும் அதன் சாதக அம்சத்தை ஆதரிக்க வேண்டும். ஆனால் அதன் உள் நோக்கங்கள் பற்றி எச்சரிக்கையாகவும் இருத்தல் வேண்டும். எதிரியின் இயலாமை நிர்பந்தம் என்பனவற்றின் காரணமாக உருவாகும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் ஒடுக்கப்படும் மக்கள் சார்பாகப் பயன்படுத்துவது முற்றிலும் சரியானதேயாகும்.

எனவே ரணில் விக்கிரமசிங்கா தலைமையி லான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் உண்மை யான சுயரூபம் பெரு முதலாளித்துவ பேரினவாத ஏகாதிபத்திய சார்பு அரசாங்கம் என்பதில் எவ்வித மயக்கமும் இருக்க முடியாது. அதன் சொல்லும் செயலும் உயர்வர்க்க மேட்டுக் குடிகளின் நலன்களுக்கானவை என்பதிலும் இரண்டு கருத்துக்கு இடம் இல்லை.

ஆதலால் அதன் சமாதான முயற்சிகளின் சாதகமான அம்சங்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் அதேவேளை அதன் தொழிலாளர் விரோத மக்கள் விரோத நாட்டு விரோத ஏகாதிபத்திய அடிவருடல் என்பனவற்றுக்கு எதிரான வெகுஜனப் போராட்டங்களை விரிவுபடுத்தி முன்னெடுப்பது அவசியமாகும்.

# ஏகாதிபத்தியமும் பெண்களும்

இக்கட்டுரை நோர்வேஜிய தொழிலாளர் கம்யூனிஸ்ட் கட்சியின் (APK) தலைமைத் தோழரான கியர்ஸ்ற்ரி எரிக்ஸன் (KJERSTIO ERICSSON) எழுதிய 'தோழர்கள்! சகோதரிகள்!' என்ற நூலில் இருந்து மொழி மாற்றம் செய்யப்பட்டதாகும். (ஆ-ர்)

## பெண்களும் சீவனோபாயத் துறையும்

ஆன் வைற்ஹெட் (1984ல் வெளியான 'திருமணமும் சந்தையும்' என்ற நூலில் வெளியான அவரது கட்டுரையில், கானாவில் குஸாஸி மக்கள் குடியிருப்புக்களில் ஆண்கட்கும் பெண்கட்கும் இடையிலான உறவை ஆராய்ந்திருந்தார்). ஒரு குடும்ப அலகு என்பது அதற்குத் தலைவனாக ஒரு ஆணைக் கொண்ட பல உறவினரை உடையது. புராதன காலந் தொட்டுக் குடும்ப அலகுகள் தினைப்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வந்துள்ளனர். குஸாஸி மக்களது வழமையான உணவில் முக்கியமான பகுதியாகும். தினை பயிரிடுவதிற் குடும்ப உறுப்பினர்கள் எல்லாரும் உதவுவர். எனினும் குடும்பத் தலைவரே அதற்கு உரியவரும் அதைக் கட்டுப்படுத்துபவருமாவார். ஏறத்தாழப் பத்து நாட்கட்கு ஒருமுறை அவர் குடும்பத்தின் வயது வந்த உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ஒரு கூடை தினையை வழங்குவார். அடுத்த வழங்கீடு வரை, இது பத்து நாட்கட்குத் தாங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. குடும்பத் தலைவனின் மனைவியும் ஒரு கூடையைப் பெறுவார். அது அவருக்கும் அவரது குழந்தைகட்கும் போதுமானது என எதிர்பார்க்கப்படுகிறது.

தலைவரது மனைவி உட்படக் குடும்ப அலகின் உறுப்பினர் ஒவ்வொரு வருக்கும் குடும்ப அலகுக்குரிய பொதுவான காணித் துண்டுகட்கும் அப்பால், அவரவர்க்கு உரிய ஒரு சிறிய காணித் துண்டு உண்டு. தலைவரது மனைவி தினை பயிரிடப்படும் பொதுவான வயல் வெளிகளிற் பணிபுரிவார். அத்துடன் அவர் தனது தனிப்பட்ட காணித் துண்டிலும் தனது கணவரது தனிப்பட்ட காணித்துண்டிலும் வேலை செய்வார். அவரது கணவரது காணித் துண்டில் அவரை விட வேறெவரும் பணியாற்றுவது அருமை.

இந்தத் தனிப்பட்ட காணித் துண்டுகள் தமது தனிப்பட்ட நுகர்வுக்கான உணவைப் பயிரிடவோ விற்பனைக்குரிய பொருட்களை விளைவிக்கவோ பயன்படலாம். கணவன் மனைவியின் வளங்கள் இணைக்கப்படாதிருப்பதாலும் குடும்பத்தின் இருப்பு தனது பொறுப்பு என்பதாலும் மனைவி பெரும்பாலும் தனது தனிப்பட்ட காணித்துண்டைக் குடும்பத்தின் நுகர்வுக்கான உணவு உற்பத்திக்குப் பயன்படுத்தக் கூடும். வைற்ஹெட்டின் கருத்துப்படி குஸாஸி மக்களது வழமையான நம்பிக்கை ஏதெனில் பெண்கள் பசிமிக்க காலங்களிற் குழந்தைகள் உண்பதற்காக வேர்க்கடலை பயிரிடுகின்றனர். ஆண்கள் காசு சம்பாதிக்க மண்ணை உழுகின்றனர்.

ஒரு ஆண் தனது உற்பத்தியை விற்றுப் பெறும் பணம் அவருடையது. குடும்பத்தின் பிற உறுப்பினர்களுடன் அதைப் பகிரும் கடப்பாடு அவருக்கு இல்லை. எனவே, ஆண்கள், தமது சொந்தக் காணித்துண்டுகளில் விற்பனைக்கான பொருட்களை விளைவிப்பதிற் கவனஞ் செலுத்திப் பொதுவான வயல்களிற் தினை பயிரிடுவதிற் குறைய நேரம் செலவிடுவதில் வியப்பேதுமில்லை. இது இப்பிரதேசத்தில் தினை உற்பத்தியின் வீழ்ச்சிக்குக் காரணமாகியுள்ளது.

பொதுவான வயல்களிலிருந்து குறைந்தளவு தினை கிடைக்கப் பெறும் பெண்கள், குடும்பத்துக்கு உணவூட்டும் அதே பொறுப்புடன் உள்ளனர். வைற்ஹெட் பின்வரும் முடிவுக்கு வருகிறார்.

'ஆண்களுக்கு மாற்று வருமானம் பெறுவதற்கான வழிகளுக்கு வாய்ப்புள்ள அளவில், சீவனோபாயப் பயிர் உற்பத்தியில் ஏற்படும் எந்தவகைச் சரிவையும் வேறுபட்ட விதங்களிலேயே ஆண்களும் பெண்களும் உணர்கின்றனர் என்பது தெளிவு. இறுதி ஆராய்வில், ஆண்கள் குழந்தைகளின் சீவனோபாயத்துக்குப் பொறுப்பானவர்களாக இல்லை.' (திருமணமும் சந்தையும் ப.107)

விவசாய உற்பத்தியை உணவுக்கான பயிர்ச் செய்கையினின்று வணிகப் பயிர்ச்செய்கைக்கு மாற்றும் அபிவிருத்தி முன்மாதிரி எதுவும் தனிப்பட்ட குடும்பத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறு விதமாக அமையும், விளைவுகளை ஏற்படுத்துகிறது.

## மூன்றாம் உலகில் பெண்கள் – வேலை – சித்தாந்தம்.



சூடானில் நீள நைல்நதிப் பிரதேசத்தில் நடத்திய ஆய்வுபற்றி 1984ல் ப்றுஸெற்றி (மூன்றாமுலகில் பெண்கள், வேலை, சித்தாந்தம் என்ற நூலில்) முன்னதை ஒத்த முறையொன்றை வருணிக்கிறார். அங்கும் குடும்பத்தின் சீவனோபாயத்துக்குப் பெண்களே பிரதான பொறுப்பை ஏற்கின்றனர். எனினும் இப்பணி வரவரக் கடினமானதாகி வருகிறது. இதற்கான ஒரு காரணம் ஆண்கள் நிலத்தை விட்டு நீங்கி நகரங்களில் ஊதியத்துக்கான உத்தியோகங்களை நாடிச் செல்வதாகும்.

'இவ்வாறு, குடும்பத்தைக் காப்பாற்றுகிறவர்களான பெண்கள் சீவனோபாயத்துக்காகப் பண்ணைகளை நம்பியிருக்கின்றனர். இடையிடையே (மாதாமாதம் அல்லது சில மாதங்கட்கு ஒரு முறை) கிராமத்தை நீங்க நல்ல வாய்ப்புக்களைத் தேடிப் போன ஆண்களிடமிருந்து, மேலதிக வருமானமாகப் பணம் அனுப்பப் படுகிறது. ஆண்கள் சம்பாதிக்கும் மேலதிகமான வருமானம் குடும்பத்துக்காகச் செலவிடப்படும் அல்லது முதலிடப்படும் என்று அவசியமில்லை. அது எப்போதுமே சிறு பண்ணைகளை முன்னேற்றுவதற்குப் பயன்படுவதுமில்லை. மாறாக, நுகர் பொருட்களும் மது வகைகளும் கொள்வனவு செய்யவே மேலதிக வருமானம் பயன்படுகிறது. பல சந்தர்ப்பங்களில் இன்னொரு மனைவியையும் மணந்து அவரும் வீட்டுக்குக் கொண்டுவரப்படுகிறார். பெண்களோ, மாறாக, சமூகக் கொண்டாட்டங்கள், உடல்நலம், பாடசாலைக்கல்வி ஆகியவற்றுக்காக வருமானத்தைச் செலவிடுகிறார்கள்.' (மூன்றாமுலகில் பெண்கள், வேலை, சித்தாந்தம் ப.42)

நிலவரம் மோசமாவற்கு இன்னொரு காரணம் ஏதென்றால், திட்டமிடுவோரும் நிபுணர்களும் தமது பொருளாதார விருத்தி வேலைத் திட்டங்களிற் பெண்களைக் கணிப்பிலெடுப்பதில்லை. பெண்கள் இயல்பாகவே பாரம்பரியமான பகுதிக்குரியவர்களாகின்றனர். ஆண்கள் இயல்பாகவே நவீன பொருளாதாரச் செயற்பாடுகளிற் பங்கு பற்றுவோராகின்றனர். இன்றுவரை, பொருளாதார வளர்ச்சியின் விளைவு மேலுஞ் சமத்துவம் குறைந்த உலகம் என்று ஃபறுஸெற்றி கூறுகிறார். பெண்கள் பொருளாதார இலாபங்குறைந்த பொறுப்புக்களை ஏற்கக் கட்டாயப்படுத்தப்படுகின்றனர். பொருளாதார அபிவிருத்தியின் பேராலும் வினைத்திறன் மிக்க உற்பத்தியின் பேராலும் ஆண், பெண் பாலாரிடையிலான வேறுபாடுகள் வலுப்படுத்தப் படுகின்றன. இப்போது விவசாயத் துறையில் புதிய தொழில்நுட்பம் வணிகப் பயிர் உற்பத்தியை இலக்காக்கிச் செயற்படுகிறது. இத்துறையில் பெண்கள் பங்குபற்றுவது ஊக்குவிக்கப் படுவதில்லை. பெண்கள் சீவனோபாயப் பகுதியிலேயே தங்கியிருந்து மேலுங் கடினமான நிலைமைகளின் கீழ் தமது குடும்பங்கட்கு உணவைப் பெற்றுக் கொடுப்பதிலேயே கவனத்தைக் குவிக்கின்றனர்.

மொறாக்கோவின் கிராமியக் குடும்பங்களில் வருமானப் பரப்பீடு பற்றி வனெஸ்ஸா மஹெர் மேற்கொண்ட ஆய்வு பற்றி முன்னொரு போது குறிப்பிட்டிருந்தேன். இக் கிராமங்களில் ஆண்,பெண் வகிக்கும் பாத்திரங்களின் தோரணையின் இன்னொரு அம்சம் ஏதெனில், காசுப் பொருளாதாரத்தின் எல்லா அம்சங்களிலிருந்தும் பெண்கள் விலகி நிற்கவேண்டுமெனக் கருதப் படுகிறதாகும். இந்த நடைமுறை மரபுவழி மத நம்பிக்கைகட்கு உடன் பாடானது. பெண்கள் சந்தைக்குப் போய் வாங்குவதோ விற்பதோ கூடாது. அது 'கடவுளின் பார்வையில் வெட்கக்கேடானது'. இது எங்கே கொண்டு செல்கிறது. 1985ல் வந்த 'மூன்றாமுலகில் வேலையும் சித்தாந்தமும்' என்ற நூலில் மஹேர் பின்வருமாறு கூறுகிறார்.

குடும்ப வருமானத்திற் பணத்தை உள்ளடக்கிய பகுதி அதிகமாகும் போது பணத்துக்கும் பெண்களுக்குமிடையிலான பிரிவினை என்ற இலட்சியம். சம்பளத்துடனான உழைப்பினதும் மேலும் அடிக்கடி நிகழ்வதான விவசாய, கைவினைப்

தொடர்ச்சி 11ம் பக்கம்..

படிப்பகம்

www.padippakam.com



# உலகின் முதல் ஆயுத வியாபாரி அமெரிக்கா!

சுதந்திரத்திற்காகவும் உரிமைக்காகவும் ஆயுதமேந்துபவர்களை அமெரிக்கா பயங்கரவாதப்பட்டம் சூட்டி வருகிறது. ஆனால் உலகில் விற்கப்படும் ஆயுதங்களில் அரைவாசிக்கு மேற்பட்டவை அமெரிக்காவினால் விற்கப்படுபவையாகும்.

1998ல் இருந்து 2001 வரை யான காலப்பகுதியில் உலகில் விற்கப்பட்ட ஆயுதங்களை கணக்கிலெடுத்தால் சராசரியாக வருடமொன்றிற்கு பின்வரும் பெறுமதியில் ஆயுதவிற்பனை இடம் பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| **அமெரிக்கா** | - | **1400கோடி டொலர்** |
| **பிரிட்டன்** | - | **460 கோடி டொலர்** |
| **பிரான்ஸ்** | - | **340 கோடி டொலர்** |
| **ரஷ்யா** | - | **340 கோடி டொலர்** |
| **சீனா** | - | **50 கோடி டொலர்** |

உலகில் ஏதோவொரு மூலையில் நிமிடம் ஒன்றிற்கு ஒருவர் கொல்லப் படுகிறார்.

சிறு ஆயுதங்களே தற்பொழுது பெரிய அழிவைத் தரும் ஆயுதங்களாகவுள்ளதாக றெபேக்காபீற்றர்ஸ் கூறுகிறார். இவர் சிறு ஆயுதங்கள் தொடர்பான அனைத்துலக நடவடிக்கை கூட்டமைப்புக் குழுவின் தலைவராவார். சிறு ஆயுதங்களால் வருடந்தோறும் ஐந்து இலட்சம் பேர் கொல்லப்படுகின்றனர் எனவும் உலகில் இவ்வாறான ஆயுதங்கள் 65 கோடி பாவனையில் உள்ளதாக - உலகில் பத்துப் பேரில் ஒருவரிடம் ஆயுதம் உள்ளதாக பீற்றர்ஸ் மேலும் தகவல் வெளியிட்டுள்ளார்.

அமெரிக்காவில் இருபது கோடி ஆயுதங்கள் புளக்கத்தில் உள்ளன. உலகில் ஆயுதப்படையினருக்கு வெளியே உள்ள ஆயுதங்களில் மூன்றில் ஒன்று அமெரிக்காவில் தனிநபர்களின் கைகளில் உண்டு. இந்த ஆயுதங்களாலேயே தான் அமெரிக்காவில் பல்வேறு கொலைகளும் கடத்தல்களும் பாலியல் வல்லுறவுகளும் இடம் பெறுகின்றன.

கொலம்பியா உலகிலேயே ஆகக் கூடுதலான கொக்கேயின் போதைப் பொருள் உற்பத்தி செய்யும் நாடு. அந்த நாட்டில் செல்வந்தர்கள் தனிப்பட்ட ஆயுதப்படைகளைப் பாதுகாப்பிற்கு வைத்திருக்கின்றார்கள். இவர்கள் மிகப்பெரும் மாளிகைகளில் வசிக்கின்றனர். கொலம்பியாவில் போக்குவரத்தில் ஏற்படும் சாதாரண தகராறு கூட ஆயுதங்களைப் பிரயோகித்தே தீர்க்கப்படுகின்றன.

உத்தியோக புள்ளி விபரத்தின்படி 2002ம் ஆண்டில் பிரேசிலில் நாற்பதாயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

ஐ.நா வின் புள்ளி விபரத்தின்படி வருடமொன்றிற்கு ஒரு இலட்சம் சிறுரக ஆயுதங்கள் களவாடப் படுகின்றன.



இத்தனை ஆயுதங்களையும் உலகில் விற்று இராணுவமயப்படுத்த சர்வாதிகார ஊழல் மிக்க அரசுகளுக்கு அமெரிக்கா முட்டுக் கொடுக்கிறது. உண்மையான வன்முறைக்கும் மக்கள் மீதான பயங்கரவாதத்திற்கும் அமெரிக்காவே துணைநிற்கின்றது. அமெரிக்கா உலகில் 2001ம் ஆண்டில் விற்ற அல்லது வழங்கிய ஆயுதங்களின் பெறுமதி 1400 கோடி டொலர்கள் என மேலே குறிப்பிட்டோம். அதில் 39வீதமானவை வட ஆபிரிக்கா விற்கும் , மத்திய கிழக்கிற்கும் வழங்கப் பட்டன. ஆசிய , பசிபிக் பிராந்திய த்திற்கு 22% ஆயுதங்கள் விற்கப்பட்டன. பிரிட்டன் 72% ஆயுதங்களை வட ஆபிரிக்கா. மத்திய கிழக்குற்கு விற்றது, பிரான்ஸ், வட ஆபிரிக்கா,மத்திய கிழக்கிற்கு 40% ஆயுதங்களை விற்றது. ரஷ்ய ஆயுதங்களில் வட ஆபிரிக்கா, மத்திய கிழக்குற்கு 15% ஆயுதங்களை விற்றது.

மத்திய கிழக்கில் யுத்த சூழல் தொடர்ச்சியாக இருப்பதற்கு இந்த வல்லரசுகளின் ஆயுத விற்பனையே காரணம். இந்த வல்லரசுகள் இஸ்ரேலைப்பலப்படுத்தியும் , மத்திய கிழக்கில் பிற்போக்கு அரசுகளுக்கும் முட்டுக் கொடுப்பதாலேயே அப்பகுதியில் பதற்றமும் யுத்த சூழலும் நிலவுகிறது. ஆயுதங்கள் பிற்போக்கு அரசுகளுக்கு வழங்கப்பட்டு அந்தநாடுகளில் சுதந்திரத்திற்காகப் போராடுபவர்களைப் பயங்கரவாதிகளாக அமெரிக்காவும் - பிரிட்டனும் நாமம் சூட்டுகின்றன. அடக்கப்படும் மக்கள் ஆயுதம் ஏந்துவதைத் தடுக்குமுகமாகவே இந்த வல்லரசுகள் உலகில் ஆயுத வியாபாரம் செய்கின்றன. ஆயுத வியாபாரம் அமெரிக்கா-பிரிட்டனுக்கு பெரும் வருமானம் தரும் தொழிலாக விளங்குகிறது.

# எட்வர்ட் ஸய்யிட்
## ஏகாதிபத்திய எதிர்ப்புக் குரல் அடங்கியது

உலகறிந்த, ஏகாதிபத்தியவிரோத இடதுசாரி ஆய்வறிவாளரும் ,எழுத்தாளரும், விமர்சகரும் , செயலுக்கவாதியுமான எட்வர்ட் ஸய்யிட் தனது 67வது வயதில் 25.9.03 அன்று நீண்டகால புற்றுநோயின் விளைவாக உயிர்நீத்தார். 1935ல் ஜெருசலெம் நகரில் கிறிஸ்துவ குடும்பத்தில் பிறந்த சையிட் மாணவப் பருவத்திலேயே அமெரிக்கா சென்று குடியேறினார். தனது வாழ்நாள் முழுவதும் மூன்றாமுலகினதும் குறிப்பாகத் தன் பிறந்த மண்ணான பலஸ்தீனத் தினதும் நியாயமான தேவைகள் பற்றி அயராது குரல்கொடுத்து வந்தார்.

இலக்கியப் பேராசிரியராகக் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய அவர் காலப் போக்கில் பின்நவீனத்துவம் பற்றிய கடும் விமர்சனங்களையும் முன் வைத்தார். சமூக– இலக்கியத் துறையில் மேலைநாட்டுச் சிந்தனையில் மேலோங்கி இருந்த இனவாதச் சிந்தனையையும் குறிப்பாக இஸ்லாமிய விரோத முனைப்பையும் அடையாளங்காட்டி அவர் எழுதிய 'ஓரியன்ற்றலிசம் ' (கீழைத்தேயவியல்) 1978ல் வெளிவந்த முக்கியமான நூல். பண்பாட்டு மேலாதிக்கம் பற்றியும் அவர் விரிவாக ஆராய்ந்து எழுதி வந்தார். மியூசிக்கல் இலாபரேஷன்ஸ் கல்ச்சுரல் இம்பீரியலிசம் (சங்கீத ஆலாவரணம், பண்பாட்டு ஏகாதிபத்தியம்) என்பன முறையே 1991,1995ல் வந்த முக்கிய நூல்கள் பலஸ்தீனப் பிரச்சனைபற்றியும் இஸ்லாமிய விரோதம் பற்றியும் அவர் பல பயனுள்ள நூல்களை எழுதியிருந்தார். அவர் பல அரபுப் பத்திரிகைகளில் காலத்துக்குக்காலம் மத்தியகிழக்கு விவகாரம்கள் பற்றி எழுதிய கட்டுரைகள் பல ஏடுகளில் மறுபிரசுமானவை. இறுதிவரை நீதிக்காகக் குரல் கொடுத்து வந்த அவரது இழப்பு உலகின் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஒரு பேரிழப்பாகும். குறிப்பாக பலஸ்தீன மக்களுக்காக அவர் ஆற்றிய பணி மகத்தானது.

அவரது துணிவான தயக்கமற்ற நெற்றிப் பொட்டில் அடித்தாற் போன்ற சொற்கள் அவருக்குப் பலரது பகைமையைச் சம்பாதித்தன. யஸிர் அரபாத் பற்றிய அவரது விமர்சனங்கள் கடுமையானவை. அதனால் அவரது நூல்கள் பலஸ்தீனத்தில் தடைசெய்யப்பட்ட வினோதமும் நிகழ்ந்தது. எனினும் அரபாத் மீது இஸ்ரேல் தொடுத்துவரும் நெருக்குவாரங்களை எதிர்த்து மிகவும் கடுமையாகப் பேசியவரும் அவரே.

அமெரிக்காவின் ஸியோனிஸவாதிகள் பல்கலைக்கழகத்தில் அவரது நூலகத்துக்குத் தீவைத்தனர். அவர் மீது இறுதிவரை ஸியோனிஸ வாதிகளின் கொலை மிரட்டல்கள் தொடர்ந்து வந்தன. அவர் எதையிட்டும் அஞ்சாது எதுவித சமரசமும் செய்யாது ஆய்வறிவாளர்கட்கு ஒரு முன்னுதாரணமாக வாழ்ந்தார். அவரது பங்களிப்புக்கள் நெடுங்காலத்துக்கு முக்கியம் வாய்ந்தவையாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

# சுதந்திர வர்த்தக உடன் படிக்கையும் இந்தியச் சுரண்டலும்

ஏற்கனவே புதிய பூமியில் இலங்கைக்கும் இந்தியாவுக்கு மிடையேயான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையால் (FTA) இந்தியாவே நன்மையடைகிறது என்பதைச் சுட்டிக்காட்டியிருந்தோம். தற்போது இந்தியாவுக்கும்-இலங்கைக்கு மிடையே இடம் பெற்றுவரும் ஏற்றுமதி-இறக்குமதியில் பல மோசடிகள் நடந்தேறிவருவதாக அறிய முடிகிறது. விமானத்திற்கான எரி பொருள் என்று வகைப்படுத்தி மண்ணெண்ணையை இந்தியக் கம்பனிகள் ஒன்று இறக்குமதி செய்ததை ஏற்கனவே அம்பலப்படுத்தயிருந்தோம்.

இப்போது இங்கிலாந்திலிருந்து செப்பு இறக்குமதி செய்யப்பட்டு அதை பெறுமதி சேர்க்கப்படாமலும் குறைந்த பெறுமதியை குறிப்பிட்டும் ஏற்றுமதி செய்வதன் மூலம் இலங்கைக்கு கிடைக்க வேண்டிய அன்னியச் செலவாணியை ஒரு கம்பனி மோசடி செய்துள்ளது. இந்தியாவுக்கு அனுப்பப் படவிருந்த(22) இருபத்திரண்டு கொள்கலன்கள் கொழும்புத்துறை முகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

இங்கிலாந்திலிருந்து கடந்த இரண்டு வருடகாலத்தில் இரண்டு கோடி இருபது இலட்சம் கிலோ செப்பு இறக்குமதி செய்யப்பட்டு பின்னர் இந்தியாவுக்கு மீள் ஏற்றுமதி செய்யப்பட்டது. இவற்றின் பெறுமதி மூன்று கோடி ஐம்பது இலட்சம் அமெரிக்க டொலர்களாகும். லண்டனில் உள்ள ஒரு நிறுவனமே உலகம் பூராவும் செப்பு உலோகத்தின் விலையை நிர்ணயிக்கிறது. அது நிர்ணயித்த விலையிலேயே இறக்குமதி செய்யப்படும் செப்பின் விலை குறிக்கப்பட்டு பின்னர் இந்தியாவுக்கு மீள் ஏற்றுமதி செய்யப்பட்டது.

இறக்குமதி செய்யப்படும் செப்பை இலங்கையில் ஆகக்குறைந்தது 35மூ பெறுமதி சேர்க்கப்படல் வேண்டுமென்ற விதி இருக்கிறது. அவ்வாறு செய்வதால் இலங்கையில் குறிப்பிட்ட சிலருக்காவது வேலைவாய்ப்பு கிடைப்பதோடு இந்தியாவுக்கு மீள் ஏற்றுமதி செய்யும் போது ஒரு குறிப்பிட்ட அன்னியச் செலவாணியும் கிடைக்கும்.

உள்நாட்டின் பெறுமதி சேர்க்கை செய்யாமலும் பண்டத்தின் பெறுமதியை குறைத்து விலையிட்டும் இறக்குமதி செய்வதன் மூலம் இலங்கைக்கு இரண்டு விதத்திலும் நட்டமேற்படுகிறது. இதில் இந்தியநிறுவனங்களே கொள்ளைலாபம் பெறுகின்றன. இலங்கையுடன் தொடர்பு வைத்திருக்கும் இந்தியநிறுவனங்களின் நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் கண்காணித்து உரிய நடவடிக்கை எடுக்காது கண்மூடி இருப்பதேன்? இந்தியா ஒரு புறத்தில் இலங்கை இனப்பிரச்சனையைச் சாட்டாக வைத்து மிரட்டி வருகிறது. மறுபுறத்தில் தனது நிறுவனங்களின் ஊழல் மோசடி கொள்ளைலாபம் என்பனவற்றுக்கு உறுதுணையாகவும் இருந்து வருகிறது. மேற்கூறியவை ஓரிரு உதாரணங்கள் மட்டுமே. இந்திய முதலீட்டாளர்கள் வர்த்தகர்கள் கம்பனிகள் என்போரது அப்பட்டமான சுரண்டல் ஊழல் மோசடி பற்றி தேசபக்தி தேசிய வளங்கள் பற்றிக் கூப்பாடு போடும் ஜே.வி.பி ,சிஹறல உறுமய ஏன் வாய்திறக்க வில்லை அவர்கள் ஏற்கனவே இந்திய ஆளும்வர்க்கத்திடம் வாய் நனைத்து விட்டார்கள் அல்லவா? நக்கினார் நாவிழந்தார் என்பது முற்றிலும் உண்மையேயாகும்.

# மகத்தான ஒக்ரோபர் சோஷலிசப் புரட்சியின்
## இலட்சியங்கள் வெற்றிபெற்றே தீரும்



உலகத்தின் தலைவிதியை மாற்றியமைத்த புரட்சிகளில் தலையாய புரட்சியே 1917ல் றஷிய நாட்டிலே வெடித்தெழுந்த ஒக்ரோபர் சோஷலிசப் புரட்சியாகும். இவ்வருடம் நவம்பர் 7ம் திகதி அதன் 86வது வருட நினைவாகும். றஷிய ஆளும் வர்க்கமும் அதன் உலக ஏகாதிபத்தியக் கூட்டாளிகளும் ஒக்ரோபர் சோஷலிசப் புரட்சியின் வெற்றிக் கனிகளை அடித்து வீழ்த்திப் புதைத்துவிட்டபோதிலும் அதன் மகத்தான இலட்சியங்கள் மீண்டும் மீண்டும் உலகின் முன்னே தனது சங்கநாதத்தை மீட்டிய வண்ணமே இருக்கின்றன.

உலகில் இதுவரை இடம்பெற்ற புரட்சிகளில் ஒக்ரோபர் சோஷலிசப் புரட்சி தலையாய புரட்சியும் உலகின் தலைவிதியை மாற்றியமைத்த புரட்சியும் என்று கூறுவது மிகைப்படுத்தப்பட்ட கூற்று அல்ல. அதன் வரலாற்று முக்கியத்துவம் கீழ்வரும் அம்சங்களில் அடங்கியிருப்பதைக் காணலாம்.

* மாக்ஸ் ஏங்கல்ஸ் ஆகிய சிந்தனையாளர்களால் அவர்களோடு இணைந்து செயல்புரிந்தவர்களின் முன் முயற்சியுடன் முன்வைக்கப்பட்டதே மாக்சிசமாகும். மாக்சிசத்தின் முதலும் மூலமுமான பாட்டாளி வர்க்கப் பிரகடனமே கம்யூனிஸ்ட் அறிக்கையாகும். உலகத்தை வெறுமனே வியாக்கியானம் செய்வதல்ல. அதனை மாற்றியமைப்பதே மாக்சிசத்தின் குறிக்கோள் என கம்யூனிஸ்ட் அறிக்கை அறைகூவி அழைத்தது.

* அத்தகைய மாக்சிச அறைகூவலைக் கையேற்று அதனை றஷிய மண்ணிலே தோழர் லெனினும் றஷிய போல்ஷ்விக் கட்சியும் நடைமுறைப்படுத்தியதன் மூலம் வெடித்தெழுந்ததே 1917 ஒக்ரோபர் சோஷலிசப் புரட்சியாகும்.

* பொருளாதாரச் சுரண்டலாலும் அரசியல் அடக்குமுறைகளாலும் ஒடுக்கபட்டு வந்த றஷிய பாட்டாளி வர்க்கமும் நிலப்பிரபுக்களின் அடிமை நுகத்தடியின் கீழ் வாய்பேசும் மந்தைகளாக நடாத்தப்பட்டு வந்த றஷிய விவசாயிகளும் ஏனைய உழைக்கும் மக்களும், அடக்கப்பட்ட தேசிய இனங்களும் லெனின் தலைமையிலான போல்ஷ்விக் கட்சியின் கீழ் அணி திரண்டே இச் சோஷலிசப் புரட்சியை முன்னெடுத்தனர்.

* தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் உழைக்கும் வர்க்க பெண்கள் உள்ளிட்ட மக்கள் மத்தியிலிருந்தே மாபெரும் செஞ்சேனை உருவாக்கப் பட்டு புரட்சி முன்னெடுக்கப்பட்டது. இதுவே உலகப் பாட்டாளி வர்க்கத்தின் முதலாவது ஆயுதம் தாங்கிய அர்ப்பணிப்புடன் போராடிய செஞ்சேனையாக விளங்கியது.

* தோழர் லெனின் தலைமையில் வெடித்தெழுந்த ஒக்ரோபர் சோஷலிசப் புரட்சி ஜார் மன்னராட்சியையும் அதன் அரசு யந்திரத்தையும் சுக்கு நூறாக உடைத்தெறிந்து றஷிய மண்ணிலிருந்து துடைத்தெறிந்தது. சகலவகைப் பிற்போக்குத்தனங்களும் அதன் பாதுகாவலர்களும் சோஷலிசப் புரட்சியால் வீழ்த்தப்பட்டனர்.

* தொழிலாளர்கள் விவசாயிகள் தேசிய இனங்களின் ஐக்கியத்துடனும் போராட்ட செயல் திறனுடனும் சோவியத் சோஷலிசக் குடியரசு தோற்றுவிக்கப்பட்டு முன்சென்றது. இதுவே மாக்சிசம் வகுத்தளித்த விஞ்ஞான சோஷலிசத்தை நடைமுறைப்படுத்திய உலகின் முதலாவது சோஷலிச நாடாகியது.

* முதலாளித்துவ சுரண்டல் அடக்குமுறை கொண்ட ஏற்றத்தாழ்வு மிக்க சமூக அமைப்புக்குப் பதிலாக இழப்பதற்கு எதுவுமற்ற நிலையில் அடக்கப்பட்டு வந்த தொழிலாளர்கள் விவசாயிகளால் புரட்சி செய்ய முடியும் என்பது மட்டுமன்றி ஆட்சியமைத்து சோஷலிசத்தை வெற்றிகரமாக முன்னெடுக்கவும் முடியும் என்பதை ஒக்ரோபர் சோஷலிசப் புரட்சியும் அதன் பின்னான சோஷலிச ஆட்சியமைப்பும் நடைமுறையில் எடுத்துக்காட்டியது.

* ஒக்ரோபர் சோஷலிசப் புரட்சியில் தீர்க்கப்பட்ட ஒவ்வொரு புரட்சிகர வேட்டும் உலகம் பூராவிலும் அடக்கியொடுக்கப்பட்டு வந்த மக்கள் நாடுகள் மீது எதிரொலித்து புரட்சிகர விழிப்புணர்வையும் போராட்ட மார்க்கங்களையும் தொடக்கி வைத்தது. ஐரோப்பிய எல்லைகளைத் தாண்டி மாக்சிசமும் புரட்சிகரப் போராட்டங்களும் வெடித்தெழுந்து உலகம் பூராவும் பரவிக்கொண்டன. மாபெரும் சீனப்புரட்சியும் கொரிய வியட்நாம் கியூப் புரட்சிகளும் வெற்றிபெற்றன.

* உலக முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தின் முன்னே சோஷலிசம் மாபெரும் சக்தியாக எழுந்து நின்று பல நாடுகளிலே பாட்டாளிவர்க்க ஆட்சி அதிகாரத்தின் கீழ் தீர்க்கப்பட முடியாத பிரச்சினைகள் பலவற்றுக்கு தீர்வுகள் காணப்பட்டன. வறுமை, கல்வியறிவின்மை, நிலமின்மை, வேலையின்மை என்பனவற்றை இல்லாதொழித்து பூரண சமத்துவத்தை நோக்கிய மனிதநேயப் பாதையில் சோஷலிசம் வெற்றிநடை போட்டது.

* அத்தகைய ஒக்ரோபர் சோஷலிசப் புரட்சி காட்டிய பாதையில் தற்காலிகப் பின்னடைவுகள் ஏற்பட்ட போதிலும் அதன் உண்மையான புரட்சிகர இலட்சியங்கள் தோல்வி காணமாட்டாதவைகளாகும். தொடர்ந்தும் உலகின் பாட்டாளி வர்க்கத்தாலும் அடக்கியொடுக்கப்பட்ட மக்களாலும் நாடுகளாலும் தேசிய இனங்களாலும் மகத்தான அவ் இலட்சியங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

* ஒக்ரோபர் சோஷலிசப் புரட்சியின் அடிப்படைகளைப் புதிய தலைமுறையினர் படித்தறிந்து நமது சொந்தப் பிரச்சினைகளுக்கு வழிகாட்டக் கூடியவாறு மாக்சிசம் லெனினிசம் மாஓசேதுங் சிந்தனை வழி நின்று செயற்படல் வேண்டும் என்பதை மகத்தான ஒக்ரோபர் சோஷலிசப் புரட்சியின் உன்னதமான நினைவு நாளிலே திடசங்கற்பம் கொள்வோம்.

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ்த் தேசியமும் குறுநலப் பித்தும் [19]

## கட்சி சாராத அரசியலும் வெகுஜன வேலைமுறையற்ற இயக்கமும் வெறும் மாயையே!

தமிழ் மக்கள் தமது தலைவிதியைத் தாமே தீர்மானித்துக் கொள்ள வேண்டுமெனில் தமிழ்த்தலைவர்கள் தான்தோன்றித்தனமாக செயற்படுவதைத் தடுத்து நிறுத்தவேண்டியது தலையாய கடமையாகும்.

தனியே தேர்தலில் தமிழ் அடையாளம் காட்டி ஒன்றுபடுவதும் - தமிழ் முனைப்பை வெளிப்படுத்தித் தமிழின் பெயரால் வாக்குகளைக் கூட்டிஅள்ளிச் சேர்ப்பதும்- அவற்றை வைத்துக் கொண்டு வாக்குவங்கியின் பேரில் சிங்களப் பேரினவாத அரசாங்கங்களுடன் பேரம் பேசி அரசியல் அரங்கில் ஆடிச் சமரசம் செய்து தத்தம் அலுவல்களில் ஈடேற்றம் காண்பதும்- பிரிவதும் தூஷிப்பதும் மீண்டும் மீண்டும் இனத்துவேசம் ஒன்றே தூய அரசியல் எனக் கூடுவதும் -ஒன்றாய் ஒரே குலமாய் தேர்தலில் நிற்பதும்- தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்தும்- தமிழின் தூய்மையின் பெயரால் செய்து வரப்படும் ஐம்பது வருடகால அரசியல் பம்மாத்தின் தொடர் கைங்கரியமாகும்.

இத்தகு தமிழர் விஷவட்ட அரசியல் சூழலிலிருந்து தமிழ் மக்கள் தம்மை விடுவித்து தற்காத்துக்கொள்ள வேண்டுமெனில் அரசியலை தமது கைகளில் ஏந்தத் தயாராக வேண்டும். எந்தவொரு மனிதரும் அரசியல் பிராணி என்ற இயற்கை நியதியிலிருந்து விலகியிருக்க முடியாது. எனவே பின்வரும் ஏழு அம்சங்களை ஒவ்வொரு மனிதரும் தன்னளவில் பூர்த்தி செய்து கொள்வதற்குத் தம்மைத் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறு தம்மைத் தயார்படுத்தவோ அல்லது இம்மியளவும் அரசியல் கலவாத் தூய்மையாளராகவோ வாழ விரும்பும் ஒருவர் ஊதாரித்தன அரசியல் வெற்று விமர்சகராக இருக்கலாமேயொழிய பொறுப்புள்ள ஒரு சமூக மாற்றத்துக்குரிய மனிதராக இருத்தல் சாத்தியமானதல்ல.

முதலாவதாக, எந்தவொரு மனிதரும் தன்னை அரசியல் செயற்பாட்டில் ஈடுபடுத்திக்கொள்வதில் தயக்கம் கொள்வதைத் தவிர்க்க வேண்டும். தனிமனிதர்கள் ஒவ்வொருவரும் அரசியல் கொள்கை, கோட்பாடு என்பவற்றை தேர்ந்து தெளிந்து கொள்வதுடன் மட்டுமன்றி தமது மனச்சாட்சிக்கு விரோதமின்றி ஏதேனுமொரு இயக்கத்துடனோ, கட்சியுடனோ தம்மை அடையாளப்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு எந்தவொரு ஸ்தாபனத்துடனும் தம்மை ஐக்கியப் படுத்திக் கொள்வதெனும்போது அத்தகைய ஸ்தாபனத்தில் ஓர் அங்கத்தவராகவோ அல்லது ஆதரவாளராகவோ அல்லது ஓர் அனுதாபியாகவோ கூட இருக்கலாம். இவ்வாறாக தமக்கும் அத்தகைய ஸ்தாபனத்துக்குமிடையிலான உறவை வெளிப்படையாக எங்கும் எப்போதும் எவரிடமும் கூறக் கூடிய துணிவு பெற்றிருக்க வேண்டும். இவ்விதமாக அரசியல் கட்சிகளுடனும் எவ்விதமான உறவுகளுமின்றி தமது அரசியல் அடையாளத்தை வெளிப்படுத்தத் தயங்குபவர்களும் தடுமாறுபவர்களும் உயர்வர்க்க நலனுடையோரும் மத்தியதர ஊசலாடும் மனோபாவமும் வாய்க்கப் பெற்றவர்களாக இருப்பதுடன் சந்தர்ப்பவாத அரசியலுக்கும் ஆதாயங்களுக்குமான 'வாடியிருக்கும் கொக்கு'ப் போன்றோராவார். இவர்கள் தம்மை தூய்மைவாதிகளாகவும் கண்ணியம்மிக்க அரசியல் புரிந்தோராகவும் வெளிப்படுத்திக் காட்டும் பொய் முகத்தோற்றமுடையோர் எனலாம்.

இரண்டாவதாக, பாராளுமன்றத் தேர்தல்களில் ஆட்சியாளர்களின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப தாமும் சேர்ந்து தேர்தல்களில் ஆடுபவர்களாகவோ அல்லது வெல்லக்கூடிய கட்சிக்கோ இயக்கத்துக்கோ வக்காலத்து வாங்குபவர்களாகவோ அன்றி ஸ்தாபனத்தின் இலக்கை வரித்துக்கொண்டு உண்மையின் பக்கத்திலும் நேர்மையின் பக்கத்திலும் தம்மை வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும். இதன் மறுமுனையில் பாராளுமன்ற அரசியல் விளையாட்டில் மக்களின் அரசியல் உளவியலுக்கு விரோதமாக தோல்வியே நிஜம் என்று எப்போதும் விரக்தியின் விளிம்பில் நின்று விளாசுவதும் வெறுக்கத்தக்கதாகும். பாராளுமன்றத் தேர்தலின் பிரச்சாரம் மூலமோ தொடர்ந்து பெறும் தோல்விகள் மூலமோ அரசியல் பணியை ஆற்றி ஆறி அமர்ந்துகொள்ள இயலாது. அரசியல் என்பதன் முற்றுமுழுதான களம் பாராளுமன்றம் என மயங்குவது விடுதலையை நேசிக்கும் மக்களின் நிஜமான அரசியலாக இருக்கமுடியாது. எனவே பாராளுமன்ற ஜனநாயகத்தை பயன்படுத்துவதில் மக்களுக்கு நம்பிக்கையையும் நன்மையையும் ஏற்படுத்துமென்பதுடன் ஸ்தாபன வளர்ச்சிக்கு உந்து விசையளிக்குமெனின் மட்டுமே அவற்றில் ஈடுபடல் வரவேற்கக் கூடியதாகும்.

**செண்பகன்**

> தமிழ் அடையாளம்
> தமிழ்ப் பெருமை
> தமிழ்த் தூஷிப்பு
> தமிழ் இனத்துவேசம்
> தமிழ் வாக்குகள்
> தமிழ்ச் சமரசம்
> இவைகளே 50 வருட
> தமிழ்த் தேசிய
> அரசியலின் பம்மாத்து

மூன்றாவதாக, அரசியல் என்பது பாராளுமன்ற எல்லைச் சுவர்களுக்கப்பால் பரந்த வெகுஜனத் தளத்தில் நிகழ்த்தப்பட வேண்டியதாகும். பொது மக்கள் மத்தியில் அரசியல் அறிவை ஊட்டுவதிலும் விழிப்புணர்வைத் தூண்டுவதிலும் விட்டுக்கொடுக்காத வேலைமுறையை தனிமனிதர்கள் ஒவ்வொருவரும் தாம் தாம் சார்ந்திருக்கும் ஸ்தாபனங்களின் வேலைத் திட்டங்களினூடாக முன்னெடுப்பதும் முக்கியமாகும்.

நான்காவதாக, அரசியல் வேலைத் திட்டம் என்பது வெறுமனே மக்களை ஏதிலிகளாக்குவதாகவோ அன்றேல் இரப்போராகக் கருதி இயக்கம் என்பது வள்ளன்மை மிக்க ஸ்தாபனமாகவோ வேடம்புனைந்து மேலாதிக்கம் புரிவதோ ஆகாது. மக்களுக்கு நெல்லும் மீனும் அன்றாடம் கொடுப்பதல்ல அரசியல் பணி. மக்கள் தமது அன்றாட வாழ்வை நடத்தும் ஆற்றல் பெற்றோராக ஆளுமை மிக்கோராக மாற்றம் பெறும்படி உழைப்பைக் காட்டுவதே அரசியல் பணியாகும். நெல்லும் மீனும் கொடுப்பதற்குப் பதிலாக உழைக்க உழுநிலம் மீன்பிடித்து வாழ தூண்டிலும் கிடைக்கச் செய்வதே அரசியலாக மாற்றம் பெற வேண்டும்.

ஐந்தாவதாக, மக்கள் மத்தியில் வெகுஜனத் தளங்களைக் கட்டியெழுப்ப வேண்டும். ஒவ்வொரு மனிதரும் தாம் வாழும் கிராமங்களிலோ நகரங்களிலோ அல்லது தத்தம் தொழில் நிலையங்களிலோ கடலிலோ வயலிலோ தொழிற்சாலைகளிலோ மக்களுடன் ஐக்கியப்பட்டு அவர்களின் பல்வேறு ஆற்றல்களையும் வெளிக்கொணர்ந்து ஒன்றுபட்ட சிந்தனைக்கும் செயலுக்கும் உரம் சேர்க்க வேண்டும்.

ஆறாவதாக, உலகமயமாதலின் கீழ் மக்கள் ஒவ்வொருவரும் தம்மைத் தனித்தனித் தீவுகளாக்கிக்கொண்டு தமக்கிடையே தளைகளை போட்டுத் தத்தளித்து நிம்மதி இழந்து கொண்டிருக்கும் இன்றைய சூழலில் ஒவ்வொரு மனிதரும் சமூக உணர்வு பெறும்படி அரசியல் விழிப்பையும் ஒற்றுமையின் பலத்தையும் அனுபவத்தில் உணரும்படி செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்தி "இன்பமே எங்கள் இலக்கு" என்ற இலட்சிய வேட்கை பூண்டோராக கலை-பண்பாட்டு விழுமியங்களைப் புத்தாக்கம் செய்து புதுப்பொலிவு பெறும் வண்ணம் ஒவ்வொரு மனிதரும் உறவு கொள்ளல் வேண்டும்.

ஏழாவதாக, எந்தவொரு பிரதேசமும் தத்தமது கருமங்களை தாந்தாமே செய்யக்கூடிய வல்லமை பெறக்கூடியதாக இருக்க வேண்டும். நிதிவளம் இரந்து பெறுவதாகவோ பணிந்து பெறுவதாகவோ அமையாது. சுயசார்பிலும் சொந்தக் காலிலும் நின்று செயற்படுவதாகவே மாற்றியமைக்கப் பெற வேண்டும். ஒவ்வொரு மனிதரும் தத்தமது நலனுக்காகவும் குடும்பத்தினருக்காகவும் சேமிப்பு நிதியை ஊக்குவிப்பது போன்று அவ்வவ் பிரதேச வளத்துக்கும் வளர்ச்சிக்குமாகப் பொது நிதியை சேர்க்கவும் சேமிக்கவும் தொழில் வாய்ப்பை அவ்வவ் பிரதேச மூலவளங்களுக்கேற்ப அபிவிருத்தி செய்யவும் அனைவரும் ஒன்றுபட்டு அரும்பணி ஆற்றுவதில் ஒருமுகமாகச் செயற்பட வேண்டும்.

மேற்குறித்த ஏழு விடயங்களிலும் தனிமனிதர்களும் ஸ்தாபனங்களும் ஒருமுகமாகப் பணிபுரியும்போது சமகாலக் குறுந்தேசிய குணாம்சங்களிலிருந்து தமிழ் மக்கள் தம்மைக் காத்துக்கொள்ள முடியுமென்பதுடன் மக்கள் புதிய அரசியல் பண்பாட்டை நோக்கி அவதானத்துடன் நடைபோட முடிவதுடன் மாயாவாத அரசியல் வேஷதாரிகளிடமிருந்து விலகி சொந்த பலத்தில் மக்கள் தம்மைத் தற்காத்துக் கொள்ளமுடியும்.


இத்தகு வல்லமை மிக்க மக்களின் அரசியல் வழிகாட்டியாக மக்கள் நலன் பேணும் அரசியல் கட்சி யொன்று செல்வாக்குடன் செயற் பட்டு புதிய அர்த்தங்களையும் புதிய அரசியல் போக்குகளுக்கும் கட்டியம் கூற முடியும்.

அரசியல் பண்பாட்டை வளர்த்தெடுப்பதன் மூலமே மக்களும் ஸ்தாபனமும் சிறப்படைய முடியும்.

இத்தகைய பண்பாட்டை வளர்த்தெடுக்கத் தமிழர் சமூகம் தன்னை தயார்ப்படுத்திக்கொள்ளுமா?

## அமெரிக்க ஜனநாயகமும் சட்டமும்

ஈராக் மீதான அமெரிக்காவின் ஆக்கிரமிப்புப் போரை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்ததற்காக, அமெரிக்காவின் அமைதி இயக்கத்தைச் சேர்ந்த மூன்று கன்னியாஸ்திரிகளுக்கு மூன்றரை ஆண்டுகள் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டுள்ளது. கொலோராடோ நகரில் நடந்த ஆர்ப்பாட்டத்தின் பொழுது, இந்த மூன்று கன்னியாஸ்திரிகளும் தங்களின் இரத்தத்தால் ஒரு ஏவுகணையின் மீது சிலுவையை வரைந்து, போருக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இது நாட்டின் பாதுகாப்புக்கு ஊறு விளைவிக்கும் செயல் எனக் குற்றஞ்சுமத்தி, அம்மூன்று கன்னியாஸ்திரிகளுக்கும் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டுள்ளது. இக்குற்றத்திற்கு 60 ஆண்டுகள் வரை தண்டனை அளிக்க முடியும் என்று நீதிமன்றம் மிரட்டியும் இருக்கிறது.



அமெரிக்க அரசால் தண்டிக்கப்பட்ட மூன்று கன்னியாஸ்திரிகளுள் ஒருவரான ஜாக்கி ஹட்சன்




## உலக அமைதியா, மக்கள் யுத்தமா?

"இன்று உலக மக்கள் அமைதியை வேண்டுகின்றனர். உலகின் அமைதியைக் குலைக்க முயல்வோர் பயங்கரவாதிகளே." என்ற கருத்து பெரு முதலாளிய நாடுகளின் தலைவர்களால் வற்புறுத்தப்படுகிறது. இந்த அடிப்படையிலேயே உலகில் அமைதியை நிலைநாட்டுவது என்ற பேரில் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் தொடுக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதத்தை ஒழிப்பது மட்டுமில்லாமல் பேரழிவு ஆயுதங்களை விருத்தி செய்கிறவர்களைக் கட்டுப்படுத்தும் நோக்கிலும் ஈரான், வட கொரியா ஆகிய நாடுகள் மீது பல நெருக்குவாரங்கள் ஏற்றப்படுகின்றன.

இலங்கையில் அரசின் அமைதிக்கான போர் எப்படியோ அது போலவே, உலகில் அமெரிக்காவின் பயங்கரவாத ஒழிப்புப் போரும், போரை ஒழிக்கும் போர், இவர்கள் ஒழிக்க முனைந்த போரை விடப் பயங்கரவாதமானது என்பது தான் உண்மை. எனவே சுரண்டும் அதிகார வர்க்கங்கள் எல்லாமே ஒரு வகையான அமைதியை விரும்புகின்றன என்பது உண்மை. அதை அடைய அவர்கள் எவ்வளவு உக்கிரமான போரைத் தொடுக்கவும் ஆயத்தமாக உள்ளார்கள் என்பதும் உண்மை.

மாக்ஸியவாதிகளும் உலக அமைதியை விரும்புகிறார்கள். அது வேறு வகையான அமைதி. அந்த அமைதியை அடையப் போராடியே தீர வேண்டும் என்பது அவர்களது நிலைப்பாடு. அதற்காக அவர்கள் பலவேறு வகையான போராட்டங்களை முன்வைக்கிறார்கள். அதில் ஆயுதமேந்திய புரட்சி என்பது அதி உச்சமான போராட்ட வடிவம். அந்தப் புரட்சியின் மிகவும் விரிவுபடுத்தப்பட்ட, மிகவும் சனநாயகமான வடிவமே மக்கள் யுத்தம்.

மேலோட்டமாகப் பார்க்கும் போது, ஏகாதிபத்தியவாதிகளும் பிற்போக்குவாதிகளும் அமைதி பற்றிப் பேசிக் கொண்டே போரில் இறங்குகிறார்கள்; மாக்ஸியவாதிகளும் அமைதி பற்றிப் பேசிக் கொண்டு போரை வற்புறுத்துகிறார்கள். யாருக்குமே அமைதியில் நம்பிக்கை இல்லையா என்ற கேள்வி எழுகிறது. அது முற்றிலும் நியாயமற்றதும் அல்ல.

ஏகாதிபத்தியம் ஈராக் மீது போர் தொடுத்து ஆக்கிரமித்துள்ள போது ஈராக்கிய மக்கள் போராடுகிறார்கள். ஒரு மாக்ஸியவாதி என்ன சொல்ல வேண்டும். அமைதியை வற்புறுத்த வேண்டும். ஆக்கிரமிப்பாளர்கள் வெளியேற வேண்டும் என்று வற்புறுத்த வேண்டும். ஆனால் ஆக்கிரமிப்பாளர்கள் தம்மை நிலைநிறுத்த முயல்கிறபோது ஈராக்கிய மக்கள் பேசாமலிருக்க வேண்டும் என்று சொல்ல முடியுமா, அவர்கள் சும்மா இருப்பதால் ஈராக்கிற்கு விடுதலையும் சனநாயகமும் வரும் என்று சொல்ல முடியுமா? மக்கள் எல்லா விதமான போராட்ட முறைகளையும் கையாள வேண்டாமா? ஆயுதந் தரித்த எதிரியுடன் ஆயுதம் தாங்காமற் போரிட முடியுமா? ஒரு மாக்ஸியவாதியின் அக்கறை ஏதென்றால் ஆக்கிரமிப்புக்கு எதிரான போர் இன்னொரு அடிமைத்தனத்துக்கான போராகஅமையக் கூடாது என்பது தான். எனவே இப்போர் சனநாயகமான ஒன்றாக, ஒன்றுபடுத்தக் கூடிய சகலரையும் ஒன்றுபடுத்துவதாக, மக்களை மதம், தேசிய இனம், மொழி, பிரதேசம் என்ற அடிப்படைகளிற் பிளவு படுத்தாத ஒன்றாக அமைவதை மனித சமத்துவத்தை முதன்மைப் படுத்துவதாக அமைவதையே ஒரு மாக்ஸியவாதி வேண்டி நிற்க முடியும். இத்தகைய போரை மறுப்பதால் கிடைக்கக்கூடிய அமைதி உண்மையான அமைதியல்ல. அது அழிவின் மீதும் அடிமைத்தனத்தின் மீதும் கட்டியெழுப்பப்பட்ட அமைதி. அது நிலைக்கக் கூடிய அமைதியல்ல.

எனவே மாக்ஸியவாதிகள் ஏற்கிற அமைதி ஆக்கிரமிப்பாளர்கள் நிபந்தனையின்றி வெளியேற வேண்டும் என்பதோடு இதுவரை செய்த கொடுமைகட்கான நட்ட ஈட்டையும் வழங்க வேண்டும் என்ற அடிப்படையிலான அமைதியாகவே இருக்க முடியும்.

ஈராக் பற்றிய வாதத்தை நம்மால் வேறு பல சர்வதேச நிகழ்வுகட்கும் பொருத்திப் பார்க்க முடியும். அது மட்டுமில்லாமல், நாடுகட்கு உள்ளேயும் அதைப் பொருத்திப் பார்க்க முடியும். அயல் முதலாளியமும் உள்ளூர் முதலாளியமும் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காகப் பலவேறு ஒடுக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விடுகிறார்கள். இதன் மூலம், தமக்கும் தம்மால் சுரண்டி ஒடுக்கப்படும் மக்களுக்கும் நடுவே உள்ள முரண்பாட்டைச் சில காலத்துக்காவது திசை திருப்புவதில் அவர்கள் வெற்றிபெறுகிறார்கள். தேசிய இன ஒடுக்கலுக்கும் சாதிய ஒடுக்குமுறைக்கும் மதவாத ஒடுக்குமுறைக்கும் எதிரான போராட்டங்கள் எல்லாமே வர்க்கப் போராட்டத்தின் மாற்று வடிவங்களே.

மாக்ஸியவாதிகள் இப்போராட்டங்களின் வர்க்கப் பரிமாணத்தை வற்புறுத்தி அவற்றைப் பரந்துபட்ட மக்களின் நலனும் அதிகாரமும் சார்ந்த ஒரு போராட்டமாக்குவதை வேண்டுகிறார்கள். தேசிய விடுதலையும், சாதியாதிக்கத்திலிருந்து விடுதலையும் மத நம்பிக்கையான சுதந்திரமும் அவற்றின் குறிப்பான இலக்குகளுக்கும் மேலாக ஒரு சமூக விடுதலைப் பரிமாணத்தை எய்துவதானால், விடுதலைப் போர் மக்கள் மயப்பட வேண்டும். இந்தளவில் மாக்ஸியவாதிகள் வற்புறுத்துகிற போர் மக்கள் மீது போரைத் திணிப்பவர்களிடமிருந்து மக்களை விடுவிப்பதும் போரே அற்ற உலகை உருவாக்குவதற்குமான போரேயாகும். அது உண்மையிலேயே நீதியான நிலைக்கக்கூடிய அமைதிக்கான போர்.

விடுதலைப் போராட்டங்கள் குறிப்பிட்ட தேசிய இனம், மதப்பிரிவு, சாதியினர் அல்லது இவ்வாறான சமூக அடையாளங்கட்குள் வரையறுக்கப்பட்டு ஒரு அடையாளத்தின் நலனை முதன்மைப் படுத்துமானால் விடுதலைப் போர் இன்னொரு அடக்குமுறைக்கு மட்டுமே வழி கோலும். அது மீண்டும் இன்னொரு அயல் ஆதிக்கத்துடன் சமரசம் செய்யவும் நேரும். எனவேதான் விடுதலைப் போராட்டத்தில் எந்த வர்க்க நலன்கள் முதன்மைப்படுத்தப்படுகின்றன என்பது மாக்ஸியவாதிகட்கு முக்கியமானது.

எவ்வாறு நோக்கினாலும் ஒரு உண்மை மட்டும் தெளிவாகிறது. மனிதரை மனிதர் அடக்கி ஒடுக்கி சுரண்டி வாழுகிற ஒரு சமுதாயத்தில் ஒடுக்குகிறவர்கட்கும் ஒடுக்கப்படுவோருக்குமிடையில் பகைமை தவிர்க்க இயலாதது. அது போராட்டங்கள் மூலமே தீர்க்கப்பட முடியும். ஒடுக்குகிற பகுதியினர் எப்போதுமே பூரண ஆயுதபாணிகளாகவும் படைபலத்துடனும் பயங்கர ஆயுதங்களுடனும் தம்மைப் பாதுகாக்கவும் தமக்குக் கீழ்ப்பட்டோரைப் பயமுறுத்திப் பணிய வைக்கவும் ஆயத்தமாக இருக்கிறார்கள். அவர்களது பார்வையில் அவர்களது ஆதிக்கத்துக்கு எதிரான எந்தச் சவாலும் அடக்கியொடுக்கப்பட வேண்டியது. இது அவர்களது கண்ணோட்டத்திற் சரியானது. எனவே அவர்கள் வேண்டுகிற அமைதியானது அவர்கட்குப் பூரண அடிபணிவு. அது இயலாதபோது ஆயுத வன்முறையும் போரும் தேவைப்படுகின்றன.

மறுபுறம் ஒடுக்குமுறைக்குட்பட்ட மக்கள் தரப்பில் ஆயுத வலிமை குறைவு. அவர்கள் சட்டத்துக்கு உட்பட்டும் அமைதியாகவுமே பொதுவாகப் போராடுகிறார்கள். அவர்கள் சட்டரீதியான முறையில் எதையுமே வெல்ல இயலாது போகும் போதே ஆயுதமேந்தும் தேவை ஏற்படுகிறது. ஒரு மாக்ஸியவாதி வற்புறுத்துகிற ஆயுதப் புரட்சி இந்தத் தவிர்க்க இயலாமையைப் பற்றியதே. ஒடுக்கப்பட்ட மக்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவர்கள் மீது வன்முறையும் போரும் திணிக்கப்படும். இது நாம் ஒன்றுக்குப் பலமுறை கண்ட சமகால வரலாறு.

தொடர்ச்சி 11ம் பக்கம்..

படிப்பகம்

www.padippakam.com



# ஐ.தே.மு. அரசாங்கத்தின் இராணுவ முகம்!



பாதுகாப்பு விவகார நிருபர்



யுத்தநிறுத்தத்தை பயன்படுத்தி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அவர்களது இராணுவ பலத்தை இரண்டு மடங்காக அதிகரித்துக் கொண்டுள்ளனர் என்பது உண்மையே. இதனை சமாதானத்தை நிலைநாட்டுவதற்கான விலையாகவே அரசாங்கம் கொள்கிறது என்று ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏயின் அறிக்கையிலும் மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் அமைப்பினது அறிக்கைகளிலும் தொடர்ச்சியாக புலிகள் இயக்கத்தின் இராணுவ பலம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக புலி எதிர்ப்புத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி, சிஹல உறுமய உட்பட பல இனவாத அமைப்புகளும் புலிகள் இயக்கம் இராணுவரீதியாக பலமடைந்துள்ளதாக கூறிவருகின்றன. ஜனாதிபதி சந்திரிகாவும் அதனையே கூறுகிறார்.

இதற்கு மத்தியில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய பாதுகாப்பு அமைச்சர் மேற்படி குற்றச்சாட்டுக்களை உறுதி செய்யும் வகையில் கருத்துக்களை தெரிவித்துள்ளார். அதேவேளை அரசாங்கமும் அதன் இராணுவ பலத்தை மும்மடங்கு அதிகரித்துள்ள தாகவும் அவர் தெரிவித்துள்ளார். அமைச்சர் மாரப்பனவின் உரை இனவாதிகளுக்கு நல்ல பிடியாக அமைந்துள்ளது.

பேச்சுவார்த்தையினூடாக இறுதி அரசியல் தீர்வை எய்துவதற்கு முன்பதாக வடக்கு கிழக்கில் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்தும் நோக்கில் இடைக்கால நிர்வாக சபையை அமைப் பதற்கான புலிகளின் யோசனைகள் சமர்ப்பிக்கப்படவிருக்கின்ற வேளையி லேயே பாதுகாப்பு அமைச்சர் மேற்படி கருத்தை தெரிவித்திருந்தார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் வகையிலேயே குரங்கு பாஞ்சான் முகாமையும் விடுதலைப்புலிகள் இயக்கம் அமைத்துள்ளதாக அரசாங்க மும் கூறிவருகிறது. அதையே சர்வதேச கண்காணிப்பு குழுவும் கூறியுள்ளது.

சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்ன லுடன் இலங்கையைப் பூரணமாக இணைத்துக் கொண்டு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பாதுகாப்பை பலப்படுத்தி வருவதாக கடந்த மாத புதியபூமியில் செய்தி வெளியிடப் பட்டிருந்தது. இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஷ்வந்தசிங்கா இங்கு வந்து சென்றுள்ளார். அதனை அடுத்து இலங்கையின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹ இந்தியாவுக்கு சென் றுள்ளார். அவர் இந்திய அரசாங்கத் துடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு பற்றி பேசியுள்ளார். இங்கு இருதரப்பு பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்று தயாராகியும் வருகின்றது.

மேலும் தனியார் தொலைக்காட்சி ஒன்றின் விவாதத்தில் கலந்து கொண்ட காணி அமைச்சர் ராஜித சேனாரட்ண கூறிய தகவல்களும் கவனத்தை ஈர்த் துள்ளன. அரசாங்கம் அண்மைக்கால மாக இராணுவரீதியாக மிகவும் பலமாக இருக்கிறது. இலங்கையின் கடற்படை பிரிட்டனின் உதவியுடன் நவீனமயப் படுத்தப்பட்டு வருகிறது. நவீன யுத்தக் கப்பல்கள் பெறப்பட்டுள்ளன. விமானப்படை தகவல் பரிவர்த்தனையும் அமெரிக்காவின் உதவியுடன் நவீனமயப் படுத்தப்பட்டுள்ளது. இஸ்ரேலில் மட்டுமே இருக்கும் அதி சக்தி வாய்ந்த வேவு பார்த்து மிகவும் தூரத்திலும் உயரத்திலு மிருந்து தாக்குதல் நடத்தக் கூடிய யுத்த விமானமொன்றை அமெரிக்கா இலங்கைக்கு கொடுத்துள்ளது. இந்தியாவின் உதவியுடன் பொலிஸ் படை சீரமைக்கப்பட்டுவருகிறத. பொலிஸ் படையில் (Black Cats) கறுப்புப் பூனைகள் போன்ற பிரிவை அமைப் பதற்கும் அவர்களுக்கு பயிற்சி அளிக்கவும் இந்தியா முன்வந்துள்ளது என்று அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமெரிக்காவுடன் மிகவும் நெருக்கமான அமைச்சர் மிலிந்த மொரகொடவின் ஏற்பாட்டில் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்ஹ இலங்கையின் பாதுகாப்பு பற்றி விரைவில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷுடன் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்த விருக்கிறார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத் தின் அனுமதியுடன் இலங்கையின் பாதுகாப்பில் வெளிநாடுகளின் தலையீடு அதிகரித்து வருவதை மேற்கூறியவை உறுதிப்படுத்துகின்றன. இலங்கை அரசினை பாதுகாக்க வெளிநாடுகள் இங்கு இராணுவரீதியான உறவை வளர்த்துக் கொள்வதாக மேலோட்ட மாக தெரிந்தாலும் அவ்வுறவுகள் வரையறைக்கு உட்பட்டதொன்றாக தெரியவில்லை. இங்கு வெளிநாட்டு படைத்தளங்கள் அமைக்கப்பட்டு வெளி நாட்டுப்படைகள் நிலை கொள்ளும் அளவிற்கு அவை வளர்ச்சியடையக் கூடும்.

யுத்தக் காலத்தை விட தற்போது இலங்கை அரசாங்கம் அதிகமாகவே வெளிநாட்டு இராணுவ தலையீடுகளை ஊக்குவித்துவருகிறது. பேச்சு வார்த்தை யில் முறிவு ஏற்பட்டால் இராணுவ ரீதியாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து திட்டங்களை வகுத்து செயற்படுவதை நாம் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. அதாவது இனியொரு யுத்தம் ஏற்படுமாயின் நேரடியாக வெளிநாட்டு இராணுவத் தலையீடு களைக் கொண்ட யுத்தமாகவே இருக்கும் என்பதை விளங்கிக் கொள்ள முடிகிறது. குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியமும் இந்திய மேலாதிக்கமும் நேரடியாக இலங்கை அரசாங்கப் பக்கத்தில் யுத்தத்திற்கு ஆதரவாக இறங்கும் நிலை ஏற்படலாம்.

இதிலிருந்து ஐக்கிய தேசிய முன்னணி யின் சமாதான முயற்சிகள் சமாதான அணுகுமுறைகள் வரையறுக்கப்பட்ட வைகளாகவே இருக்கும் என்பதை புரிந்து கொள்ள முடிகிறது. இங்கு சொல்லப்பட்ட விடயங்களிலிருந்து ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் இராணுவ முகத்தை தெரிந்து கொள்ள முடிகிறது.

இனியொரு யுத்தம் வராமலும் தடுக்கவும், யுத்தத்தின் மூலம் ஏகாதி பத்தியத்தினதும் பிராந்திய மேலாதிக்கத் தினதும் இராணுவத் தலையீடு வராமல் தடுக்கவும் சமாதான நடவடிக்கை களையே முன்னுக்கு தள்ள வேண்டி யுள்ளது. சமாதான நடவடிக்கைகளை முன்னுக்கு தள்ளுவது என்பது தமிழ் மக்களுக்கு 'எதுவுமே ' கிடைக்காத இலக்கை நோக்கி பயணம் செய்வ தென்பதாகாது. சமாதான நடவடிக் கைகள் என்பது இரத்தம் சிந்தா யுத்தமாகும். இதில் மிகவும் நிதானம் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

மக்களை அணிதிரட்டுவது மிகவும் அவசியம். சமாதான நடவடிக்கை களுக்கு ஆதரவாக சிங்கள, தமிழ், முஸ்லீம், மலையகத்தமிழ் மக்களை அணிதிரட்ட வேண்டும். அதற்கும் ஜனநாயக அணுகுமுறைகளே அடிப் படையாகின்றன. மக்கள் அபிப்பிராயம் சமாதானம் நடவடிக்கைகளுக்கு சார்பாகவும், ஏகாதிபத்தியத்தின் தலையீட்டிற்கு எதிராகவும் கட்டிவளர்க் கப்படும் போது ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் இலகுவாக சமாதான நடவடிக்கைகளை கைவிட்டு யுத்தத்தினை மீண்டும் தொடங்க முடியாதிருக்கும்.

சில தமிழத் தலைவர்களும், வேறு சிலரும் கூறுவதுபோன்று ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் முற்று முழுதாக சமாதானத்தின் பக்கம் மட்டுமே இருக்கவில்லை. அது இராணுவ நடவடிக்கைகளின் பக்கமும் இருக்கிறது. அரசாங்கம் விடுதலை இயக்கங்களுடன் பேச்சுவார்த்தை களை நடத்தும்போது அரசாங்கம் அதாவது முற்றாகவே இராணுவ நோக்கங்களை கைவிட்டுவிடுகின்றது என்று கூறிவிடமுடியாது. அதைப் புரியாத பேச்சுவார்த்தைகள் மிகவும் மேலோட்டமானதாகவே இருக்கும். தற்போதைய சூழலில் ஆழமான சமாதான நடவடிக்கைகளின் மூலமே அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கை களை முறியடிக்க முடியும்.

# தமிழரசுக் கட்சி புதுப்பிக்கப்படுகிறது பின்னால் இருப்பவர்கள் யார்?

தமிழரசுக் கட்சியை மீண்டும் அரங்கில் கொண்டு வந்து நிறுத்த யாழ்ப் பாணத்தில் முயற்சிகள் நடைபெறு கின்றன. இதில் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மும்மரம் காட்டி நிற்கின்றார். அவருடன் பழைய தமிழரசுத் தூண்கள் பக்க பலமாக இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. தமிழரசுக் கட்சியை ஆரம்பித்த தந்தை என அழைக்கப்பட்ட எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் இலட்சியங்களை முன்னெடுத்துச் சென்று தமிழர் விடுதலையை நிலை நாட்டவே மேற்படி கட்சி புதுப்பிக்கப் படுவதாகக் கூறப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் இயக்கத்தை தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் எனக் கடந்த தேர்தலில் ஏற்றுக் கொள்வ தாகக் கூறிப் பாராளுமன்ற ஆசனங் களைப் பிடித்தவர்கள் தமிழர் கூட்டமைப் பினர் . அவர்களில் ஒரு பகுதியினராக இருந்தவர்கள் தான் இப்போது தமிழரசுக்கட்சிக்கு புத்துயிர் வழங்க நிற்பவர்கள். அதுமட்டுமன்றி அரசாங்கத் திற்கு புலிகள் இயக்கம் இடைக்கால நிர்வாகத்திற்கான தமது திட்டயோ சனை களை வழங்க இருக்கிறார்கள். இத்தகைய சூழலில் தமிழரசுக்கட்சியை மீண்டும் அரங்கில் கொண்டு வந்து நிறுத்த ஏன் முயற்சிக்கப்படுகின்றது என்ற கேள்வி அரசியல் அரங்கிலே எழுந்துள்ளது.

அன்றிலிருந்து இன்றுவரையான தமிழ்க் கட்சிகள் எனப்படுபவற்றை எடுத்து நோக்கினால் தமிழ்த் தேசியம் தான் அவர்களது நோக்கும் போக்குமாக இருந்து வந்துள்ளது. அதன் ஊடே உறுதிபெற்றதாக இருந்தமை தமிழர்கள் மத்தியிலான உயர்வர்க்க உயர்சாதிய மேட்டுக்குடி நலன்களும் தேவைகளும் ஆகும். இவற்றைப் பிரதிபலிக்கும் கட்சியாகவே அன்று அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் உருவாக்கப்பட்டது. சைவ வேளாள ஆதிக்க நிலைப் பாட்டைக் கொண்ட ஜி.ஜி. பொன்னம் பலத்தையும் தமிழ்க் காங்கிரசையும் விட்டு விலகி வந்தே எஸ்.ஜே.வி. செல்வநாயகம், கு.வன்னியசிங்கம் போன்றவர்களால் தமிழரசுக்கட்சி ஆரம்பிக்கப்பட்டது. அதன் தலைமை சைவ - கிறிஸ்தவ வேளாள மேட்டுக்குடி ஆதிக்கம் கொண்ட மற்றொரு தலைமையாகவே அமைந் திருந்தது. ஆனால் பாராளுமன்ற வாக்கு வங்கியைக் கைப்பற்றுவதற்கு சாதி சமத்துவம் பற்றி இடையிடையே தமிழரசுக்கட்சி பேசிக் கொண்டது. தமிழ்க் காங்கிரஸ் காரர்கள் ஜி.ஜி. பொன்னம் பலத்தை 'தனிப்பெரும் தலைவர்' என்று பட்டம் சூட்டிப் பிரசாரப் படுத்த, தமிழரசுக் கட்சியினர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்திற்கு 'தந்தை' என்றழைத்துப் பிரசாரம் செய்தனர். இது தென்னிந்திய திராவிட இயக்கத்திலிருந்து பெறப்பட்ட ஒரு பிரசார உத்தியாகும். அங்கு 'பெரியார்' 'அறிஞர்' 'கலைஞர்' 'மக்கள் திலகம்' 'அம்மா' என்பன போன்றே இங்கும் 'தனிப்பெரும் தலைவர்' 'தந்தை' 'அண்ணன்' 'தம்பி' 'தளபதி' என்று கூறி தமிழ்த் தேசியம் முன்னெடுக்கப் பட்டது. இத்தகைய உணர்ச்சிகரப் பட்டங்களால் தமிழ் மக்கள் மதிமயக்கப் பட்டனரே தவிர பிரச்சினைகள் தீர்க்கப்படவுமில்லை. விடுதலை என்பது அடையப்படவுமில்லை.

இத்தகைய போக்கில் கொடி கட்டிப் பறந்த தமிழரசுக்கட்சி அதே பெயரில் தமிழ் மக்கள் சலிப்பும் வெறுப்பும் கொள்ள ஆரம்பித்த சூழலிலே தான் தமிழர் கூட்டணி ஆரம்பிக்கப்பட்டது. 'தமிழ் ஈழமே ' முடிந்த முடிவு என்ற தமிழர் கூட்டணியால் இந்திய ராணுவத்தை வடக்குகிழக்கிற்கு கூட்டி வந்த உச்சப் பணிக்கு அப்பால் எதுவும் செய்ய முடியவில்லை. தமிழ் இளைஞர் கள் ஆயுதம் ஏந்திப் போராடி நின்றமை யைத் தடுக்கவும் இயலவில்லை. இலங்கை அரசோடும் இந்திய ஆளும் தரப்பினருடனும் கூடி நின்று சமரசம் கண்டதால் கூட்டணி துரோகப் பட்டியலில் சேர்க்கப்பட்டது. அதன் கதை மிக நீண்டது. போனதெல்லாம் போகட்டும் எதிர்வரும் தேர்தலில் தமிழர் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் தமிழர் கூட்டணி, தமிழ் காங்கிரஸ், ரெலோ, ஈ.பி.ஆர். எல். எவ் இணைக்கப் பட்டு பாராளுமன்ற ஆசனங்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டது. இதில் உச்ச நன்மை அடைந்த கட்சி தமிழ்க் காங்கிர சாகும். இருக்கும் வரை பாராளுமன்றப் படி ஏறலில் தோற்று வந்த குமார் பொன்னம்பலத்தின் மறைவையும் அவருக்கு வழங்கப்பட்ட 'மாமனிதர் ' பட்டத்தையும் வைத்து அக்கட்சி மூன்று ஆசனங்களைப் பெற்றது. இது பாரம்பரிய தமிழரசுக்கட்சிக் காரர்களு க்கு மகா கோபத்தைக் கிளறி விட்டது. இதுவும் தமிழரசுக் கட்சி புதிப்பிக்கப்படு வதற்கான காரணங்களில் ஒன்றாகியது.

தமிழரசுக்கட்சி அறுபதுகளிலும் எழுபதுகளின் ஆரம்பத்திலும் வடக்கு கிழக்கில் தமிழர்களின் 'ஏகப்பிரதிநிதிகள்' போன்று பாராளுமன்ற ஆசன ஆதிக்கம் பெற்றிருந்தது. அந்தப் 'பொற்காலத்தை' எண்ணிக் கவலைப் பட்டவர்களே இப்போது தமிழரசுக் கட்சியை மீட்க முற்பட்டுள்ளனர். அத்துடன் கடந்த தேர்தலில் தமிழர் கூட்டமைப்பு என்ற அவசரக் கூட்டி னால் தமிழ்க்காங்கிரசும், ரெலோவும், ஈ.பி.ஆர்.எல்.எவ்வும் பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்றுக் கொண்டதை யும் பழைய தமிழரசுக் கட்சித் தூண்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. 'தந்தை செல்வா' என்ற அரசியல் படிமம் இப்பொழுதும் தமிழ் மக்கள் மத்தியில் செல்லுபடி உள்ளதாக இருப்பதாகவும் விடுதலைப்புலிப் பிரமுகர்கள் கூட தந்தை செல்வாவை உயர்வாகப் பேசுவதையும் சுட்டிக்காட்டி நிற்கும் தமிழரசுத் தூண்கள் அதே தந்தை செல்வாவினால் தோற்றுவிக்கப் பட்ட தமிழரசுக் கட்சியை ஏன் மீண்டும் தூசு தட்டி அரங்கிற்கு கொண்டுவரக் கூடாது என்ற நிலைப்பாட்டிலேயே தமிழரசுக்கட்சியைப் புதுப்பிக்க முன்வந்துள்ளனர்.

அதேவேளை கூட்டமைப்பினுள் ஏற்பட்டுள்ள ஒற்றுமையீனமும், தமிழர் கூட்டணியின் தலைவர் பதவி வீ. ஆனந்தசங்கரியிடம் சென்றடைந்தமை யும் தமிழரசுக் கட்சி புனரமைக்கப்படும் யோசனைக்கு இட்டுச் சென்றுள்ளது. அத்துடன் கூட்டமைப்புக் கட்சிகளுக் கும் விடுதலைப்புலிகளுடன் ஏற்பட்டுள்ள உறவில் காணப்படும் நெருக்கமும் நெருக்கமின்மையும் ஒரு காரணமாகும். தமிழ்க்காங்கிரஸ், ரெலோ ஆகியன விடுதலைப்புலிகளுடன் நெருங்கி நிற்க தமிழர் கூட்டணி சற்று தூரத்தில் இருந்து வருகின்றது. அதிலும் ஆனந்தசங்கரி புலிகளால் நிராகரிக்கப் பட்டவராக இருந்து வருகிறார்.

மேலும் இந்தியாவும் அதன் உளவு நிறுவனமான !'றோ' வும் கூட்டணி யினரை முறைத்துப் பார்த்து சில கடுமையான ஆலோசனைகளை வழங்கியும் உள்ளது. தமது சொத்து சுகம் உறவு, குடும்பம், பிள்ளைகளை இந்தியாவில் இருத்தியுள்ள கூட்டணி யின் தலைவர்களுக்கு இந்தியாவை நிராகரித்து நிற்க முடியவில்லை. தமிழ்க் காங்கிரசுக்கு இந்தியாவிடம் எந்தக் கடப்பாடும் முன்பிருந்தே இருக்க வில்லை. ஜீ.ஜீ, பின் குமார் அதன் பின் கஜேந்திரகுமார் ஆகியோரது சொத்துக் களும் தொடர்புகளும் இந்தியாவில் இல்லை. அவர்களது பரம்பரைச் சொத்துக்கள் யாவும் கொழும்பு, மலேசியா, அவுஸ்ரேலியா, லண்டனில் தான் உள்ளன. ஆனால் தமிழரசு - தமிழர் கூட்டணியினரின் தொடர்பும் உறவும் சொத்துக்களும் தமிழ் நாட்டிலேயே உள்ளன. ஆதலால் இந்திய ஆளும் வர்க்கத்தை அண்டியே அவர்களது அரசியல் செல்ல வேண்டியுள்ளது. அவ்வாறே முன்னாள் போராளிகளும் இன்றைய பாராளு மன்ற வாதிகளு மான ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கங்களின் நிலையுமாகும்.

ஆதலால் தமிழரசுக் கட்சி மீட்டு நிலைநிறுத்தப்படுவதற்குப் பின்னால் இந்திய ஆளும் வர்க்க ஆலோசனை களும் இருக்கலாம் என்ற பலத்த சந்தேகங்களும் கிளப்பட்டே வரு கின்றன. அதேவேளை வீ.ஆனந்த சங்கரி தமிழரசுக் கட்சி புதுப்பிக் கப்படுவதற்கு பின்னால் புலிகள் இயக்கம் இருப்பதாகவும் கூறியுள்ளார். எவ்வாறாயினும் தமிழரசுக் கட்சி மாவை சேனாதிராசா தலைமையில் மீட்கப்படுவது பழைய சைவ- கிறிஸ்தவ வேளாள மேட்டுக்குடி அரசியலின் தொடர்ச்சியாகத் தான் இருக்குமே தவிர வேறு புதிய கொள்கை கோட்பாட்டின் அடிப்படை யில் அல்ல. அதற்கு நியமிக்கப்பட் டுள்ளவர்களின் பெயர்ப்பட்டியல் அடுத்த தேர்தலுக்கான வேட்பாளர்களாக வரக் கூடியவர்களா கவே காணப்படு கின்றனர். எவ்வாறு இருந்த போதிலும் தமிழரசுக்கட்சியின் மீள்வரவு தமிழர் தேசியவாத அரசியலில் பல சர்ச்சை களையும் நடைமுறைப் பிரச்சினை களையும் தோற்றுவிக்கவே செய்யும் என்பதில் ஐயமில்லை. தமிழரசுக் கட்சியின் மீள்விப்பு தமிழர் பழமை வாதத்தையும் இனமொழிக் கோஷங் களையும் புதுப்பிக்க உதவுமே தவிர தமிழர் பரப்பில் காணப்படும் இன, வர்க்க சாதிய பெண் அடக்கு முறைகளை ஒழிப்பதற்குப் ஒரு போதும் உதவ மாட்டாது என்பது நூறுவீத உண்மை யாகும். பாராளுமன்ற ஆசனங்கள் சில வற்றைத் தமிழரசுக்கட்சியின் பெயரால் சைவ கிறிஸ்தவ வேளாள மேட்டுக்குடி வழிநின்று பெறலாமே தவிர தமிழர் சமூக விடுதலை என்பதை ஒரு போதும் அதன் வழி நின்று பெற முடியாது. இதனை இளம் தலை முறையினர் உணர்ந்து கொள்வது அவசியம்.

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ்ச் சினிமாவின் கேடுகெட்டதனத்தால் சீரழிந்து வரும் இளம் தலைமுறையினர்!

இன்றைய உலகில் சினிமா ஊடகம் மிகச் சக்திவாய்ந்த ஒன்றாகக் காணப்படுகின்றது. மிக வேகமாகவும் நவீனமானதுமாக வளர்ச்சியடைந்து வந்த இச் சினிமா அனைத்து மக்கள் மத்தியிலும் தாக்கம் விளைவித்து வரும் ஒன்றாகக் காணப்படுகின்றது. இதன் ஊடாக பல்வேறுபட்ட செய்திகள் கருத்துக்களாகவும் காட்சிகளாகவும் எடுத்துச் செல்லப்படுகின்றன. ஆனால் இந்த ஊடகத்தை யார்? எதற்காக, எப்படிப் பயன்படுத்துகிறார்கள் என்பதே சிந்தனைக்குரிய விடயமாகும். பல நாடுகளிலே தரம்வாய்ந்த சினிமாப் படங்கள் வெளிவந்து சினிமா ஊடகத்தின் உச்ச நிலையை வெளிப்படுத்தி வருவதைக் காணலாம். அதேவேளை பணம் சம்பாதிக்கும் போக்கிலான ஆகக் கேடுகெட்டத்தனமாகச் சினிமாவைப் பயன்படுத்தி வரும் போக்கே பிரதானமாகி நிற்பதையும் காண முடிகின்றது.

இந்த வகையைச் சேர்ந்த சாக்கடைப் படங்களையே இந்தியாவில் குறிப்பாக தமிழகச் சினிமாத்துறை உற்பத்தி செய்கிறது. கதையம்சங்களின் மையப்புள்ளி நிலவுடமை முதலாளித்துவக் கருத்துக்களாகவே காணப்படுகின்றன. பழமைவாதம், சாதியம், வர்க்கச் சுரண்டல், பெண் ஒடுக்குமுறை யாவற்றிலும்




அகிம்சைப் போக்குமே இறுதியானதாகும். மக்களுடைய எழுச்சி, புரட்சிகரக் கருத்துக்கள், சமூக மாற்றச் சிந்தனைகள் யாவும் கொச்சைப்படுத்தி நிராகரிக்கப்படும் அதேவேளை அவை கொடூரப் பயங்கரவாதமாகவும் காட்டப்படுகின்றன.

இவை ஒரு புறமிருக்க பாலியல் வக்கிரம், தனிநபர் வன்முறை, இளம் வயதினரை நாசமாக்கும் முக்கால் நிர்வாண ஆட்டம், பாட்டம், இரட்டை அர்த்தம் கொண்ட நகைச்சுவைகள், பாடல்கள் தமிழ்ச்சினிமாவின் தனித்துவ அம்சங்களாகும். இத்தகைய தமிழ்ப் படங்களே தமிழ்ச் சினிமாவில் ஆதிக்கம் பெற்று நிற்க இவற்றையும் தாண்டிய மிக மோசமான ஆபாசப் படங்கள் 'கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு' என்ற பெயரில் பெரும்பான்மையான சினிமா அரங்குகளில் பலத்த பிரச்சாரங்களுடன் காட்டப்படுகின்றன

அண்மையில் வெளிவந்த 'பாய்ஸ்' திரைப்படம் கொழும்பில் வெற்றிகரமாக அறுபது நாட்களையும் தாண்டி ஓடிக்கொண்டிருப்பதாகத் தொடர் விளம்பரம் செய்யப்படுகின்றது. இந்தப் படம் வடபுலத்தில் தடைசெய்யப்பட்டது. ஆனால் வடபுலத்திலிருந்து இளைஞர்கள் யுவதிகள் இப்படத்தைப் பார்ப்பதற்கு என்றே கொழும்பு வந்து போகிறார்கள் என்ற செய்தியும் விளம்பரமாகவே செய்யப்படுகின்றது. இன்றைய ஏகாதிபத்திய உலகமயமாதலின் கீழான பாரிய சமூகச் சீரழிவில் தமிழ் சினிமாவின் கேடுகெட்டதனம் கொடிகட்டிப் பறக்கிறது. முதலாளித்தவத்திற்கு யார் எக்கேடு கெட்டால் என்ன பணம் குவிந்தால் போதுமானதேயாகும். இதனை இளந் தலைமுறையினர் உணரும் காலம் அதிக தூரத்தில் இல்லை.

## குறும்பாவில் பா.உ.கள்

*பாய் சலிக்கத் தூங்குவதில் மன்னி*
*வாய் திறந்தால் வார்த்தையெலாம் சன்னி*
*அம்மானால் நிலவிருந்த*
*தன்மானம் சரிந்தபின்னும்*
*மாய்வ தெல்லாம் வார்சுக்காய் பொன்னி*

*அம்மாவின் உதவிக்கு கதிர் காமன்*
*சுக்கானைப் பிடிக்க நல்ல வீமன்*
*கூட்டுக்குத் தூதனுப்ப*
*போட்டுடைத்து வந்து நின்றார்*
*எக்காலம் பிழைப்பறிந்தக் கோமான்?*

*மண்ணாளும் தோகைக்குத் தம்பி*
*இந்நாட்டு மாக்களையே நம்பி*
*நின்றாடும் அநுரர்தம்*
*மண்டுக வாழ்வினிலே*
*எந்நாளும் எதிர்க்கட்சி எம்பி!*

*பாதுகாப்புக் கானதொரு மாரப்பன்*
*சூதுவாது இல்லாத சூரப்பன்*
*சத்தியத்தை தான் விழுங்கி*
*கத்து வோர்க்கும் காய் நகர்த்தி*
*மோதலின்றிக் காப்பதிலே வீரப்பன்*

– பட்டணத்தடிகள் –

## உலக அமைதியா, 9ம் பக்க தொடர்ச்சி...

எனவே மாக்ஸியவாதிகள் வற்புறுத்தும் வன்முறைப் போராட்டம் மக்களைப் பிளவுபடுத்துகிற வன்முறை பற்றியதல்ல. மக்களை ஒன்றுபடுத்திப் பிரதான எதிரியை இலக்காகக் கொண்ட ஒரு வன்முறையே அது. எங்கிருந்து மக்கள் மீதான வன்முறை வருகிறதோ அவ்விடத்தை நோக்கிய எதிர் வன்முறையே அது.

எனவே, உண்மையில் ஏகாதிபத்தியவாதிகளும் பிற்போக்குவாதிகளும் தாம் தவிர்க்க விரும்புவதாகக் கூறிக்கொண்டே நடத்துகிற போரும், மக்கள் விரும்பினாலும் தவிர்க்க இயலாதது என்று மாக்ஸியவாதிகள் கூறும் போரும் ஒரே போரின் இரு பக்கங்கள் தான். ஒன்று அடக்குமுறையை நிலைநிறுத்தும் போர். அது அநீதியான போர். மற்றது அடக்குமுறையை மறுதலிக்கும் போர். அது நீதியான போர். இரண்டும் ஒரு போரின் எதிரெதிரான தரப்புக்கள். ஆகவே ஒரு வகையில் இரு தரப்பினரும்ஒரே போரைப் பற்றி வெவ்வேறு விதமாக நோக்குகிறார்கள்.. எனவே அவர்கள் பாவிக்கும் சொற்கள் வேறுபடுகின்றன.

அமைதியைப் பொறுத்தவரை. இரு தரப்பினரும் முற்றிலும் வேறுபட்ட அமைதிகளைப் பற்றிப் பேசுகிறார்கள். அடக்கி ஒடுக்குவோரும் அடங்க மறுப்போரும் என்றுமே ஒரே விதமான அமைதியை வேண்ட இயலாது. எனவே போர் ஒன்றே ஆயினும் நோக்கங்களும் வழிமுறைகளும வேறுபடுகின்றன.

ஃபாஸிஸத்துக்கு எதிரான போரும் சீனாவில் யப்பானிய ஆக்கிரமிப்புக்கு எதிரான போரும் வியற்நாமில் அமெரிக்காவில் ஆக்கிரமிப்புக்கு எதிரான போரும் இன்னும் இன்றைய விடுதலைப் போர்கள் யாவும் அமைதிக்கான போர்கள் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் அவை அடக்குமுறைக்கும் அநீதிக்கும் எதிரான போர்கள். அவை விடுதலைக்கும் நீதிக்குமான போர்கள். அவை நிலையான அமைதியை உறுதிப்படுத்த வேண்டுமானால் அவை சனநாயகப் பண்புடையனவாக அமைய வேண்டும். அந்த வகையில் மக்கள் யுத்தம் என்பது உண்மையில் உலக அமைதிக்கான ஒரு உன்னதமான போராட்டமே ஒழிய வேறில்லை.

அரச வன்முறை இன்று தேசிய எல்லைகளைத் தாண்டி நடைமுறைப் படுத்தப்படுகிறது. இதற்கு எதிராக ஒவ்வொரு மண்ணிலும் வெகுசன இயக்கங்கள் கட்டியெழுப்பப்பட வேண்டியுள்ளது. அவை பகிரங்கமாகவே சகல அமைதியையும் மக்கள் விடுதலைக்கான மக்கள் யுத்தத்தையும் வலியுறுத்த வேண்டியுள்ளது. ஏனெனில் மக்கள் யுத்தம் இல்லாமல் ஏகாதிபத்தியம் ஒழியமாட்டாது. ஏகாதிபத்தியம் ஒழியாமல் உலக அமைதி கிட்டாது.

~ இமயவரம்பன் ~

## ஏகாதிபத்தியமும்...

7ம் பக்க தொடர்ச்சி..

பொருட்களின் விற்பனையினதும் ஊடுபாவலால், பெண்களின் நிலைமை களை மேலும் மோசமாக்குகிறது.' (ப.133)

காசு வருமானத்தை ஆளுபவன் ஆண். அவனது வருமானம் அவனது 'அவனுடைய' வளங்களில் கணிசமான ஒரு பகுதிக்கான பராதீனப்படுத்த இயலாத உரிமை பெண்ணுக்கு இல்லை. ஆனாலும் குழந்தை கட்குப் போதிய உணவு கிடைக்கச் செய்யும் பொறுப்பு அவளுக்கு இன்னமும் இருக்கிறது. பல்வேறு ஆய்வுகள் இதையொத்த முடிவுகளையே தந்துள்ளன. மேலுங் கடினமாகிவரும் நிலைமைகளின் கீழ்த் தமது குடும்பங்கட்கு உணவூட்டு வதற்கு அவர்கள் போராடும் நிலையில் பெண்கள் சீவனோபாய விவசாயத் துடன் பிணைக்கப்பட் டுள்ளனர். பல சந்தர்ப்பங்களில், சிறந்த காணித் துண்டுகள் வணிகப் பயிர்ச் செய்கைக் காகப் பறித்தெடுக்கப்படுகின்றன. ஆண்கள் சீவனோபாயத்துக்கான பயிர்ச்செய்கையைக் கைவிட்டு விற்பனைக்கான பயிர்ச் செய்கை யையோ நகரத்தில் ஊதியத்துடனான கூலி உழைப்பையோ நாடுவதன் விளைவாகப் பெண்களின் உழைப்புச் சுமை அதிகரித்து வருகிறது.

அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் நவீன விவசாயத் தொழில் நுட்பமும் விரிவடைந்து வரும் லாபகரமான வணிகப் பயிர்கள் மீது கவனத்தைக் குவிப்பதால் அவை பெண்களை எட்டுவதில்லை. (மேலும் விவரங்கட்கு எஃப்.ஏ.ஓ. வெளியீடான 'பெண்கள் ஒரு உலக அறிக்கை' என்ற வெளியீட்டில் விவசாயம் பற்றிய அத்தியாயத்தைப் பாருங்கள்.)

இந்த நாடுகளில் அதிகாரச் சமநிலையும் ஆண்–பெண் பாலினர் வகிக்கும் பங்கின் தோரணையும் பெண்கள் இந்த நிலைக்கு வருவதற்கு வழிசெய்துள்ளன. எனினும் ஏகாதிபத்திய 'அபிவிருத்தி முன்மாதிரி' எல்லாவற்றையும் மேலும் மோசமாக்கியுள்ளது. ஃப்றுஸெற்றி கூறுவதுபோல 'அபிவிருத்தியின்' விளைவும், மேலும் சமத்துவங் குறைந்த உலகம். ஏகாதிபத்தியம் பெண்கள் மீதான ஒடுக்குமுறையை வலுப்படுத்தி யுள்ளது.

எனவே ஏகாதிபத்தியத்தின் 'அபிவிருத்திக்கான முன்மாதிரியைக்' கேள்விக்குட்படுத்தாமல் 'விவசாயத்திற் பெண்களைக் கண்ணுக்குப் புலனாக்குவது' பற்றியோ 'பெண்களை இலக்காகக் கொண்ட உதவி' பற்றியோ பேசிப்பயனில்லை. உலகச் சந்தைக் கான உற்பத்தியே 'அபிவிருத்தியின்' இயங்கு சக்தியாக இருக்குமானால், வலிமை மிக்க பொருளாதாரச் சக்திகள் முடிவின்றி பெண்களின் அவலத்தை மீள உற்பத்தி செய்து கொண்டிருக்கும். சீவனோபாயத்துறையில் உள்ள பெண்களைச் சுட்டி, அவர்கட்கும் போதி யளவு நிலமும் சாதகமான முறையி லான கடன் வசதிகளும் நவீன தொழில் நுட்பமும் இலேசான வேலைப்பளுவும் தேவை என்று சொல்வது பயனற்றது. எங்கே பணத்தைச் சம்பாதிக்க இயலுமோ அங்கே முதலீடு போகிறது. இதை, ற்றிம்பர்லேக் 1986ல் தனது ஆய்வில் விளக்கியுள்ளார். 1983க்கும் 1984க்குமிடையிலான வரட்சி நிலைமை களின் கீழ் வட ஆபிரிக்காவின் ஸஹேல் பகுதியைச் சேர்ந்த ஐந்து நாடுகள் பருத்தி அறுவடையின் சாதனை படைத்தன. அதே வேளை, இப்பிரதேசம் முழுவதையும் எடுத்துக் கொண்டால், ஏராளமான அளவு தானியம் இறக்கு மதியானது. பஞ்சத்துக்குப் பல உயிர்கள் பலியாயின. வரட்சி ஏன் உணவுப் பயிர்களைப் பாதித்தது? ஏன் உலகச் சந்தைக்கு ஏற்றுமதியாகும் பயிர்களைப் பாதிக்கவில்லை? விடை மிகவும் எளியது. அரசாங்கத்துக்கு அந்நியச்செலா வணியைப் பெற்றுக் கொடுக்கும் பயிர்கள் சீராக்கப்பட்ட விதைகள் மலிவான பசளை, அறுவடைக்கான போக்குவர்த்து, உத்தரவாத விலை ஆகியவாறான ஆதரவைப் பெறு கின்றன. ஏழைகளுக்கு உணவும் பசியால்வாடும் விவசாயிகளும் ஏற்றுமதி வருமானத்தை ஈட்டுவதில்லை. ஏகாதி பத்தியத்தின் அபிவிருத்தி முன்மாதிரி முக்கியமானதாக உள்ளவரை பெண் கள் வறுமைக்கும் போதாமைக்கும் விதிக்கப்பட்டோராவார்கள்.

பெண்கள் சீவனோபாய விவசாயி களாகச் செயற்படும் அபிவிருத்தி முறை களை மேலே விவரித்திருந்தேன். இவை ஆபிரிக்காவில் மிகவும் அவதானிக்கத் தக்கன. (ஆதாரம் ற்றிம்பர்லேக், 1986, அக்னெற்றே ஸ்ற்றோம், 1986) எனினும் இப்போக்கு லத்தின் அமெரிக்காவிலும் ஆசியாவிலுங் கூடக் காணக்கூடியது தான்.

# 'எரிகிற வீட்டில் பிடுங்கினது லாபம்'

~ வழுக்கியாறான் ~

*'கரிந்து எரிந்து சாம்பலாகிப் போக'*
*'பொரிந்து சரிந்து பொடியாகிப் போக'*
*'நெரிந்து சொரிந்து தவிடாகிப் போக'*
*யாராலும் யாரும் சபிக்கப்பட்டால்......*
*அவ்வாறே ஆகுக யாரென்ன செய்ய.......*
*ஆனால் எரியிற வீட்டில் பிடுங்கினது லாபம்*

*'வீரமிங்கே பயிராகும் '*
*'மானமிங்கே உயிராகும் '*
*'அன்னை விலங்கொடி மண்ணை மீட்டெடு'*
*என்ன கோஷமா யாரும் அணிவகுக்கட்டும்*
*தாய் முலை திருடியும் தான் வாழப்புத்தி.....*

*"கவுண்மென்டு ஏஜென்ற் காசடித்தாராம்*
*அமெரிக்கன் மாவிலிருந்து மோச்சரிவரை நாறுது*
*'வலிவடக்கு மீள்குடியேற்றம் மாநாடு'*
*விரும்பியவர் விரும்பிய இடத்தில் நடத்தலாம்*
*ஸ்பொன்சர் செய்துகொடுக்க எவரும் வருவினம்*
*காடாத்த அந்திரட்டி செய்ய கீரிமலைக்கு*
*பாஸ்தரலாம் தளபதியின் அறிவிப்பு !*
*வியாளி ஆச்சியின்ரை குறுக்குக் கட்டும்*
*கமக்கட்டுக்கை சாராயப் போத்திலும் .......'*
*அளவெட்டிப் புளிச்சல் வயித்துக்கை நொதிக்க*
*மயிலிட்டி மாமா அலம்பத் தொடங்கிவிட்டார்.*

*"ஈராக்கிலை என்ன கண்டுபிடிச்சவை*
*ஏன் ஈராணைக் கண்டிக்கினம்*
*வரலாறு தங்களை மன்னிக்குமாம்*
*வாபலாகக் கனகலாமாகுமாம். இனியென்ன*
*தென்னையிலை தேள்கொட்ட*
*பனைகளிலையும் நெறிகட்டுமோ*
*குளிசை போட்ட மேனை நித்திரை கரேல*
*அரபாத்தை கொல்ல, வெளியேற்ற இஸ்ரேல்......."*
*அம்மா உளண்டு உளண்டு அலட்டுது.*

*"அரபாத்தின்ரை கையைப்பிடிச்சு*
*இட்சாக் ரபின்ரை கையைப் பிணைச்சு*
*வெள்ளை மாளிகையிலை படம்பிடிச்சு*
*ரீவியிலை காட்டினவையெல்லே'*
*ஜயா பொயின்ற் எடுத்துக் குடுக்கிறார்.*
*'குளோபலைசேசன் பரிமாணம், வட்டமொன்றின்*
*பத்துப்பதினாலுபேர் கூடிக் கதைக்கினம் '*
*'இந்தச் செற்அப் உடையப்போகுது*
*'முதலாளியம் மூஞ்சை குப்புற விழும் '*
*'மாக்ஸியம் இன்னும் தோக்கேல்லை'*
*உப்பிடி வெருட்டுற கூட்டமொன்று திரியுதுதானே*
*ஹிண்டுக் கல்ச்சர் ஸ்பெசல் செய்த*
*என்ரை மச்சான் கேக்கிறான்.*

*சுப்பிரிவிக்கியால பல்லு விளக்கேலாது*
*கோல்கேட் ருத்பவுடர்தான் நல்லதுங்கோ*
*என்ரை அண்ணி சொல்லுகிறா அண்ணைக்கு*
*ராமா அன் தியேட்டர் ஸ்பெஷல் செய்தவா!*
*அண்ணி லெக்ஸ்லரராய் இருக்கிறா கெட்டிக்காரி!*
*விடிய எழும்பி பல்லு துலக்கிற பற்பொடிகூட*
*செய்யிறத்துக்கு இங்கை வக்கில்லை*
*பிறகென்னாம் ராமாவும் தியேட்டரும் கோதாரியும்*
*மெக்கானிக் கடை நடத்தும் அண்ணாவின்தொனி.*

படிப்பகம்

www.padippakam.com



நவம்பர் 2003

REGISTERED ... PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதர் பத்திரிகை
புதிய பூமி
Puthiya Poomi
சுற்று 10 நவம்பர் 2003 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 63

அமெரிக்க விசுவாசியான அனுரா பண்டாரநாயக்காவும் இந்திய தாசராகியுள்ள விமல் வீரவன்சாவும் அடுத்த கட்டப் பேச்சுவார்த்தையில் ஐக்கியப்படுவது பற்றிப் பேசுகிறார்களா? அல்லது இனவாதத்தை மேலும் எப்படி முன்னெடுப்பது என ஆலோசிக்கின்றனரா?



# இடைக்கால நிர்வாகத்தின் அவசியம் பற்றி புதிய ஜனநாயக கட்சி வலியுறுத்தியது.

யுத்த நிறுத்தம் கடந்த 20 மாதங்களாக கடைப்பிடிக்கப்படுகின்றபோதும் வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் வாழ்க்கையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. ஏ 9 பாதை திறக்கப்பட்டிருப்பதை தவிர தமிழ் மக்களுக்கு சமாதான நடவடிக்கைகளினால் எவ்வித பயனும் கிட்டவில்லை. வடக்கு கிழக்கில் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவதற்கும் மீள் குடியேற்ற புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இடைக்கால நிர்வாக சபை ஏற்படுத்தப்பட வேண்டும்.

அத்துடன் பேரினவாதபிரசாரங்களை முறியடிப்பதற்கு அரசாங்கம் சமாதான நடவடிக்கைகளுக்கு ஆதரவு திரட்டும் வகையில் வலுவான பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு புதிய ஜனநாயக கட்சியின் தூதுக்குழுவினர் அரசியல் விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிசிடம் வலியுறுத்திக் கூறினர். அரசாங்கத்தின் சமாதான நடவடிக்கைகளுக்கு இடதுசாரி கட்சிகளின் ஆதரவை பெற்றுக் கொள்ளும் நோக்கில் அண்மையில் இடதுசாரி கட்சிகளை அழைத்து அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கலந்துரையாடினார்.

புதிய ஜனநாயக கட்சியின் சார்பில் பொதுச்செயலாளர் சி. கா. செந்திவேல், தேசிய அமைப்பாளர் இ.தம்பையா. அரசியல் குழு உறுப்பினர் சோ. தேவராஜா, பொருளாளர் ஞானகரன் ஆகியோர் அமைச்சரை சந்தித்து கலந்துரையாடிய போது அமைச்சரிடம் மேலும் கூறியதாவது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் முன்வைக்கப்படவுள்ள இடைக்கால நிர்வாகம் தொடர்பான யோசனைகளை ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் சாதகமாக பரிசீலிக்க வேண்டும். வடக்கு கிழக்கு இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்தவும் அழிந்துள்ள வடக்கு கிழக்கை கட்டியெழுப்பவும் அங்கு இடைக்கால நிர்வாகத்தின் தேவை அவசியம். அத்துடன் தென்னிலங்கையில் பெரும்பான்மை சிங்கள மக்களை குழப்பத்திற்குள்ளாக்கி பேரினவாதத்தை வளர்க்கும் நோக்கில ஜே.வி.பி, சிஹலஉறுமய, பொதுஜன ஐக்கிய முன்னணி ஆகியவற்றால் மேற்கொள்ளப்படும் இனவாத பிரசாரத்தை முறியடிக்க ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

நாட்டில் நடைபெறும் வேலை நிறுத்தங்களினூடாக தொழிலாளர் முன்வைக்கும் கோரிக்கைகளை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும். ஆனால் அக்கோரிக்கைகளை நிறைவேற்றா விட்டால் சமாதான நடவடிக்கைகளை ஆதரிக்க முடியாது என்ற நிலைப்பாட்டை புதிய - ஜனநாயக கட்சி ஒருபோதும் எடுக்காது. ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளின் நிகழ்ச்சி நிரலை அப்படியே எமது கட்சி ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் சமாதான முயற்சிகளை எதிர்க்கவில்லை மாறாக ஆதரிக்கிறது. பொருளாதார ரீதியாக ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துடன் நாம் ஒருபோதும் உடன்பட முடியாது. அதற்காக வேலைநிறுத்தக் காரர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றினால் தான் சமாதான முயற்சிகளை ஆதரிப்போம் என்ற நிபந்தனையை நாம் முன்வைக்கப் போவதில்லை. வடக்கு கிழக்கிலும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுவருகின்றனர். சமாதானகதை நிலைநாட்டினால் தான் வடக்கு கிழக்கு தமிழ்த் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடமுடியும் என்ற எந்தவொரு நிபந்தனையும் முன்வைக்கப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

பொருளாதார கொள்கையில் நாம் ஐக்கிய தேசிய முன்னணியுடன் பாரிய அடிப்படை முரண்பாட்டை கொண்டிருக்கிறோம். ஆனால் அதற்காக ஐக்கிய தேசிய முன்னணி முன்னெடுக்கும் சமாதான நடவடிக்கைகளை ஆதரிப்பதில் பின்நிற்கவில்லை.

யுத்தத்தை தொடக்கிய அரசாங்கமே பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருப்பது வரவேற்கத்தக்கது. யுத்தத்திற்கு முடிவு கட்டி தமிழ்மக்களின் உரிமைகளை உறுதி செய்ய நேர்மையாக ஐக்கிய தேசிய முன்னணி செயற்பட வேண்டும். நேர்மையாக முன்னெடுக்கப்படும் சமாதானமுயற்சிகளுக்கு எதிராக பேரினவாதிகள் மேற்கொண்டு வரும் பிரசாரங்களை முறியடிக்கவும் அவர்களை தோற்கடிக்கவும் எமது கட்சி தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயற்படும்.

அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளை அப்படியே எமது நிகழ்ச்சி நிரலாக ஏற்றுக்கொண்டு செயற்பட முடியாது. ஆனால் சமாதான நடவடிக்கைகளுக்கு ஆதரவாக எமது கட்சி தனியாகவும் இடதுசாரி கட்சிகளுடன் கூட்டாகவும் செயற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கலந்துரையாடலின் போது அமைச்சர் ஜி.எல்.பீரிசுடன் அமைச்சர்கள் ராஜித சேனாரட்ன. பந்துலகுணவர்த்தன. எஸ்.பி. திசாநாயக்க ஆகியோரும் பாதுகாப்புச் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணாண்டோவும் நோர்வே தூதுவரும் ஜேர்மன் தூதுவராலய அதிகாரி ஒருவரும் சில புத்திஜீவிகளும் கலந்து கெண்டனர். அவர்கள் சமாதான முயற்சிகளுக்கு இடதுசாரி கட்சிகள் திட்டமிட்டவகையில் முழு மனத்துடன் ஆதரவு கொடுக்க வேண்டும் என்று கூட்டாகவும். தனித் தனியாகவும் கேட்டுக் கொண்டனர்.

## இந்தியாவுடன்....

1ம் பக்க தொடர்ச்சி..

முதலீட்டாளர்களும் தங்கு தடையின்றி இலங்கைப் பொருளா தாரத்தில் ஊடுருவித் தமது ஆதிக்கத் தை நிலை நாட்டி வருகின்றனர். அடுத்து ராணுவ மேலாதிக்கத்திற்கு வழிசெய்யும் வகையில் பாதுகாப்பு 'ஒப்பந்தம் செய்யப்பட உள்ளது. வெறு மனே ஆயுதக் கொள்வனவு பயிற்சி. ஆலோசனை என்பனவற்றுக்கும் அப்பால் ராணுவப் பிரசன்னத்திற்கு வழி சமைக்கப் போகின்றது. வடக்கு கிழக்கில் ராணுவத் தளங்களைக் கொண்டிருப்பதற்கும் வழியேற்படுத்தப் போகின்றது. திருகோணமலை படிப்படியாக இந்தியாவின் ராணுவத்தளமாக மாற்றப்படும். இதனை ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமன்றி சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஏற்றுக் கொள்வார்கள். சுதந்திரம் இறைமை பற்றி முழக்கமிட்டு வரும் ஜே.வி.பி. சிஹலஉறுமய போன்றனவும் இந்திய ராணுவ பிரசன்னத்தை வரவேற்பார்கள். ஏனெனில் அவர்கள் ஏற்கனவே இந்தியப்பிடிக்குள் சென்றடைந்து விட்டார்கள்.

இலங்கையைத் தமது பிராந்திய மேலாதிக்கப் பிடிக்குள் கொண்டுவந்து இறுக்கிக் கொள்ளும் மூல உபாயத்தில் இந்திய ஆளும் வர்க்கம் வெற்றிபெற்று வருவதையே பிரதமர் அறிவித்துள்ள பாதுகாப்பு ஒப்பந்தம் எடுத்துக்காட்டியுள்ளது. இப்பாதுகாப்பு ஒப்பந்தத்திற்கு ஏற்றவகையில் வர்த்தக ஒப்பந்தமும் மாற்றியமைக்கப்பட இருக்கிறது. தென்னாசியப் பிராந்தியத்தில் மட்டுமன்றி முழு ஆசிய பசுபிக் பிராந்தியத்திலும் இந்திய வல்லரசு மேலாதிக்கம் கொடிகட்டிப்பறக்கும் கனவின் ஒரு பகுதி இலங்கையுடன் செய்யப்படவுள்ள பாதுகாப்பு ஒப்பந்தத்தால் நிறைவேறப் போகின்றது. இதற்குப் பலியாகப் போவது இலங்கை நாடும் அனைத்து மக்களுமே ஆவர் என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது.

## உலக வங்கி ஏன் இப்படிக் கூறுகிறது?

உலக மயமாதல் என்னும் ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதற்கு உலக வங்கி வழங்கிவரும் ஆலோசனைகளும் வழி காட்டங்களும் முக்கியமானவையாகும். தாராள பொருளாதாரம், தனியார் மயம் என்பதே அதன் அடிப்படை நிலைப்பாடாகும். மேற் கூறியவற்றுக்கு முற்றிலும் இணங்கினாலே உலக வங்கி சர்வதேச நாணயநிதியம் என்பன வாரிவாரிக் கடன் வழங்கும். அல்லாது விடின் கைவிரிப்புத்தான். இந்தப் பொறி முறையில் இன்றைய மூன்றாம் உலக நாடுகள் சிக்க வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தனியார் மயத்திற்கு ஊக்கமும் உற்சாகமும் வழங்கி வரும் உலக வங்கி அண்மையில் 2004ம் ஆண்டின் உலக வளர்ச்சிக்கான அறிக்கையில் வறிய மக்களுக்கு சேவைகள் கிடைக்கச் செய்தல் வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளது.

அவ்வாறு செய்வதற்கு 'வளர்ச்சியடையும் நாடுகள் கல்வி, சுகாதாரசேவை போன்றவற்றை தனியார் மயப்படுத்துவது தான் ஒரே வழியெனக் கொள்ளக் கூடாது' எனச் சுட்டிக்காட்டியுள்ளது. அத்துடன் மேலும் 'அளவிலும் தரத்திலும் பிரதான அடிப்படைச் சேவைகள் உரியவாறு மக்களிடம் சென்றடைவதில்லை. அவ்வாறான சந்தர்ப்பங்களில் சகலதையும் தனியாரிடம் ஒப்படைப்பது தீர்வாக அமைய மாட்டாது' என்றும் உலக வங்கி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது உலக வங்கிக்கு ஏதோ ஞானம் ஏற்பட்டதாகக் கொள்ளமுடியாது. உண்மையாக நோக்கினால் 'சாத்தான் வேதம் ஓதியது' போன்றது தான். கல்வி, சுகாதாரம், போக்குவரத்து போன்றவற்றை உலக வங்கியின் ஆலோசனை வழிகாட்டலின் கீழ் தனியார் மயப்படுத்திய பல மூன்றாம் உலக நாடுகளில் ஏற்பட்டுள்ள பாரிய எதிர் விளைவுகளைத் தாங்கிக் கொள்ள முடியாத நிலையிலேயே அதிலிருந்து மக்களின் கவனத்தை திசை திருப்பவே மேற்கூறிய ஞானம் பெற்ற ஆலோசனையை அறிக்கையாக வெளியிட்டுள்ளது.

இதுவரை காலமும் ஏகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்கள் கல்வி, சுகாதாரம் போக்குவரத்தில் அனுபவித்து வந்த குறைந்த பட்ச நன்மைகளையும் தனியார் மயம் தட்டிப்பறித்துக் கொண்டது. இதனால் மக்கள் விரைவாகவே தனியார் மயத்திற்கு விரோதமாக பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு வருவது நாளாந்தம் வலுவடைந்து கொண்டே செல்கிறது. இதனைத் திசை திருப்பிக் கொள்ளவே கல்வி, சுகாதாரம் போக்குவரத்தை தனியார் மயப்படுத்தக் கூடாது எனக் கண்டறிந்து அறிக்கை செய்துள்ளது உலக வங்கி.

உலக வங்கியின் இத்தகைய நிலைப்பாடு மூன்றாம் உலக நாடுகளின் வறுமையடைந்து வரும் மக்களின் மீதான அனுதாபம் காரணமானது அல்ல. அந்த மக்கள் தமக்கும் தமது முகவர்களான உள்நாட்டு ஆளும் வர்க்க சக்திகளுக்கும் எதிராகப் போராட்டங்களில் ஈடுபடுவதைத் தடுப்பதற்காகவே தான்.

இலங்கையில் கல்வி, சுகாதாரத் துறைகள் முற்றுமுழுதாக இன்னும் தனியார் மயப்படுத்தப்படவில்லை. போக்குவரத்தில் பஸ் போக்குவரத்து தனியார் மயமாக்கப்பட்டுவிட்டது. புகையிரதப் போக்குவரத்தை தனியார் மயப்படுத்த நடவடிக்கைகள் ஆரம்பித்து விட்டன. இவற்றின் மூலம் கடும் எதிர்ப்பு தொழிலாளர்கள் ஊழியர்கள் மக்கள் மத்தியில் வலுவடைந்து வருகின்றன. இந்நிலையிலேயே உலக வங்கியின் புதிய கண்டுபிடிப்பு அறிக்கையாக வெளிவந்துள்ளது. அடிப்படைச் சேவைகள் அளவிலும் தரத்திலும் தனியார்மயம் மூலமாக உழைக்கும் சாதாரண மக்களைச் சென்றடையாது என இடதுசாரிகள் மாக்சியவாதிகள் எடுத்துக் கூறினால் சகிக்கமாட்டாத சில புத்திஜீவிக் கூட்டம் இப்போது உலக வங்கி சுட்டிக் காட்டுவதைப்பற்றி என்ன கூறப் போகின்றது. என்றாலும் எஜமானர்கள் சொன்னால் அடிமைத் தனமாக ஏற்றுத் தலையாட்ட வேண்டியது தானே.

## புலிகளின்

1ம் பக்க தொடர்ச்சி..

விடைகூற முடியாத நிலையே காணப்படுகின்றது. எதிலும் இழுத்தடித்துச் செல்வதையும் அதன் ஊடாகத் தமது உள்ளார்ந்த நிலைமைகளைப் பலப்படுத்திச் செல்லும் போக்கையுமே காணமுடிகின்றது. இது அரசாங்கத் தரப்பில் மட்டுமன்றி புலிகள் பக்கத்திலும் காணக் கூடியதேயாகும்.

இதனாலேயே புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாகத்திட்ட யோசனைகளில் ஒரு இணக்கப்பாடு ஏற்படுமா? அல்லது இணக்கம் ஏற்படாது மீண்டும் யுத்தம் வெடிக்குமா? என்ற ஊகம் மக்கள் மத்தியில் கிளப்பப்படுகின்றது. ஆனால் இருதரப்பிலும் விட்டுக் கொடுப்புடனும் வடக்கு கிழக்கு மக்களின் அடிப்படை அபிலாசைகளை நிறைவு செய்யும் வகையிலும் பேச்சுவார்த்தையும் இடைக்கால நிர்வாக கட்டமைப் பிற்கான, தீர்வும் காணப்படல் வேண்டும்.

இணக்கம் காணப்படாது யுத்தம் மூளுமானால் அது உள்நாட்டு பேரினவாத ஆளும் வர்க்க சக்திகளுக்கும் வெளிநாட்டு ஏகாதிபத்திய பிராந்திய வல்லரசு சக்திகளுக்கும் வாய்ப்பான தொன்றாகவே அமைந்துவிடும். அத்தகைய நிலை வருமானால் தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி நாடுமுழுவதற்கும் அனைத்து மக்களுக்கும் நாசமும் அழிவுகளுமே வந்து சேரும். எனவே அரசாங்கம் யுத்தபாதையை நாடுவதைக் கைவிட்டு இணக்கப் பாதையில் இடைக்கால நிர்வாக கட்டமைப்புக்கு தீர்வு காண தனது முழுமுயற்சியையும் சகல தடைகளையும் தாண்டி முன்செல்ல வேண்டும். ரணில் அரசாங்கம் செல்லுமா? என்பதைச் சற்று பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

## முஸ்லீம் தனி...

1ம் பக்க தொடர்ச்சி...

எடுக்கின்ற நிலைப்பாடுகளும் செய்கின்ற பிரகாரங்களும் தமிழ் மக்கள் மீதான எதிர்ப்பாகவும் விடுதலைப் புலிகளுக்கு விரோதமாகவும் அமைந்து விடுகின்றன. அதன் விளைவாக சமாதான சூழ்நிலை குழப்பப்பட்டு விடுமோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது.

முஸ்லிம் மக்களின் விவசாயக் காணிகளை மீள அவர்களிடம் ஒப்படைக்கும் நடவடிக்கைகளும் மீளக்குடியேற்றும் நடவடிக்கைகளும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை சம்பந்தப்படுத்தாமலே கிழக்கு மாகாணத்தில் நடைபெறுகின்றன. புலிகள் நேரடியாகவே முஸ்லிம் மக்களுடனும் பள்ளிவாசல் கமிட்டிகளுடனும் தொடர்பு கொள்கின்றனர்.

அதனால் முஸ்லிம் எம்.பிக்கள் பிரசித்தம் இழந்து வருகின்றனர். சாதாரண முஸ்லிம் மக்களின் அடிப்படை பிரச்சினைகளை தீர்க்கவும் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் முஸ்லிம் எம்.பிக்கள் கையாலாகாத நிலையில் உள்ளனர்.

அதேவேளை தமிழ்த் தேசியத் தலைமைகள் அனைத்துமே முஸ்லிம் மக்கள் மீது மேலாதிக்கம் செலுத்தும் அடிப்படையிலேயே செயற்பட்டு வருகின்ற போக்கையும் காணலாம். முஸ்லிம் தலைமைகள் தமிழ் மக்கள் மீது பகையுணர்வை கொண்டவர்களாகவே காட்டிக்கொண்டு முஸ்லிம் மக்களிடையே அரசியல் நடத்துகின்றன. அதேபோன்று தமிழ்த் தலைவர்களும் முஸ்லிம் எதிர்ப்பை வளர்த்துக் கொண்டே தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் நடத்தப் பார்க்கின்றனர்.

அடிப்படையில் தமிழ் முஸ்லிம் தேசியவாத நிலைப்பாடுகள் பாராளுமன்ற அரசியலுக்கு தீனிபோடும் சுவையான உணவு போன்றதேயாகும். ஆனால் இரு தரப்பினரும் பேரினவாத ஆளும் வர்க்க ஒடுக்குமுறையாலும் அந்நிய ஏகாதிபத்திய சக்திகளின் ஆதிக்கத்தாலும் நசுக்கப்படுவதைப் பற்றி தமிழ் முஸ்லிம் தலைமைகள் அக்கறைப்படுவதில்லை. இவ்விரு தலைமைகளும் நேரடியாகவும் மறைமுகமாகவும் பரஸ்பரம் தமிழ் முஸ்லிம் விரோதப் பேச்சுக்களையும் பிரசாரங்களையும் மிக உச்சத் தொனி உணர்ச்சி மிக்கதாகவே செய்து கொள்வதைக் காணமுடிகிறது.

எனவே முஸ்லிம்கள் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் அவர்களது தனித்தரப்புக் கோரிக்கை நியாயமானதாகும். அதேவேளை அதனைத் தமது உயர்வர்க்க சொத்து சுகபோகத் தேவைகளுக்கான அரசியல் காயாகப் பயன்படுத்த முற்படுவது முஸ்லிம் மக்களுக்குச் செய்யும் அரசியல் துரோகமாகும். அதேவேளை தமிழ்த் தலைமைகள் முஸ்லிம் மக்களை அரவணைத்து ஐக்கியமாக முன்செல்வதில் முழு அக்கறையையும் செலுத்த வேண்டும். பழைய ஆதிக்க கண்ணோட்டத்தைக் கைவிட்டு தமிழ் முஸ்லிம் ஐக்கியம் கட்டியெழுப்பப்படல் வேண்டும்.

வெளியிடுபவர் : இ. தம்பையா. இல. 47. 3ம் மாடி. கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: கொம்பிரின்ட். 334A, K. சிறில் சி. பெரேரா மாவத்தை. கொழும்பு 13.

படிப்பகம்